# நனிகமழ்

## 2018



கிளி/ ஐயனார்புரம் அ.த.க. பாடசாலை
வன்னேரிக்குளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நனிகமழ்

# 2018

## கிளி/ ஐயனார்புரம் அ.த.க.

## பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளி/ஐயனார்புரம் அ.த.க.பாடசாலை,
வன்னேரிக்குளம்.

## பரிசளிப்பு விழாவும்
## 'நனிகமழ்' நூல் வெளியீடும்

# அழைப்பிதழ் -2018

காலம் : 17.10.2018
( புதன்கிழமை)
நேரம் : பி.ப 1.00 - 5.30 மணி
இடம் : கிளி / ஐயனார்புரம்
அ.த.க. பாடசாலை

**தலைமை**
திரு.த.டேவிட் கிஸ்காட்
(பாடசாலை முதல்வர்)

**பிரதம விருந்தினர்**
பேராசிரியர் திரு.எஸ்.சிவலிங்கராசா
(முன்னாள் தமிழ்த்துறைத்தலைவர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

திருமதி. ச. சிவலிங்கராசா

**சிறப்பு விருந்தினர்கள்**

பேராசிரியர் கி. விசாகரூபன்
(தலைவர்,தமிழ்த்துறை,கலைப்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

திரு. ப. அருந்தவச்செல்வம்
(பிரதிக்கல்விப்பணிப்பாளர்,திட்டமிடல்,
வலயக்கல்விப்பணிமனை,கிளிநொச்சி)

திரு. அ.கிருபாகரன்
(உரிமையாளர்,கிருபா லேணர்ஸ்)

Dr. ச.முருகானந்தம்
திருமதி.ச.முருகானந்தம்

**கௌரவ விருந்தினர்கள்**

அருட்பணி. சு. அ. செபஸ்ரியன்றெவல் (அமதி)
(பங்குத்தந்தை அக்கராயன்குளம்)

திரு. தி. சிவரூபன்
(ஆசிரிய ஆலோசகர் - வர்த்தகம்,
வலயக்கல்விப் பணிமனை, கிளிநொச்சி)

திரு.பு.சுஜந்தன்
(கிராம அலுவலர்)

செல்வி.டேசுனா முருகேசு
(இணைப்பாளர்,SJC 87. Initiative)

## இந்நிகழ்வில் தங்களையும்
## அன்புடன் அழைக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசளிப்பு விழாக்குழு

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு. த. டே. கிஸ்காட் (அதிபர்) |
| உ_தலைவர் | : | திருமதி. ச. பாலச்சந்திரன் (பிரதி அதிபர்) |
| செயலாளர் | : | திருமதி. சு. கேதீஸ்வரநாதன் |
| பொருளாளர் | : | திருமதி. தே. சபாரட்ணம் |
| இதழாசிரியர்கள் | : | திருமதி. க. லங்கரூபன் |
| | | அருட்சகோதரி தி. வெனிக்கலாமேரி |
| | | திரு. ஆ. விஜயகுமார் |
| | | திரு. அ. கணேசராசா |
| தெரிவுக்குழு | : | திருமதி. ச. ஜெலாஸ் |
| | | திரு. செ. செவ்வேள் |
| | | திரு. சி. சிவரூபன் |
| | | செல்வி. போ. நிலானி |
| | | திருமதி. க. விஜயசுந்தரம் |
| | | செல்வி. நா. பத்மகௌரி |
| கலைக்குழு | : | செல்வி. பி. மேரிஜேக்குலின் |
| | | செல்வி. வ. வதனி |
| | | திருமதி. சி. பரமேஸ்வரி |
| | | செல்வி. வி. ரஜனி |
| | | திரு. க. வசந்தராஜா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை கீதம்

வன்னேரி ஐயனார்புர வித்தியசாலை
வளர் பள்ளி வாழிய ஓங்கி
அரிகரன் புத்திரன் மரியவள் காப்பில்
கலை கல்வித் துறை வளம் ஊட்டி
அரிவரி உணர்வுகள் திறன் பல ஊட்டி
வான் புகழ் கழகமாய் ஏற்றி (2)

தாய் தமிழ், ஆங்கிலம், அறிவியல் கணிதம்
தத்தமை தொழில்களில் தேர்ச்சி
வாழ்த்து மாணாக்கர் நலம் பொழில் வாழ்வு
மானிடர் வழிசெய்யும் பணியில்
மாணவர் மகிழ்ந்கலைக் கழகம்
இந்த வன்னியின் புகழ் வளர் கழகம் முதல்வர்
குரவர் பெற்றோர்களின் இதயம்
குரவர் பெற்றோர்களின் இதயம்

வன்னேரி ஐயனார் புர வித்தியசாலை
வளர் பள்ளி வாழிய ஓங்கி (2)

## MISSION: பணிக்கூற்று

**தேர்ச்சி, ஆற்றல், விழுமியப் பண்புகளை வளர்ப்பதனூடாக வினைத்திறன் மிக்க மாணவர் சமூகத்தை உருவாக்குவோம்.**

## VISION: தூரநோக்கு

**தரமான கல்வி மூலம் அறிவு, திறன், மனப்பாங்கு, புரிந்துணர்வு போன்ற பண்புள்ள சமூகத்தைக் கட்டியெழுப்புதல்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே
வானமளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே

ஏழ்கடல் வைப்பினும் தண் மணம் வீசி
இசைகொண்டு வாழியவே
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லை அகன்று
சுடர்க தமிழ்நாடே

வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ் மொழியே
வானம் அறிந்த தனைத்தும் அறிந்திடும்
வளர்மொழி வாழியவே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியரிடமிருந்து....



எம் பாடசாலை 21ஆம் அகவை பூர்த்தியை கொண்டாடும் இப்பரிசளிப்பு விழாவில் "நனிகமழ்" நூல் வெளியீடு செய்வது மிக்க மகிழ்ச்சியான விடயம். 'நன்கு மணம் வீசு' எனப் பொருள் பொதிந்த இம்மலர் மாணவர்கள், ஆசிரியர்கள், கல்வியலாளர்களின் படைப்புக்களை தாங்கி வருகின்றது. இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி என்பது போல கால வேகத்தின் மாற்றத்துக்கேற்ற நல்ல சமுதாயம் உருவாக நல்ல படைப்புக்கள் இதில் பொதிந்துள்ளன. ஆக்கம் படைப்பதனூடாக எழுத்தாற்றல், சிந்தனை விருத்தி, விழுமியம்சார் தேர்ச்சி என்பவை வளரும். அத்துடன் நல்ல ஒரு சமுதாய உருவாக்கத்தில் படைப்புக்களின் பங்கு மிக உயர்ந்தது. அவ்வகையில் இந்நூலில் உள்ள படைப்புக்கள் யாவுமே ஒரு சமூகம் விழித்தெழுந்து, மாற்றம் பெற்று கல்விப் புலமையுடையவர்களாக மிளிர இந்நூல் கைகொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

சிறந்த பாடசாலையின் வளர்ச்சி சமூகமும் பாடசாலையும் இணைந்த செயற்பாடுகளில் தங்கியுள்ளது. இணைப்பாடவிதான அங்கமான பரிசளிப்பு விழாவும் இதழ் வெளியீடும் மாணவர் பெற்றோர் ஆசிரியரது சமூக உறவை ஏற்படுத்தும். அவ்வகையில் நூலுக்கு வாழ்த்துரைகள் ஆக்கங்கள் விளம்பரங்கள் தந்துதவிய அனைவருக்கும், நூலாக்கித் தந்த ஸ்ரீ மாருதி அச்சகத்தினருக்கும் மலர்க்குழு சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இதழாசிரியர்**
**திருமதி. க. லங்கரூபன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

கிளி/ ஐயனார்புரம் அ.த.க பாடசாலை தனது வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை பதிவு செய்கின்றது. அப்பதிவு ஒரு நூலாக வெளிவருகின்றது என்பதை அறிந்து மிகுந்த மகிழ்ச்சி அடைவதோடு, அவர்களுக்காக இறையருளை வேண்டி நிற்கின்றேன்.

இப் பாடசாலையின் வரலாறு அண்மைய வரலாறாக இருக்கின்ற போதிலும், அதன் வரலாற்று பக்கங்கள் கனதியானவை, அமைதியானவை, அழகான பக்கங்கள், இந்த அழகும் வனப்பும், நிறைந்த ஒரு பாடசாலை சமூகத்தின் வரலாற்றின் நானும் இணைகின்றேன் என்பது எனக்கு கிடைத்த ஓர் வரம்...

வரம் பெற்ற சமூகமாய் இப் பாடசாலை மிளிர்வதற்கு காரணம் அதன் அதிபரும், ஆசிரியர்களும், நீண்ட நெடிய தரிசனங்களோடும், நம்பிக்கைகளோடும் ஒரு சமூகத்தை தூக்கி நிறுத்திவிட வேண்டும் என்ற கனவுகளோடு இங்கே சிறகு விரித்து நிற்கின்றது.

இந்த சிறகுகளுக்குள் அடைகாக்கப்பட்ட முட்டைகளில் இருந்து வெளிவந்த குஞ்சு களை அலையலையாய் பாய்ந்து வரும் நதியாய் ஊற்றெடுத்து ஓடிவரும் மாணவச்சமூகத்தின் தூய்மையான மனங்களில் இருந்து எழுந்து வரும் சிந்தனைகளே “நனிகமழ்” என்ற நூலாக மலர்கின்றது.

மலரும் வரலாறு வாசனையோடு நடை போடட்டும், உலகமே உங்களை திரும்பிப் பார்க்கட்டும், இந்த அழகான காலத்தின் வாசனைக்காய் காத்திருக்கும்.

**வண. T.S. யோசுவா**
**இயக்குனர்**
**காவேரி கலா மன்றம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி

இந்த நாட்டின் எதிர்கால நல்லொழுக்க கல்வி மான்களை உருவாக்கும் பாரிய பணி பாடசாலைகளிடமே ஒப்படைக்கப்படுகிறது. மாணவர்களுக்கு கல்வியுடன் கலைகளும், விழுமிய நற்பண்புகளுடன் கூடிய ஆளமையை விருத்தி செய்ய பாடசாலை அளப்பெரிய உதவி புரிகிறது.

அந்த வகையில் எமது கிராமத்தில் இப்பாடசாலை அமைந்தது, இறைவன் எமக்களித்த ஓர் அற்புத வரமாகும். இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட தினத்தினை பரிசளிப்பு தினமாக கொண்டாடி வரும் இந் நாளிலே "நனிகமழ்" நன்நூலானது மாணவர்களின் கலைத்திறனை வெளிப்படுத்தி நிற்கின்றது.

இந்நூலில் ஆற்றுகைகளை வெளிப்படுத்திய மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், கல்வி மான்களுக்கும் எம்பெருமானின் நல்லருள் கிடைக்க வேண்டுவதோடு "நனிகமழ்" எனும் மலர் மிகச் சிறப்புடன் வெளிவர எனது நல் ஆசிகளை வழங்கி வாழ்த்துகின்றேன்.


நன்றி

**திருக்குமரன் ஐயா,**
**ஆலய பூசகர்,**
**வன்னேரிக்குளம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



வன்னேரிக்குளம் ஐயனார்புரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை வெளியிடும் **"நனிகமழ்"** எனும் மலருக்கு வாழ்த்துச் செய்தி தருவதிலே மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இயற்கை கொலுவிருக்கும் வன்னேரிக்குளச் சூழல் மிகவும் இரம்மியமானது. கிளிநொச்சி மாவட்டத்தின் அழகான பகுதிகளிலே வன்னேரிக்குளமும் ஒன்று. நீர்ப்பாசன வசதி நிறைந்ததாக இருந்தமையால் நெல் வயலோடு பயன்தரு பழமரங்களும் செழிப்புப் பகுதியாக வன்னேரிக்குளம் திகழ்ந்தது.

இற்றைக்கு நாற்பது ஆண்டுகளுக்கு முன் இப்பகுதியிலே வாழ்ந்தவன் நான். கடின உழைப்போடு கண்ணியமாக வாழ்ந்த ஒரு பகுதி. கொடிய யுத்தத்தின் பிடியால் எம் கண்முன்னாலேயே சிதைந்து போனது. வன்னேரி பொன்னேரி ஆகவேண்டும் என்று டாக்டர் ச. முருகானந்தன் ஒரு சிறுகதை எழுதினார். அவரின் கனவு இனிமேற்தான் பலிக்கப்போகின்றது.

நல்ல ஆற்றலுள்ள அதிபர், அறிவும், ஊக்கமும் உள்ள ஆசிரியர்கள் இப்பாடசாலையிலே பணியாற்றுவதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். வடக்கின் சுற்றுலா மையங்களில் ஒன்றாக வன்னேரிக்குளம் விளங்குகின்றது. சுற்றுலா மையத்திற்கான செயற்பாடுகள் ஓரளவுக்கு நடைபெற்ற போதிலும் பூரணமாக முழுமையாக அவை நடைமுறைப்படுத்தப் பட்டாற்தான் நாடு செழிக்கும். மக்களும் பயனடையவர். உரியவர்கள் அதற்கான பணிகளை முன்னெடுப்பர் என நம்புகிறோம்.

இந்தப் பாடசாலையில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் கல்விப் பணியிலே ஈடுபட்டுள்ள அதிபர் ஆசிரியர்களைப் பாராட்டுகிறோம். வீதி அபிவிருத்தியும் போக்குவரத்தும் சிறப்பாக இருந்தால் ஊர் தானாகவே முன்னேறும் என்பார்கள். உரியவர்கள் இதனைச் செய்ய வேண்டுமென்று ஊர் மக்கள் ஊக்கமாகச் செயற்படவேண்டும்.

கல்வியே பிரதானம் என்ற கருத்துநிலை இவ்வூர் மக்களிடம் சுவர வேண்டும். கல்வி சிறந்தால் மற்றவை யாவுமே சிறப்பாக அமையும். எல்லாம் சிறப்புடன் அமைய வாழ்த்துகிறோம்.

**பேராசிரியர் சி. சிவலிங்கராஜா**
**முன்னாள் தமிழ்த்துறைத்தலைவர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குத்தந்தையின் ஆசியுரை....

எமது உணர்வுகளையும் சிந்தனைகளையும் பல்வேறு விதங்களில் நாம் வெளிப்படுத்திக் கொண்டேதான் இருக்கின்றோம். அந்த வகையில், எமது தமிழ் இலக்கிய எழுத்துருக்கள் நம் சிந்தனைகளின் உணர்வுகளை அழகுற வெளிப்படுத்த பெரும் பங்களிப்புச் செய்கின்றன. இது நம் தாய் மொழியான தமிழ் மொழியின் தனித்துவமாகும்.

"நனிகமழ்" நூலை பாடசாலையினுடைய மாணவர்களின் பலதரப்பட்ட திறமைகளூடாக வெளிக்கொணருகின்ற இந்த நூலின் மூலம் இன்னும் பல மாணவர்கள் வாசிப்பதன் மூலம் பயன்பெறவும் தமது கல்வியில் இன்னும் முன்னேறிச் செல்ல இந்நூல் ஓர் உந்து சக்தியாக அமைய வேண்டுமென்று வாழ்த்தி நிற்கின்றோம்.

இந்நூல் வெளிவருவதற்கு அயராது பாடுபட்டு உழைத்த அதிபர், ஆசிரியர்கள் மாணவர்கள் அத்தனை பேரையும் வாழ்த்துகின்றோம்.

கிளி/ ஐயனார்புரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை சமூகம் எடுக்கின்ற எல்லா முயற்சிகளும் வெற்றி பெற இறை ஆசீர் வேண்டி நிற்கின்றோம்.

**தமிழை வளர்ப்போம் தமிழராய் வாழ்வோம்.**

அருட்பணி செபஸ்ரியன் றெவல் அ.ம.தி
பங்குத்தந்தை
புனித மரியாள் ஆலயம்,
அக்கராயன், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி/ ஐயனார்புரம் அ.த.க பாடசாலையின் பரிசளிப்பு விழாவும் 21ம் ஆண்டு நிறைவும்



கிளி/ ஐயனார்புரம் அ.த.க பாடசாலை கிளிநொச்சி வலயத்தின் வசதி வாய்ப்புக்கள் மிகவும் குறைந்த ஒரு கிராமத்தின் சொத்தாகும். யுத்தம் கடுமையாக நடந்து கொண்டிருந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு பல சவால்களுக்கு மத்தியில் இன்று சாதனை படைக்கும் ஒரு பள்ளியாக வளர்ந்து வருவது பாராட்டுக்குரியது. பொருளாதார நிலையில் பின்தங்கியிருந்த கிராமம், போக்குவரத்து வசதிகள் மிகக்குறைந்த கிராமம். எனினும் இங்கு வாழ்கின்ற மக்களின் மனங்கள் பலமானவை. தமது கிராமத்தில் ஒரு பாடசாலை நிறுவப்பட வேண்டும் என அவர்கள் கொண்டிருந்த ஆர்வமும் தொடர்ந்து அது வளர வேண்டும் என்று அவர்கள் காட்டுகின்ற முனைப்பும் பாராட்டுக்குரியது.

ஆரம்பப்பிரிவு பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டு இன்று 11ம் தரம் வரை உயர்ந்து நிற்கும் இப் பாடசாலைக்காக அந்த மக்களும் தொடர்ந்து சேவை புரிந்த பல அதிபர்களும் ஆசிரியர்களும் அயராது பாடுபட்டிருக்கின்றார்கள். அவர்கள் எல்லோரும் பாராட்டுக்குரியவர்கள்.

ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையிலும் சாதாரண தரத்திலும் நிறைந்த பெறுபேறுகளைப் பெற்று முன்னிலைக்கு வரத்தொடங்கியிருக்கின்றது. இப் பாடசாலை இக்கிராமத்து மக்களின் கல்வித் தரமும் வாழ்க்கைத்தரமும் உயர்ந்து நிற்கின்றது.

21 ஆண்டுகளை நிறைவு செய்து இன்று பரிசளிப்பு விழாவைக் கொண்டாடுகின்ற இப் பாடசாலையின் வளர்ச்சியை வாழ்த்துவதிலே பெருமையடைகின்றேன்.

இப் பாடசாலையில் தற்போதைய அதிபரும் ஆசிரியர்களும் இதன் வளர்ச்சிக்காகத் தம்மை அர்ப்பணித்து செயல் முனைப்புடன் பணியாற்றுகின்றமை வரவேற்கத்தக்கது. வரலாற்றுப் பதிவாகவும் மாணவச் செல்வங்களின் ஆக்கங்கள் தாங்கியும் வெளிவருகின்ற இந்த மலர் சிறப்புற அமையவேண்டும் என வாழ்த்துகின்றேன்

நகர்ப்புறத்துப் பாடசாலைகள் போன்று இப்பாடசாலை தன்னை மெருகூட்டி வருகின்றமை பெருமைக்குரியது. இங்கு வாழ் மக்களையும் பாடசாலைச் சமூகத்தையும் மனமார வாழ்த்துவதால் மகிழ்ச்சிடைகின்றேன்.

**திரு. ஜோன் குயின்ரஸ்**
**வலயக்கல்விப் பணிப்பாளர்**
**வலயக்கல்வி அலுவலகம்**
**கிளிநொச்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நனிகமழ்" கடிகமழ வாழ்த்துகின்றேன்

எமது பிரதேச செயலக பிரிவின் கிளி/ ஐயனார்புரம் அ.த.க பாடசாலை தமது வருடாந்த பரிசளிப்பு விழாவை முன்னிட்டு "நனிகமழ்" என்னும் இதழினை வெளியிடுவதையிட்டு நான் பெருமகிழ்வடைகின்றேன்.

பாடசாலை மாணவர்களுடைய அறிவு, ஆற்றல், உளப்பாங்கு, விருத்தி, மற்றும் ஆக்கத்திறன் போன்ற பல்வேறு ஆளுமைக் கூறுகளை வளர்த்தெடுப்பதில் பாடசாலையின் பங்கு அளப்பரியது. அவ் வகையில் மாணவர் தம் ஆற்றலுணர்ந்து, அவர்களது திறமைகளை மெருகேற்றும் வகையில் பரிசளிப்பு விழாக்கள் நடைபெறுவது மிகவும் விரும்பத்தக்கது.

கிராமப்புற பாடசாலையாக இருந்தாலும் கூட மாணவர்தம் அறிவுத்தேடலை ஊக்குவிக்கும் முகமாக ஐயனார்புரம் அ.த.க பாடசாலையில் நடைபெறவிருக்கும் பரிசளிப்பு விழா சிறப்புற அமைய வாழ்த்துகின்றேன்.

மேலும் குறித்த பளிசளிப்பு விழாவினை முன்னிட்டு "நனிகமழ்" என்னும் மலர் வெளியிடுவது சாலப்பொருத்தமானது. விழாக்கள், விழா நடைபெறும் அன்றே நிறைவடைந்து விடும், ஆனால் வெளியிடப்படும் மலர்கள் நீளநின்று நினைவூட்டி நிற்கும். அவ்வகையில் "நனிகமழ்" எம் பிரதேசத்திற்கு கடிமணம் பரப்பவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**த. முகுந்தன்**
**பிரதேச செயலாளர்**
**கரைச்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



கிளிநொச்சி ஐயனார்புரம் தமிழ்க்கலவன் பாடசாலை தனது 2018ம் ஆண்டு பரிசளிப்பு விழாவினையொட்டி **"நனிகமழ்"** என்ற இதழினை வெளியீடு செய்வது குறித்து நான் மகிழ்ச்சியடைகின்றேன். பாடசாலை மட்டத்தில் வெளிவருகின்ற இவ்வாறான இதழ்கள் மாணவர்களுடைய பல்துறைசார் ஆளுமைகளை வெளியிடுவதற்கு களமாக அமைவதோடு, மாணவர்களுக்கு பயனுடைய சில விடயங்களை எழுதுவதற்கான வாய்ப்பினை ஆசிரியர் களுக்கும் வழங்கி நிற்கின்றது.

இந்தப் பாடசாலையின் அதிபர் திரு. டேவிட் கிஸ்காட் மற்றும் இதழுக்கான பொறுப்பாசிரியருடைய மேற்பார்வையில் "நனிகமழ்" பல்வேறு வகையான பயனுடைய ஆக்கங்களைத் தாங்கி வெளிவருவது மகிழ்ச்சியைத் தருவதாக அமைகின்றது. இன்று போலவே என்றும் 'நனிகமழ் தொடர்ந்தும் மணம்வீச எல்லாம்வல்ல நயினை நாகபூசணி அம்பாளைப் பிரார்த்திப்பதோடு, அதிபர் உள்ளிட்ட பாடசாலைச் சமூகத்திற்கும் என்னுடைய உளம் நிறைந்த வாழ்த்துக்களை மனதாரக் கூறிக்கொள்கின்றேன்.

-நன்றி-

**பேராசிரியர் கி. விசாகரூபன்**
**பேராசிரியர், தமிழ்த்துறை,**
**கலைப்பீடம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



பச்சைப்பசேல் என விளங்கும் பசுஞ்சோலைகளின் நடுவே ஆலயங்களின் அருளாட்சியும் பெற்று வளர்ந்து வரும் பாடசாலையில் ஐந்து இரண்டு வருடங்களாக கடமையாற்றுவதில் பெருமிதம் கொள்கின்றேன்.

எம் மாணவர்கள் பல்வேறு துறைகளிலும் ஆளுமை மிக்கவர்களாகவும், சமூகத்தில் நற்பிரஜைகளாகவும் மிளிர செய்யும் எமது அதிபர், சக ஆசிரியர் குழாத்தின் சேவை அளப்பெரியது.

இக்கல்விச்சாலை மென்மேலும் எல்லாத் துறைகளிலும் வளர வேண்டு மென அயராது பாடுபடும் அதிபர், சக ஆசிரியர்களைப் பாராட்டுவதோடு, இப் பரிசளிப்பு விழாவும் நடைபெறுவதை முன்னிட்டு மட்டற்ற மகிழச்சி அடைவதோடு, மாணவர்களின் ஒற்றுமை, ஆளுமை, நற்பழக்க வழக்கத்துடன் கல்விக் கூடமும் பெருவிருட்சமாக வளர எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

நன்றி

**திருமதி.ச.பாலச்சந்திரன்**
**உதவி அதிபர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் அறிக்கை



இயற்கை எழில் நிறைந்த கிராமத்திலே ஐயனும், மரியும் நல் ஆசிகளை வழங்கிக் கொண்டிருக்கும் இனிய மாலைப்பொழுதினிலே எமது பரிசளிப்பு விழாவிற்கு வருகை தந்திருக்கும் கல்வி மான்களே, பெரியோர்களே, அயற் பாடசாலை அதிபர்களே, ஆசிரியர்களே பெற்றோர்களே, பழைய மாணவர்களே, மாணவர்களே, நலன் விரும்பிகளே அவைருக்கும் இந்நேர வணக்கங்கள்.

கிளி/ ஐயனார்புரம் அ.த.க பாடசாலையின் 21ம் ஆண்டு நிறைவையும் பரிசளிப்பு விழாவினையும் வெகு சிறப்பாக கொண்டாடுவதையிட்டு மகிழ்வடைகின்றேன். போட்டிகள் நிறைந்த இந்த கல்வி உலகினை வெல்வதற்கு மாணவர்களை ஊக்கப்படுத்துவதற்கு இவ்விழா உதவும் என்பதில் ஐயமில்லை. எமது பாடசாலையில் ஆரம்பப்பிரிவில் 128 மாணவர்களும் இடைநிலைப்பிரிவில் 166 மாணவர்களும் கல்வி பயின்று வருகின்றனர். கஸ்டப்பிரதேசமாக இவ்விடம் விளங்கிய போதிலும் கல்வியில் வளமும்,வளர்ச்சியும் பெற்று வருவது கண்கூடு.

எமது பாடசாலையில் 2018ம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டிகள் சிறந்த முறையில் இடம் பெற்றது. நிகழ்வு சிறக்க உதவிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதேபோல எமக்கு நிரந்தர நூலகக்கட்டிடம் இல்லாத போதிலும் தற்காலிக மாகவேனும் நூலக செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு உதவிய அமரர் வீரசிங்கம் ஆறுமுகநாதன் அவர்களின் ஞாபகார்த்த நிதி உதவி மூலம் நூலகம் இல்லை என்ற குறை ஓரளவு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்தும் இவ்வுதவியைச் செய்ய முன்வந்தமையிட்டு சமூகம் சார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு இவ்வளம் எமக்கு கிடைக்க உதவிய தி. வரதன் (அதிபர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி) அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நவீன கற்றல் நுட்பங்கள் வளர்ந்து வரும் இவ்வேளையில் எமது பாடசாலையில் கணினி அறை இல்லாத போதிலும் தற்காலிகமான ஏற்பாடுகள் செய்யப்பட்டு மாணவர்கள் பல்லூடகத்தில் கற்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. எமது பாடசாலையில் மாணவர்களின் நலன்கருதி மேலதிக வகுப்புக்கள் செயலமர்வுகள் நடாத்துவதற்கு பல நிறுவனங்கள் உதவியுள்ளன. நரோ நிறுவனம், SJ-87 என்பவற்றைக் குறிப்பிடலாம். இவ் வேளையில் அவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதேபோல் எம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையில் கணித, விஞ்ஞான பாடத்தின் சித்தி வீதத்தினை உயர்த்தும் பொருட்டு மாலைநேர வகுப்பினை நடாத்த உதவும் ஏடு நிறுவனத்திற்கும் எம் மனமார்ந்த நன்றிகள். எமது பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டி(2) வழங்கி உதவிய உதயம் நிறுவனத்திற்கும் நன்றிகள்.

எமது பாடசாலை சூழலைப்பாதுகாக்கும் பொருட்டு பாடசாலைக்கு சுற்றுமதில் கட்டுவதற்கான நடவடிக்கைகளை கரைச்சி பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. இம் மதில் அமைப்பதற்கான உதவியினை நல்கிய நன்னீர் மீன்பிடிப்பு அமைப்பின் அனுசரணைக்கும் இவ்வேளை மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். எமது பாடசாலைத் தோட்டத்திற்கான தோட்டவேலி அமைத்தலுக்கான நிதி உதவியினை வழங்கிய மாகாண சபை உறுப்பினர் கௌரவ சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை அவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எமது பாடசாலையின் கல்வி வளர்ச்சி பற்றி நோக்கும்போது 2017ம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 56% மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தி யடைந்துள்ளனர். 2018ம் ஆண்டு தரம் 05ல் புலமைப்பரிசில் பரீட்சையில் 78% மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர். வெட்டுப்புள்ளியான 163ஐக் கடந்து ச. டிலக்சன் (182) கே. துஷாதனன் (171) ஆகிய இருவரும் சித்தியடைந்துள்ளனர். இவர்களை வழிப்படுத்திய ஆசிரியர்களுக்கும் அதேபோல் 2017ம் ஆண்டு O/L சித்தி வீதம் பின்வருமாறு தமிழ் 64%, கணிதம் 52%, விஞ்ஞானம் 44%, வரலாறு 44%, சைவம் 62%, R.C 75%, புவியியல் 66%, சித்திரம் 92%, சங்கீதம் 100%, விவசாயம் 44%, சுகாதாரம் 100% என்றவாறு அமைந்துள்ளது. எமது பாடசாலையில் 18 ஆசிரியர்களும் கடமையாற்றி வருகின்ற போதிலும் வரலாறு, விவசாயம், உடற்கல்வி, கணிதம், சைவநெறி, செயன்முறை தொழில் நுட்பம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்களின் தேவை அவசியமாகவுள்ளது. மேலும் பௌதீக வளங்கள் என்ற அடிப்படையில் நூலகம், கேட்போர் கூடம், பூங்கா, திறன் வகுப்பறை, விஞ்ஞான அறை, கணினி அறை, செயற்பாட்டறை, அலுவலகம், ஆசிரியர் விடுதிக்கான மின்னிணைப்பு, பாடசாலைக்கான கிணறு என்பனவும் நிறுவ வேண்டியுள்ளது.

தமது சிரமங்களையும் பாராது எமது நிகழ்வுக்கு கலந்து கொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**அதிபர்**
**திரு. த. டே. கிஸ்காட்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பாடசாலை ஆசிரியர் குழாம் - 2018




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளணி விபரம் - 2018

| | | |
|---|---|---|
| 1) | திரு. த.டே. கிஸ்காட் | SLPS III<br>BA.MA. (Hon) PGDE |
| 2) | திருமதி. ச. பாலச்சந்திரன் | SLTS 2 - I |
| 3) | திருமதி.தே.சபாரத்தினம் | SLTS - I B.Com Spe |
| 4) | திருமதி. ஜெ.சகாயமலர் | SLTS 2 - I |
| 5) | திருமதி.க.லங்களூபன் | SLTS 2 - I |
| 6) | திருமதி. சு.கேதீஸ்வரநாதன் | SLTS 2 - II B A |
| 7) | திரு. செ. செவ்வேள் | SLTS 3 - I |
| 8) | திருமதி. நி. ஐங்கரன் | SLTS 3 - I |
| 9) | திருமதி. க.விஜயசுந்தரம் | SLTS 3 - I |
| 10) | செல்வி. பி. மேரி ஜேக்குவின் | SLTS 3 - I |
| 11) | அருட்சகோதரி தி. வெனிக்கலாமேரி | SLTS 3 - I |
| 12) | திரு. ஆ. விஜயகுமார் | SLTS 3 - I |
| 13) | திரு. அ. கணேசராசா | SLTS 3 - I |
| 14) | செல்வி. நா. பத்மகௌரி | SLTS 3 - I Bsc |
| 15) | திரு. சி. சிவரூபன் | SLTS 3 - I B A |
| 16) | திரு. ந. வீரபாண்டியதாஸன் | SLTS - I |
| 17) | செல்வி .வி. ரஜனி | SLTS 3 - II |
| 18) | செல்வி வ. வதனி | SLTS 3 - II |
| 19) | திருமதி. ப. சிவராசா | SLTS 3 - II |
| 20) | திரு. க. வசந்தராசா | OES |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறப்பு பரிசு பெறுவோர்

## 2017ம் ஆண்டு க. பொ.த சாதாரணப் பரீட்சையில் சித்தி பெற்றோர் விபரம்

1) அ. தமிழ்வாணன்

2) இ. இசைநிலா

3) வ. தர்சனா

4) ஜெ. தமிழிசை

5) கி. கிருசாந்தி

6) இ. டிலக்சிகா

7) றெ. அனோசுகன்யா

8) அ. கனிவிழி

## சிறப்பு பரிசு பெறுவோர்

## 2018ம் ஆண்டு தரம் 5 புலமைப் பரீட்சையில் சித்தி பெற்றோர் விபரம்

ச. டிலக்சன் 182

கே. துஷாந்தன் 171

**100புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்**

| | | |
|---|---|---|
| 1) | ரா. யாழவன் | 136 |
| 2) | ஜீ. எழில்டெய்சி | 130 |
| 3) | ச. லோபிதன் | 126 |
| 4) | வி. பரணிகா | 126 |
| 5) | ஜெ. கவர்ச்சிகா | 118 |
| 6) | பி. அக்ஷயா | 114 |
| 7) | கி. துவிகன் | 113 |
| 8) | மோ. யதுசிகா | 108 |
| 9) | ஜெ. மதுநிலவன் | 108 |
| 10) | ச. கிறேஸ்யா | 104 |
| 11) | ம. கதிர் | 104 |
| 12) | ஜெ. மதுமிதா | 102 |
| 13) | ஜெ. தமிழ்செல்வன் | 101 |

**2012ம் ஆண்டு தரம் 5 புலமைப்பரீட்சையில் சித்தி பெற்றோர்.**

1) கோ. அன்பரசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த.சாதரரண பரீட்சையில்
## சித்தி பெற்றோர் - 2017




## எமது பாடசாலையின்
## இசைவாத்தியக் குழுவினர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலமைப்பரிசில் சிறப்புப்பரிசு பெறுவோர் - 2018



கே.துஷாதனன் (171)
2018



ச.டிலக்சன் (182)
2018

## புலமைப்பரிசில் சிறப்புப்பரிசு பெறுவோர் - 2012



கோ.அன்பரசி
2010

## புலமைப் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் - 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசில் பெறுவோர் - 2018 ஆரம்பபிரிவு




## பரிசில் பெறுவோர் - 2018 இடைநிலைப்பிரிவு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசில் பெறுவோர் - 2018 இடைநிலை பிரிவு




# மாணவர் தலைவர்கள் - 2018




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் - 2018

பாடசாலையின் சில பதிவுகள்


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசு பெறுவோர் விபரம் – 2018

## தரம் 1

1) ஐ. சங்கவி
2) த. நாகரூபன்
3) மு. பிரியங்கா
4) வி. சன்சிகா
5) சா. காயத்திரி
6) ஓ. தாரிஷா
7) ஜெ. பவிசன்
8) கொ. அபிஷேக்
9) நி. பூமிஷா
10) ச. அனுசிகா

## தரம் 2

1) செ கோகிலன்
2) த. கவிசனா
3) கி. சதுர்சிகா
4) து. சபிதன்
5) ச. தேனுகா
6) ச. நிம்ரோத்
7) அ. அபிஷாஜினி
8) வி. ருஷா
9) ர. லக்சனா
10) சி. நிஷாந்தினி

## தரம் 3

1) த.தர்சிகா
2) க.கிறேசியன்
3) இ.டசிந்தன்
4) ஜெ.கம்சிகா
5) நா.ஜானுசா
6) அ.கிறிஸ்ரிகா
7) மோ.நிக்சன்
8) நா.விஜிதினி
9) யோ.கிரிதரன்
10) ந.நர்மதா
11) பி.டிலைக்சன்

## தரம் 4A

1) வி.அபிராமினி
2) நி.சமிதா
3) அ.டெல்சி
4) தி.துஸ்யந்தினி
5) ரூ. சகிரா
6) த.ரிசிபன்
7) கே.டிலக்ஷன்
8) வி.ஜினுசியா
9) கு.தரனிகா
10) சு.ஹபிலினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் 4B

1) ரா.சாள்ஸ் பேர்ஜன்
2) சு.விதுஷாந்
3) ப.அபி
4) கோ.கோபிகா
5) க.பிரிந்தன்
6) ப.பவிசன்
7) ச.கிஷாந்
8) இ.டிலக்சன்
9) ச.பத்மிகா
10) ச.அபிசன்

## தரம் 5

1) இ. டர்சிகன்
2) தி. தூயவன்

## தரம் 6

1) வி. தயானி
2) செ. கனிஸ்ராமேரி
3) நா. அபிநயா
4) ஜெ. டனுயன்
5) இ. டர்சாளினி
6) வி. கலைப்பிரியன்
7) அ. அபிசாக்
8) யோ. கலையரசன்
9) நா. கலைச்செல்வன்
10) அ. தமிழரசி
11) ப. கோகுலன்
12) ம. நிலவன்

## தரம் 7

1) ச. சரணியா
2) றெ. பாணுஜா
3) அ. ஜெனி
4) ம. அமுதசொருபி
5) ச. தேன்நிலா
6) க. சிந்துஜன்
7) ந. ஜனா
8) செ. நவநீதன்
9) அ. கனிமொழி
10) அ. அபிலாசினி
11) ச. டேனுஜன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் 8

1) ல. சரண்யா
2) சி. யோனாத்
3) க. நிருபன்
4) நி. கிருசாலினி
5) ச. பிறைவண்ணன்
6) கெ. யக்சனா
7) சி. பவிசன்
8) வி. விந்துயன்
9) உ. கரணி
10) லோ. தரணிகா
13) அ. தூயவன்

## தரம் 11

1) கோ. அன்பரசி
2) கி. தனுசன்
3) ச. உஷாளினி
4) அ. பிறையழகன்
5) செ. லதுர்சனா
6) நா. ஆர்த்தி
7) இ. சுஜீபன்
8) சி. சுரேந்திரன்
9) ம. நிலாமதி
10) பி. வேதுர்ஷன்
11) யோ. கிரிகரன்

## தரம் 9A

1) க. தரணிகா
2) நி. கிருபாளினி
3) செ. லதுர்சன்
4) ச. எழிலன்
5) வி. நிலக்சிகா
6) மு. ஸ்ரீபன்
7) செ. சேந்தன்
8) ம. எழிலன்

## தரம் 9B

1) மு. சயந்தினி
2) இ. நிறோயா
3) ச. கயல்விழி
4) சு. விதுஷன்
5) த. கஜீபன்
6) இ. டனுசன்
7) சி. டென்சிகா
8) சி. வேந்தன்
9) ச. சமிந்தன்

## தரம் 10

1) வி. பிரசாளினி
2) றி. கெல்கிசன்
3) க. அபிசன்
4) அ. கலைவிழி
5) ஜெ. யதுசா
6) ச. விதுஷா
7) சு. பிறையாளன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் தலைவர்கள்

## தரம் – 09

1) மு. சயந்தினி
2) க. தரணிகா
3) நி. ஹிருபாலினி
4) ம. எழிலன்
5) சு. விதுசன்
6) சி. வேந்தன்

## தரம் – 10

1) க.கலைவண்ணன்
2) மு.சுஜிபன்
3) ஸ்ரீ.பகிர்த்தன்
4) வி.பிரசாளினி
5) சு.பிரிந்தன்
6) க.அபிசன்
7) றி.கெல்கிசன்

## தரம் 11

1) கி.தனுசன்
2) பி.வேதுர்ஷன்
3) யோ.கிரிகரன்
4) இ.ரிசாந்தன்
5) சி.சுரேந்திரன்
6) ஜெ.சங்கீதன்
7) அ.பிறையழகன்
8) கோ.அன்பரசி
9) உ.கிருசாயினி
10) உ.சிலோஜினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னேரிக்குளத்தின் கல்விப்புலம்

1950களில் வழங்கப்பட்ட வன்னேரிக்குளத்தின் குடியேற்றத் திட்டத்தில் நெடுந்தீவு மற்றும் பூநகரிப் பிரதேசங்களிலிருந்து 200 குடும்பங்கள் குடியேற்றப் பட்டனர். வன்னேரிக்குளம் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் இவர்களுக்கு மூன்று ஏக்கர் வயற்காணிகளும் வழங்கப்பட்டன. இதுதவிர குடியிருப்பு காணிகளாக மூன்று ஏக்கர் மேட்டு நிலமும் வழங்கப்பட்டது. காடுகளாக வழங்கப்பட்ட இக்காணிகளை வெட்டி துப்பரவாக்கி களனிகளாகவும் மேட்டு நிலங்களாகவும் செப்பனிடப்பட்ட கடும் உழைப்பினால் தான் மையக் காட்டுப் பகுதியில் இந்த விவசாய கிராமம் உருவானது. இதில் குடியேறியவர்களும் கடும் உழைப்பாளிகளாக இருந்து இருபோக விதைப்பையும், மேட்டு நிலத்தில் வீட்டுடன் கூடிய நீண்ட கால பயிர்களான தென்னை, பலா, மா என்பவற்றையும் , தோட்டப் பயிர்களையும் செய்து வளமோடு வாழ்வை ஆரம்பித்தபோது அவர்களுக்கான வீட்டுத் திட்டத்திணையும் வழங்க அரசு முன்வந்தது. இரண்டு அறையும் ஒரு சிறிய குசினியுடனான வீட்டினை அமைக்க முன்வந்தபோதும் அந்த மக்கள் தாமாகவே வீடமைப்பாகக் கூறி அதற்கான பணத்தைப் பெற்று கல்வீட்டுக்குப் பதிலாக பனை ஓலைகளால் வேயப்பட்ட மண் குடிசைகளை அமைத்ததுடன் கிடைத்த காசை வீணே செலவிட்டனர். மதுப்பழக்கமும் இவர்களை ஆக்கிரமித்துக் கொள்ள இவர்களது வாழ்வின் சரிவும் ஆரம்பித்தது. வன்னேரிக்குளம் பனைவளம் மிக்க பிரதேசமானது.

ஆரம்பத்தில் வன்னேரிக்குளத்தில் நீர்ப்பாசனத் திணைக்கள உப அலுவலகம், பாடசாலை, மத்திய மருந்தகம் என்பன உருவாக்கப்பட்டன. இவை தற்காலிக கொட்டகைகளிலிருந்து நிரந்தர கட்டடமாக மாற்றப்பட்டன. வன்னேரிக் குளத்தில் சோலை, இரண்டேக்கர், ஐயனார்புரம் என மூன்று பிரிவுகள் இருந்தன. சோலைப் பகுதியில் தான் நிரந்தரப் பாடசாலை வன்னேரிக்குளம் மகாவித்தியாலயம் அமைக்கப்பட்டது. இது கிராமத்தின் ஒரு முனையில் இருந்தமையால் மறுமுனையிலிருக்கும் ஐயனார்புரம் பகுதி சிறுவர்கள் வெகுதூரம் நடந்து பாடசாலைக்கு வர வேண்டியிருந்தது.

ஐயனார்புரம் என்பது காரணப் பெயராகும். காட்டு ஐயனார் கோயில் இப்பகுதியின் பின்புறமாக அமைந்திருந்த காட்டில் அழிந்த நிலையில் பின்புறமாக அமைந்திருந்த காட்டில் அழிந்த நிலையில் இருப்பதாக நம்பும் இப்பகுதி மக்கள் பிரதான வீதியோரமாக ஒரு பாலைமரத்தின் கீழ் ஓர் அடையாளக் கல் வைத்து வழிபட்டு வந்தார்கள். அடர்காடுகளினூடாக தலைச்சுமையுடன் நீண்ட தூரம் பயணிக்கும் மக்களுக்கு ஐயனார் கண்டதும் தான் நிம்மதிப்பெருமூச்சுவரும். சுமைகளை இறக்கி வைத்துவிட்டு ஐயனாரை வழிபட்டு ஓய்வெடுத்து பின்னர் பயணத்தை தொடர்வார்கள். ஆரம்பத்தில் அக்கராயன்குளம் குடியேற்றத்திட்டம் இல்லாமையால் முறிகண்டியிலிருந்து இவர்களது பயணம் தலைச் சுமைகளுடனான களைப்பான பயணம் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னியிலே ஏழு இடங்களில் ஐயனார் கோயில்கள் இருந்ததாகவும் அவற்றின் வருடாந்தப் பொங்கலின்போது ஒரே நேரத்தில் ஒரே பூசாரி எல்லாக் கோயில் களுக்கும் மடை பூசை வைத்ததாகவும், அவ் ஏழு கோயில்களில் ஒன்றுதான் வன்னேரிக் குளம் காட்டுப் பகுதியில் இருந்து என்றும் இன்றும் கதை கதையாக கூறுவார்கள்.

கல்வி நடவடிக்கைகள் வன்னேரிக் குளத்தில் ஆரம்பத்தில் ஒரு மகாவித்தி யாலயம் இருந்தபோதும் வெற்றியளிக்க வில்லை. பெயருக்கு இது ஓர் மகாவித்தி யாலயமாக இருந்ததேயன்றி இங்கு வளப் பற்றாக்குறை நிறைந்திருந்தமையே இதற் குக் காரணம். ஆரம்பத்தில் கடும் உழைப்பை நம்பியிருந்த வன்னேரி குடியேற்ற வாசிகள் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந் திருக்கவில்லை. ஏதோ எழுதப்படிக்க, கணக் குப் பார்க்கத் தெரிந்திருந்தால் போதும் என்று இருந்தார்கள். வன்னியில் தொலைதூர கஸ்டப் பிரதேச கிராமமாக இருந்ததால் இது கவனிப்புக் குறைந்த பகுதியாகவே இருந்தது. ஆரம்ப காலத்திலிருந்தே இங்கு ஆசிரியப் வளப் பற்றாக்குறை நிலவி வந்தது. மக்கள் மத்தியில் மதுப்பழக்கம் அதிகமாக இருந்ததுடன் அவர்கள் தமது பிள்ளைகளின் கல்வியில் அதிக அக்கறை செலுத்தாமல் இருந்தனர். ஆசிரியர்கள் எல்லோரும் யாழ்ப்பாணத்தில் இருந்து திங்கள் மதியம் பஸ்சில் வந்து வெள்ளி மதியம் பஸ்சில் பயணிப்பவர்களாக இருந்தமையால் மூன்று நாட்களே முழுமையாக பாடசாலை நடந்தது. போதிய ஆசிரியர்களும் இல்லை. வந்தவர் களில் பலரும் விரைவில் மாற்றம் பெற்றுச் சென்றுவிடுவார்கள். இங்கு கற்பித்தவர் களை பாராட்டத்தான் வேண்டும்.

க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தி யடைபவர்கள் மிக சிலராகவே இருந்தனர். அவர்களில் ஒரு சிலரே உயர்தர வகுப்புக்கு யாழ் மாவட்டத்திற்கு சென்று படித்தனர். அப்போது கிளிநொச்சி நகரிலும் உயர்தரம் படிக்கும் வாய்ப்பு இல்லை. வன்னேரிக் குளத்திற்கு கற்பிக்க வந்த அவரே தன் நிரந்தர வதிவிடமாகக் கொண்ட ஆசிரியை எலிசபெத்தே இக்கிராமத்தைச் சேர்ந்த முதலாவது ஆசிரியராவர்.

இடைக்காலத்தில் சில பெற்றோர் கள் பிள்ளைகளின் கல்வியில் அக்கறை செலுத்தினார்கள். இந்த வரிசையில் முதலாவது பட்டதாரியாக வந்தவர் சரஸ்வதி சங்கரப்பிள்ளை. இவர்தான் பின்னர் பேராசிரியர் சிவலிங்கராசாவின் துணைவி யானவர். யாழ்.பல்கலைக்கழகத்தில் ஒன்றாகப் பயின்றபோது இவர்களிடையே ஏற்பட்ட விருப்பம் பெற்றோர் சம்மதத்துடன் மணம் முடித்தார்கள். அடுத்து கயிலாய பிள்ளை அருணாசலம், ஐயம்பிள்ளை சண்முகராசா முதலானவர்கள் பட்டதாரி யானார்கள்.

எனது கணவர் இங்கு மருத்து வராகப் பணியாற்றிமையால் எனக்கு கிடைத்த ஆசிரிய நியமனத்தை வன்னேரிக் குளத்திற்கு பெற்றுக் கொண்டு வன்னேரிக் குளத்திற்கு பெற்றுக்கொண்டு பணியாற்றி வந்தேன். நான் பணியாற்ற வந்தபோது வன்னேரிக்குள இளைஞர்களிடையே கல்வி ஆர்வம் துளிர்விட்டிருந்தது. பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு 40 வருடங்கள் கடந்தும் ஒரு மாணவர் தானும் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடை யவில்லை என்ற தகவல் எனக்கு நெருடலாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. எனவே இதை ஒரு சவாலாக எடுத்து ஐந்தாம் ஆண்டைப் பொறுப்பில் எடுத்தேன். என் கணவரும் எனக்கு உறு துணையாக இருந்தார். எனது அதிபர்களான புண்ணியசீலன், ஆனந்த சீலம். குகானந்த ராஜா (இவர் தான் கல்லூரி அதிபராக வந்த இந்த கிராமத்தைச் சேர்ந்தவர்) போன் றோரும் என்னை உற்சாகப்படுத்தினர். 1993, 1994, 1995ம் ஆண்டுகளில் வகுப்பாசிரியை யாக இருந்து ஏழு மாணவர்களை சித்தி யடைய வைத்தேன். இதில் என் மகளும் ஒருவர். வன்னேரியில் பிறந்து சித்தியடைந்த மாணவன் மதுமேனன்.

நான் ஆசிரியையாக வந்த பின்னர் இதே கிராமத்தைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளும் ஆசிரியைகளாக இணைந்தனர். இன்னும் சிலர் தொண்டர் ஆசிரியர்களாக இணைந்தனர். கிளிநொச்சி மாவட்டம் இராணுவத்தினரின் கைகளுக்குச் சென்ற போது அங்கிருந்த மக்களும் திணைக் களங்கள் பாடசாலைகள் அனைத்தும் இடம்பெயர்ந்தபோது ஊற்றுப்புலம் அ.த.க. பாடசாலையை ஐயனார்புரத்தில் நிறுவி னார்கள். இது அப்பகுதி மக்களுக்கு வரப் பிரசாதமாக அமைந்தது. ஊற்றுப்புலம் மறுபடி சொந்த ஊருக்குச் சென்றபின்னர் இங்கு இதே கட்டடத்தின் புதிய ஐயனார்புரம் அ.த.க. பாடசாலை உருவான பின்னர் இக்கிராமத்தின் கல்வி மேலும் விருத்தி யடைந்தது. இந்தப் பணியை சிறப்பாக முன்னெடுத்துச் சென்ற முதலாவது அதிபர் இராசேந்திரம் என்றும் மனம் கொள்ளத் தக்கவர். இதே கிராமத்தைச் சேர்ந்த நடேசலிங்கம் முதல் இன்றைய அதிபர் கிஸ்காட் வரை பாடசாலையை மேம்படுத்தி சிறப்பான ஏறுமுகமான திசையில் கொண்டு செல்கின்றனர். ஆசிரியர்களும் மண்பற்றுடன் சிறப்பாகப் பணியாற்றுகின்றனர். இதே பாடசாலையில் அதிபர் இராசேந்திரம் காலத்தில் பணியாற்றிய பசுமையான நினைவுகளும் பசுமரத்து ஆணிபோல என் மனதில் பதிந்துள்ளது. ஒரு வர்த்தக ஆசிரியையான நான் இப்பாடசாலையிலும் ஐந்தாம் ஆண்டைப் பொறுப்பெடுத்து புலமைப் பரிசில் பரீட்சையில் மாணவர் களைச் சித்தியடைய வைத்திட வேண்டும் என்றிருந்தபோது மாற்றலாகி கொழும்பு செல்லவேண்டி ஏற்பட்டுவிட்டது. 12 வருடங் கள் இம்மண்ணில் கற்பித்தேன்.

இன்று வன்னேரி ஐயனார்புரம் பகுதிகளில் கல்விப்புலம் ஆரோக்கியமாக உள்ளதை சில வருடங்களுக்கு முன்னர் பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி களில் கலந்து கொண்டபோது அவதானித் தேன். பலர் பட்டதாரிகளாக இருப்பதையும், ஏ.எல், ஓ.எல் பரீட்சைகளில் சிறந்த பெறு பேறுகளைப் பெற்றுள்ளமையையும் இதே கிராமத்திலிருந்து பலர் ஆசிரியர்களாக இருப்பதையும் கண்டு மனம் மகிழ்ந்தனர்.

ஐயனார்புரத்தின் அடையாளச் சின்னமான ஐயனார் கோவில் இன்று நிமிர்ந்து நிற்பது போலவே, ஐயனார்புரம் பாட சாலையும் உயர்ச்சியடைந்துள்ளமை மன நிறைவைத் தருகிறது. எனது கணவரான டாக்டர் ச.முருகானந்தனும், பேராசிரியர் சி.சிவலிங்கராசாவும் கனவு கண்டது போல் வன்னேரி பொன்னேரியாவதன் ஒரு படியாக இவற்றைப் பார்க்கின்றேன். வன்னேரிக் குளம் கிராம மக்கள் கல்விக்கு வழங்கும் ஒத்து ழைப்பு மகத்தானது. வந்தாரை வரவேற்கும் வன்னேரி மக்கள் தமது பாடசாலையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்வுக்கு கைகொடுப்பார்கள். இதன் மூலம் பாடசாலையின் தரத்தையும் உயர்த்த முடியும். புதிய மாணவர்கள் கல்வியில் காட்டும் ஆர்வம் மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது. எனினும், நகரை நோக்கிய நகர்வு ஒரு எதிர்மறையான செயற்பாடாக இருக்கிறது. போராடி நாமே நமது வளத்தைப் பெருக்க வேண்டும். முதலாவதாக வீதி புனரமைக்கப்பட வேண்டியது காலத்தின் தேவையாகும்.

**சந்திரகாந்தா முருகானந்தன்**
**முன்னாள் ஆசிரியர்**

# உண்மையே உயர்வு தரும்

உண்மைபோல் உயர்ந்தது
உலகில் ஒன்றும் இல்லை
திண்மையாய் மனதில் வைத்துக்கொள்
சீர்கள் பல பெறுவாய்.

உலகில் உள்ள மதங்கள் யாவும்
உரைக்கும் பொருள் உண்மையே
வளமாய் வாழ்வில் மேன்மை
வழங்கிடும் அதுவே உண்மை.

துன்பங்கள் வந்த போதும்
சொல்ல வேண்டும் உண்மை - பின்
துயரம் யாவும் நீங்கி விடும்
அதுவும் உண்மை.

உண்மை கூறி உயர்ந்தவர்கள்
கதை கேட்டு நாமும்
உயர்ந்திடுவோம் உண்மையாய்
உலகிலே என்றும்.

**கி.துவிகன்**
**தரம் – 05**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல நூல்களே நல்ல நண்பர்கள்

**“விலங்கொடு மக்களனையர் இலங்கு நூல் கற்றாரோடு ஏனை யவர்”**

என்கிறார் வள்ளுவர்.

கல்வியறிவுடையோரே மனிதர் என்றும், கல்வியறிவற்ற ஏனையவர் விலங்குகள் என்றும் விளம்புகிறது இக்குறள். இதன் மூலம் கல்வியறிவு படைத்தோரையே இவ்வுலகு மனிதர்களாக மதிக்கும் என்பது வெளிப்படுகிறது. மனிதன் மனிதனாக மதிக்கப்பட வேண்டுமாயின் அவன் கல்வியறிவினை தேடிக்கொள்ள வேண்டும். கல்வி அறிவினைப் பெற்றுக்கொள்வதற்குப் பல வழிகள் உண்டெனினும் அவற்றுள்ளே மிகச் சிறந்தது நூல்கள். நூல்கள் மூலம் பெற்றுக் கொள்தலால் எம் அறிவு பூரணமாகிறது. நூல்களால் அறிவை பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் ஒவ்வொரு மனிதனும் நன்கு வாசிக்க வேண்டும். வாசிக்கும் பழக்கத்தை வளர்த்துக்கொள்வதன் மூலமே அது முழுமை பெறும்.

“என்னை, என்றும், எச்சந்தர்ப்பத்திலும் கைவிடாத நண்பர்கள் புத்தகங்களே.” என்கிறார் ஆங்கிலக்கவிஞன் ஒருவர். இதனாலேயே நல்ல நூல்களை நண்பராக்கிக் கொள்ளுங்கள்.

இளமை பருவம் இனியது. இப்பருவத்திலேயே நூல்களை வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அவ்விதம் ஏற்படுத்திக்கொண்டால் நம் மொழியாற்றல் விருத்தி யாகும். பாடங்களில் சிறப்படைய முடியும். வாழ்க்கை பூரணமாகும். வாழ்க்கை முழுவதும் நாம் மகிழ்ச்சியாக இருக்கக்கூடிய வழியை கண்டுகொள்ள முடியும்.

நூல்கள் பலதரப்பட்டவை. வரலாறு, சமயம், தத்துவம், விஞ்ஞானம், இசை, புனைகதை, விளையாட்டு என பல்வேறு வகைப்பட்ட நூல்கள் உள்ளன. நமது எதிர்கால முன்னேற்றத்திற்கு, வாழ்க்கைக்கு பயன்தரும் நூல்களை அறிந்து கற்க வேண்டும். சோர்வு ஏற்படும் வேளையில் எல்லாம் நாம் நூல்களைத் துணை கொண்டால் வேறு துணை எமக்கு தேவைப்படாது. புத்தகங்களை படிக்கும் பழக்கம் உள்ளவர்கள் ஒருபோதும் தனிமையை உணர மாட்டார்கள். ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் அவர்கள் புத்தகங்களை நாடிச் செல்வதற்கு அதுவே காரணமாகும். சோர்வு, தோல்வி போன்றவை அவர்களிடம் ஒருபோதும் காணவே முடியாது.

நூல்கள் நமக்கு அறிவு தரும் அரிய செல்வங்கள். வேறு செல்வங்களை கள்வர்கள் களவாடிச் செல்லலாம். ஆனால் புத்தகங்கள் தரும் அறிவுச் செல்வத்தை நம்மிடமிருந்து எவரும் பறித்திட முடியாது.

ஆங்கில அறிஞர் ரஸ்கின் அவர்கள் கூறுகிறார், “புத்தகங்களைப் போன்ற கருவூலம் எதுவும் மனிதனுக்கு இருக்காது” என்கிறார். ஒரு மனிதன் புத்தகங்கள் மூலம் பெறும் அறிவு அவன் வாழ்நாள் முழுவதும் காக்கப்படுகிறான்.

நல்ல சிந்தனைகள் அடங்கிய நூல்களே நம் உள்ளத்திற்கு உகந்தவை. அத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகைய நூல்களைக் கற்க நாம் முயல வேண்டும். நமது அறிவு வளர்ச்சிக்கு துணை புரிய வல்ல நூல்களை தேடிக் கற்றால் அவை நம் வாழ்வுக்கு பயன்தரும்.

கவிதைகள், பெரியார் வரலாறுகள், சமய நூல்கள் என்பன நல்வழிகாட்டுவன. அவை நம் சிந்தனையை விருத்தியாக்க துணைபுரியும் வன்மை மிக்கன. எவ்வளவு நூல்களை வாசிக்கிறோமோ அவ்வளவு அறிவு விருத்தியடையும். மொழியாற்றலில் முதன்மை பெற வாசிப்பு பெரும் துணை புரியும். நல்ல நூல்களை வாசிப்போர் மனதில் மேன்மேலும் நூல்களை வாசிக்க வேண்டும் என்ற ஆவல் பிறக்கும். அது நாளடைவில் தீராத பசியாக மாறும். அதனால் மேன்மேலும் தேடிக்கற்க முயல்வர்.

"வாசிப்பு ஒருவனை பூரணமாக்கும்" என்பது அறிஞர் வலியுறுத்துகிறார். நம் நண்பர்கள் நம்மை விட்டு பிரியலாம். ஆனால் புத்தகங்கள் எம்மை விட்டு பிரிவதில்லை. நமக்கு அறிவு புகட்டும் ஆசான் புத்தகங்களே. நாம் வாழும் காலம் சிறியது. கல்வியோ கரையற்றது. எனவே, நாம் நல்ல நூல்களை வாசித்து புத்தகங்களை எம் நண்பர்கள் ஆக்கிக்கொள்வதே நல்வழி ஆகும்.

**"நல்ல நல்ல நூல்களே நமது நல்ல நண்பராம்**
**நல்ல நல்ல நூல்களை நாளும் நண்பராக்குவோம்."**

வி.நிலக்சிகா
தரம் – 9

# சிறுவர் எம்மில் வளர்ப்போம்

உண்மை பேசுவோம்
இறைவனை வணங்குவோம்
பெற்றோரை தெய்வமாக கும்பிடுவோம்
பெரியோரை மதிப்போம்
ஆசிரியர் சொற்படி நடப்போம்
இனிமையாயகப் பேசுவோம்
ஒற்றுமையாக வாழ்வோம்
ஏழைகளுக்கு உதவுவோம்
சிக்கனமாய் வாழ்வோம்
"நல்ல சிறுவர்" என்ற பெயர் எடுப்போம்.

ஜ.அபிஷேக்
தரம் 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள் கூறும் அறம்

திருக்குறள் தமிழில் தோன்றிய தலைசிறந்த அறநூல். தமிழின் பெருமையை உலகுக்கு உணர்த்திய நூல். தமிழர்களின் பண்பாட்டை பறைசாற்றும் அறநூல் இதுவாகும். திருவள்ளுவர் அறத்துப்பாலின் மூலம் அறத்தை நமக்காக எடுத்துரைக்கிறார். அறம் என்றால் என்ன? என்ற வினா எழுப்பினால் விடை பல அறியலாம். அறம் என்பது அறுத்துச் செல், வழியை உண்டாக்கு, உருவாக்கு, துண்டி, வேறுபடுத்து என்று பொருள்படும்.

மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே அறம் என்று ஆராய்ச்சி மூலம் விளக்கம் கூறியுள்ளார்கள். பிறவி தோறும் மனிதனைப் பற்றிக்கொண்டு வரும் தீவினையை அறுத்தெறிவதே அறம் என்று ஆன்மீக விளக்கமும் இதற்கு தருவதுண்டு.

***"அழுக்காறு அவாவெகுளி இன்னாச் சொல் நான்கும்***
***இழுக்கா இயன்றது அறம்."***

அறம் என்று சொல்லப்படுவது பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் ஆகிய நான்கையும் நீக்கி நடைபெறுவதாகும்.

***"கதம் காற்று கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி***
***அறம் பார்க்கும் ஆற்றின் நுழைந்து."***

மனத்தில் சினம் உண்டாகாமல் தடுத்து கற்க வேண்டியவற்றை கற்று அடக்க, முடையவனாக இருப்பவனிடம் அறக்கடவுள் சென்றடையும் சயத்தை எதிர்பார்த்திருக்கும்.

***"அறனறிந்து வெஃகா அறிவுடையார் சேரும்***
***திறன் அறிந் தாங்கே திரு."***

பிறர் பொருளை விரும்பாத அறமென அறிந்து அதன்படி நடக்கும் அறிவுடையாரைக் திருமகள் தானே சென்றடைவாள்.

***"அறன் ஆக்கம் வேண்டாதான் என்பான் பிறளைக்கும்***
***பேணாது அழுக்கறுப்பான்."***

பிறனுடைய செல்வத்தை கண்டு மகிழாது பொறாமைப் படுகின்றவன் தனக்கு அறத்தையும் செல்வத்தையும் விரும்பாதவன் என்று சொல்லப்படுவான்.

***"அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை***
***மறத்தலின் ஊங்கில்லை கேடு."***

ஒருவனுக்கு அறம் செய்வதை விட மேலான நன்மையைத் தருவது வேறு எதுவுமில்லை: அந்த அறத்தை செய்யாமல் விடுவதை விட மேலான கேடும் வேறு இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற குறட்பாக்கள் மூலம் வள்ளுவர் அறத்தின் இலக்கணத்தையும் அதன் மேன்மையையும் உணர்த்துகிறார். அறம் என்பது ஒழுக்கம், கடமை, ஈகை என்ற மூன்றும் இணைந்த வாழ்க்கை நெறி. இன்னொருவரை எதிர்பார்த்து வாழ்வது மனிதனுடைய வாழ்க்கை முறை அன்று. தானும் உழைத்துண்டு வாழ வேண்டும். தன் உழைப்பினால் பெற்ற பொருளால் மற்றவருக்கும் உதவி செய்ய வேண்டும். இந்த இயற்கை நீதியை உணர்ந்து கொள்ள வேண்டும்.

அறத்துப்பால் கடவுள் வாழ்த்தில் தொடங்கி ஊழ் அதிகாரத்தில் முடிகிறது. வள்ளுவப் பெருந்தகை அறத்தைப் பற்றிய முழு விளக்கத்தை கொடுத்து அறவழியில் நின்று மேன்மையுற வேண்டும் என விளக்குகிறார். உலகிலேயே எந்த மொழியிலும் திருக்குறளை விஞ்சிய ஒரு அறநூல் கிடையாது. வாழ்க்கை நெறியறிய விரும்புவோர்க்கு ஒரு வழிகாட்டி நூல். அந்நூலினை பயில்வோர் பெருஞ்சிறப்பு பெறுவார். எனவே திருக்குறளை கற்போம். வாழ்வை அறிவோம்.

நி.ஹிருபாலினி
தரம் – 09

**எவ்வளவோ கேளிக்கைகளை குழந்தைகளைக் கவர ஏற்படுத்தினேன். எல்லாவற்றையும் விட அதிக புதையல் புத்தகங்களிலே உள்ளன.**

**– வால்ட் டிசினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய காலநிலை மாற்றம்

இவ் உலகில் நிலையான சொத்தாகவும் நாம் எல்லோரும் ஆளும் சொத்தாகவும் இப் பூவுலகம் காணப்படுகிறது. கடந்த சந்ததி எமக்கு அளித்த இயற்கையின் கொடை இன்று நாம் அனுபவித்துக் கொண்டிருக்கும் இப்பூலோகம் கடந்த மனித சமுதாயம் எமக்கு எவ்வாறான சொத்தை அளித்தார்கள் எனின் மிகவும் பசுமையான, செழிப்பான இயற்கையை அல்லவா? அவ்வாறு அவர்கள் எமக்கு உதவி புரிந்தமையால் நாம் உன்னத வாழ்வை வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இது இயற்கையான கொடை. கடந்த சந்ததி பேணிப் பாதுகாத்து எமக்கு அளித்த சொத்து.

நாம் பெற்றுக்கொண்ட எம் சொத்தை அடுத்த சந்ததிக்கு திருப்பிக் கொடுக்கின்ற தார்மீக பொறுப்பில் அல்லவா நாம் ஒவ்வொருவரும் இருக்கின்றோம். ஆம் நாம் நிச்சயமாகக் கொடுப் போம். அதனை மறுதலிக்க முடியாது. ஆனால் எவ்வாறு நாம் கொடுக்கிறோம் என்று தான் இங்கு எழுகின்ற ஐயம். நாம் பசுமையாக பெற்றுக்கொண்ட சொத்தை நீரின்றி வாடி வதங்கும் சொத்தாக எமது எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்கப் போகின்றோம். நாம் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டிய தருணம் இது.

இன்றைய உலகு இவ்வாறு வரண்டு போவதற்கு காலநிலை மாற்றமே பிரதான காரணமாகும். காலநிலை மூலகங்களான படிவுவீழ்ச்சி, வெப்பநிலை, காற்று முதலியவற்றில் வழமைக்கு மாறாக ஏற்படுகின்ற மாற்றமே காலநிலை மாற்றம் என எளிதில் கொள்ளலாம். இக்காலநிலை மாற்றமானது புவியில் ஆரம்ப காலங்களிலிருந்து நிகழ்ந்து வருகின்ற ஒன்றாக காணப்பட்டாலும் இம்மாற்றங்கள் வேகமாக மாறிவரும் ஒன்றாக இருக்கவில்லை. தற்காலத்தில் இது மிகவும் அதிகரித்த ஒரு மாற்றமாக உணர முடிகின்றது. இதற்குப் பிரதான காரணமாக ஆரம்ப காலத்தில் இயற்கை காரணிகளே இருந்ததுடன் அதன் மாற்றம் மந்த கதியிலேயே இடம்பெற்றது. ஆனால் இன்று இயற்கைக் காரணிகளுடன் மானிட செயற்பாடுகளும் இக்காலநிலை மாற்றத்தில் பெரும்பங்கை செலுத்தி வருகின்றன. இதனால் காலநிலை மாற்றமானது மிகவும் வேகமாக நடைபெறுவதை உணரமுடிகின்றது.

IPCC வெளியிட்ட அறிக்கையில் 2000 தொடக்கம் 2012 வரையான காலப்பகுதியில் $0.8^{0}C$ வெப்பநிலை அதிகரித்ததுடன் 2100ம் ஆண்டளவில் $6.4^{0}C$ வெப்பநிலை அதிகரிக்கும் என எதிர்வு கூறியிருக்கின்றது.

இதனை நாம் விரிவாக பார்க்க வேண்டும். காலநிலை மாற்றத்தில் செல்வாக்கு செலுத்தும் இயற்றை காரணிகளாக நாம் முதன்மைப்படுத்துபவை.

- சூரிய கதிர் வீச்சலின் தாக்கம்
- புவிச்சுற்றுவட்ட பாதை மாற்றம்
- எரிமலைகள் வெடிப்பு

என்பன முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆனால் இன்று மானிட செயற்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் இயற்கை காரணிகளை புறம் தள்ளி காலநிலை மாற்றத்திற்கு பங்களிக்கின்றன. அவ்வாறான மானிட செயற்பாடுகளாக.

## வளநுகர்ச்சி / அதிகரித்து வரும் சனத்தொகை

இன்று மிக முக்கியமான சவாலாக சனத்தொகை அதிகரிப்பு காணப்படு கின்றது. இதன் விளைவாக வளநுகர்ச்சி அதிகரிப்பாகவுள்ளது. புவியில் உள்ள வளங்களுள் ஏனைய வளங்களை நுகரும் ஒரு வளமாக மனிதவளம் காணப்படு கின்றது. ஆனால் இது துரித சனத்தொகை வளர்ச்சியில் வளம் சவாலை எதிர்கொள் கின்றது. இதனால் வளங்களை செயற்கை யாக உருவாக்க முனையும் போது இயற் கை மாறுகிறது.

## CFC

இது பல்வேறு விதத்தில் சேர்க்கப் படுகின்றது. பிளாஸ்ரிக் பொருட்களின் பாவனை, இயந்திரங்களின் புகை, கணினி சுத்தம் செய்யும் திரவம் இவ்வாறான செயற்பாடுகள் வளிமண்டலத்தில் சேர்க்கப்படுகின்றன.

## உயிர் சுவட்டு எரிபொருட்களின் பாவனை

உயிர் சுவட்டு எரிபொருட்களான பெற் றோலியம், நிலக்கரி போன்றவற்றின் பயன் பாடு, பெற்றோலிய பொருட்கள் தகன மடைதல் இவ்வாறான செயற்பாடுகளால் வளிமண்டலத்தில் காபனீர்ரொட்சைட்டு வாயு அதிகளவில் சேர்வடையும்.

## தாவரப் போர்வை அழிக்கப்படல்

தாவரங்கள் பெரும்பாலும் ஒளித்தொ குப்பின் போது காபனீர்ரொட்சைட்டை உள்ளெடுத்து ஒட்சிசனை வெளிவிடுகின் றன. இவை பயிர்ச்செய்கை, குடியிருப்பு போன்ற காரணங்களால் இயற்கைத் தாவரங்கள், காடழிப்பு நிகழும் போது காபனீர்ரொட்சைட் வளிமண்டலத்தில் சென்றடைய துணைபுரியும்.

இக்காலநிலை மாற்றங்களினால் பல்வேறு விளைவுகள் ஏற்படுகின்றன. அவற்றில் முதன்மை காரணிகளாவன:-

மழை வீழ்ச்சியின் மாற்றம் உலகின் பல பகுதிகளில் வரட்சி பாதிப்புக்களை ஏற்படுத்து கின்றன. இதனை இன்று நாம் எம் கண்முன்னே காணக்கூடியதாக உள்ளது. கிணறுகளில் குளங்களில் நீர் வற்றும் போக்காக உள்ளது.

அதே போன்று புவி வெப்பம் அதி கரிக்கின்ற நிலையினைக் கொண்டுள்ளது. அத்தோடு பனிக்கட்டிகளும் உருகும் நிலையை அடைந்து வருகிறது. இதற்கு சிறந்த எடுத்துக்காட்டான எதிர்வுகூறலாக அந்தாட்டிக்கா பிரதேசம் 2040ம் ஆண் டளவில் பனியற்ற கோடை காலத்தை காணும் என்பது காணப்படுகிறது.

உயிர்ப்பல்லினத் தன்மை குறை வடைதல் ஒரு விளைவாகும். காலநிலை மாற்றத்தாலும் பூகோள வெப்பமயமாத லாலும் உயிரினங்கள் இறப்பில் பாரிய தாக்கம் செலுத்துகின்றன. தொடர்ந்து வெப்பநிலை அதிகரிப்பு தீவிரத்தன்மை அடைவதால் வெப்பம் தாங்கமுடியாது பல உயிரினங்கள் அழிவடையும் தன்மையை ஏற்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தாட்டிக்கா பகுதியில் நடாத்தப் பட்ட ஆய்வொன்றில் 50 வீதம் பென்குயின் பறவை கள் அதிகரித்த வெப்பநிலை காரண மாக இறந்துள்ளதாக ஆய்வு கூறுகிறது.

**தொற்று நோய்கள் பரவுதல்**
**இயற்கை இடர்கள் ஏற்படல்**
**மனிதர்களிற்கு மனரீதியான அழுத்தம் கூடல் (மனஅழுத்தம், கோபம்)**
**விவசாயம் பாதிக்கப்படல்**
**மீன்பிடி பாதிக்கப்படல்**
**நீர்நிலைகள் வற்றுதல்**
**குளிரூட்டலிற்கான கேள்வி அதிகரித்தல்**

இப்பிரச்சினைகளிற்கு எடுக்கக் கூடிய நடவடிக்கைகளாவன: காலநிலை மாற்றத்தின் முக்கிய காரணி வெப்பநிலை அதிகரிப்பே. எனவே வெப்பநிலையினைக் குறைக்க நடவடிக்கை களை மேற்கொள்ள வேண்டும்.

**மரங்களை வளர்த்தல்**
**காடழிப்பை தடுத்தல்**
**காடுகளை மீள் உருவாக்கம் செய்தல்**

சூரியசக்தி, காற்று, கடலலை, நீர் முதலியவற்றிலிருந்து எமது சக்தி தேவை களை பூர்த்தி செய்ய முடியும்.

இவை சம்பந்தமாக விழிப்புணர்வு நடத்தப்பட்டு மரங்களை அதிகளவில் நாட்டு வதும் காடுகளை புத்தாக்கம் செய்வதும் பிளாஸ்ரிக், பொலித்தீன் பாவனையைக் குறைத்து எமது புவி வளத்தினை பாதுகாப் பதும் நம் ஒவ்வொருவரினதும் பொறுப்பாகும்.

**சி.சிவரூபன்**
**ஆசிரியர் (புவியியல்)**

**வேறு எந்த சுதந்திரமும் வேண்டாம். சிறையில் புத்தக வாசிப்பை மட்டும் அனுமதிக்க வேண்டும்.**

**– நெல்சன் மண்டேலா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழில் மிகு பொன்னேரியான வன்னேரியை நோக்கிய பயணம்...

வடக்கின் வசந்தமான வடக்கு மாகாணத்திலே கிளிநொச்சி மாவட்டத்திலே நீர்வளமும், மண்வளமும், காட்டு வளமும் மேலோங்கிக் காணப்படும் பொன்னேரிதான் வன்னேரி. 1954ம் ஆண்டு வன்னேரிக்குளக் கிராமம் குடியேற்றம் செய்யப்பட்டது. வன்னேரியின் முத்தாக விளங் குவது கிராமத்தின் குளமாகும். குளத்தின் மூலம் 11 அடி நீரினை சேமித்து வைத்து அந்நீரினைக் கொண்டு சிறுபோகம், காலபோகம் என இரண்டு போகங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வன்னேரிக் கிராமத்தில் 560 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். சுமார் 510 ஏக்கர் வயல் பரப்பு காணப்படுகிறது. 350 ஏக்கர்கள் குளத்து நீரினைக் கொண்டும் 160 ஏக்கர்கள் மழையை நம்பி பயிர் செய்யும் வயல்களாகக் காணப்படுகிறன. வன்னேரி யின் அன்றைய மக்கள் வானேரி என அழைத் தனர். மழை பெய்து வான்பாயும் சத்தம் வன்னேரி எல்லை வரை இரவு வேளைகளில் கேட்பதனால் வானேரி என அழைக்கப் பட்டது. இன்றைய காலத்தில் மருவி வன் னேரி என மாறி விட்டது.

குளத்தின் முன்பக்கமாக பதி முருகனின் தமையனான விநாயகப் பெரு மான் வீற்றிருக்கின்றார். கோவிலின் பின்புற முள்ள புளியம் மரத்தினை வெட்டிய போது குருதி வடிந்ததாகவும், குளத்திலுள்ள மருத மரத்தில் பிள்ளையார் உருவம் வளர்ந்ததாக கேள்விப்பட்டுள்ளேன். இவ்வாறு தெய்வீகத் தன்மை நிறைந்தது எனது கிராமம். குளத் தின் வெள்ளக்கரைப் பகுதியில் 6 மில்லியன் ரூபா செலவில் ஓர் சுற்றுலா விடுதி அமைக்கப் பட்டுள்ளது. குளிர் காலத்திலும், மழை காலத்திலும் வெளிநாட்டிலிருந்து பல்வேறு நிறங்களில் பறவைகள் வந்து செல்வதை நான் கண்டு மகிழ்ந்துள்ளேன். குளத்தின் நடுப்பகுதியிலும், கரைப்பகுதியிலும் மீனி னங்கள், சிங்கறால் வளர்ப்பும் நடைபெறு கின்றது.

குளத்தின் இருபுறமும் பச்சைக் கம்பளம் விரித்தாற்போல் புற்கள் வளர்ந்து காணப்படும். அணைக்கட்டின் இருபுறமும் மருதமரங்களின் நிழல் இனிமை தரும். குளத்திலிருந்து ஒரு கிலோ மீற்றர் கிழக்கே வரும்போது வேலவனின் அழகைக்கண்டு மெய்யுருகி நிற்பீர்கள்; எவ்வாறு கூறுவது வேலவனின் அழகை. 2016ம் ஆண்டு கட்டுமானப்பணி ஆரம்பமாகி 2017ம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

வேலவனின் அழகைக் காண பல்வேறு மாவட்டங்களில் இருந்து வருகை தருகின்றனர். ஸ்ரீ முருகனின் திருக்கல்யாண வைபவம் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். வேலவனின் அழகு, அமைவிடம் என்பனவற்றைப் பற்றி "ஸ்ரீ முருகன் அழகைக் காண வன்னேரி வாருங்கள், வேலவனின் அழகைக்கண்டு மெய்யுருகி நிற்பீர்கள்" எனப் பாடல்களும் எழுந்துள்ளன.

ஆலயத்தின் பின்புறம் வயல் வெளி களாலும் வடக்கும் தெற்கும் தேம்படு பனையின் வரிசையான வளர்ச்சி தனியழகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துரைக்கும். கிராமத்திற்கு பொதுவாக 3 பாடசாலைகளும், 4 முன்பள்ளிகளும், தபாலகமும், பொது மண்டபமும், கணனிக் கற்கை நிலையங்களும் காணப்படுகின்றன. இவற்றின் மூலம் மாணவர்களின் ஒழுக்கத்தையும் நல்லறிவையும் பெறக் கூடிய வகையில் ஒழுங்கமையப் பெற்று அழகுறக் காட்சியளிக்கின்றது.

கிராம உத்தியோகத்தராக ப.சுயந்தன் அவர்கள் விளங்குகின்றார். வன்னேரியின் வளர்ச்சிக்கும் செழிப்புக்கும் அரும்பாடுபட்டு உழைக்கும் இளைஞனாக இருக்கின்றார். வன்னேரிக்கு என சிறுவர் கழகமும், வன்னேரி விளையாட்டுக் கழகமும் கொண்டு செழிப்புடன் வளருகின்றது. எனது கிராமம் வன்னேரியின் எல்லைக்கும் ஆனைவிழுந்தான் எல்லைக்கும் பொது வாக முத்துமாரி அம்மன் அமைந்துள்ள அகல விரிந்த கிளைகளைப் பரப்பி குளுகுளு நிழலைத் தரும் ஆலமரத்தின் கீழ் அமைந்துள்ள அவ்வாலய அம்மனுக்கும் ஆலமரத்திற்கும் ஒரே வயது என ஆலய பூசகர் திருக்குமரன் ஐயா அவர்களிடமிருந்து அறிந்துகொண்டேன்.

வனப்பகுதிக்கும் ஊர் பகுதிக்கும் எல்லையாக மண்டக்கல் ஆறு ஓடுகின்றது. ஆற்றின் அருகாமையில் வேள்வி உற்சவம் நடைபெறும் காட்டு ஐயனார் கோவில் அமைந்துள்ளது. மண்டக்கல் ஆறு என்றதும் ஞாபகம் வருவது நானும் எனது நண்பர்களும் ஆற்றின் அருகில் இருக்கும் நாவல் மரத்தில் ஏறிப்பாய்ந்து குளித்தது மறக்கமுடியாத ஞாபகமாக இருக்கின்றது. அணைக்கட்டின் இரு பகுதிகளும் கொடிகளினால் சூழப் பட்டிருக்கும்.

இத்தகைய வளம்மிக்க வன்னேரியை வைத்தியர் முருகானந்தம் ஐயா அவர்கள் இக்கிராமம் வன்னேரி அல்ல பொன்னேரி எனக் கூறினார்.

**வன்னேரியை எப்பொழுதும் வீழவிடாது**
**பொன்னேரியாக வைத்திருப்போமாக**

**இ. சுஜீபன்**
**தரம் – 11**

**இந்த வாழ்வின் ஆகச் சிறந்த கேளிக்கை கொண்டாட்டம்**
**ஓசையின்றி நடக்கிறது அதுதான் புத்தக வாசிப்பு**
**– எமர்சன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்துல் கலாம்

அப்துல் கலாம் அவர்கள் 1931ம் ஆண்டு அக்டோபர் மாதம் 15ம் நாளில் ஒரு படகுச் சொந்தக்காரரும் மரைக்காயரும் ஆன ஜைனுலாபதீன் அவர்களுக்கும் இல்லத்தரசி ஆஷியம்மா அவர்களுக்கும் தென்னிந்திய மாநிலமான தமிழ்நாட்டில் உள்ள இராமேஸ்வரத்தில் மகனாகப் பிறந்தார்.

அவர் வறுமையான பின்னணி யிலிருந்து வந்தவர் ஆனதால் இளம் வயதி லேயே, அவருடைய வீட்டு வருமானத் தேவைக்காக வேலைக்கு செல்ல ஆரம் பித்தார். அவர் பல மத சூழ்நிலையில் வளர்க் கப்பட்ட ஒருவர் ஆவார். எனினும் அவர் ஒரு மத வழக்கத்தையே பின்பற்றினார். பள்ளி முடிந்ததும் கலாம் அவரது தந்தையின் வருமானம் பொருட்டு செய்தித் தாள்கள் விநியோகம் செய்தார். தனது பள்ளிப் பருவத்தில் கலாம் சராசரி மதிப்பெண்களே பெறுவார். எனினும் பிரகாசமான மாண வனாகவும் கற்பதில் திடமான ஆர்வமும், படிப்பிற்காக முக்கியமாக கணக்கு பாடத்திற் காக பல மணி நேரங்கள் செலவழிப்பவ ராகவும் அவர் சித்தரிக்கப்படுகிறார்.

இவர் இராமேஸ்வரம் தொடக்கப் பள்ளியில் தனது பள்ளிக் கல்வியை முடித்த பின்னர், கலாம் திருச்சிராப் பள்ளியிலுள்ள தூய வளன் கல்லூரியில் சேர்ந்து 1954ம் வருடத்தில் இயற்பியில் பட்டம் பெற்றார். இவருக்கு பின்பு இயற்பியல் பாடம் பிடிக்காது. 1995ம் ஆண்டு எம்.ஐ.டி சென்னை விண்வெளி பொறியியல் படிப்பிற்காக சென்னை சென்று அங்கு முதுகலை பட்டம் பெற்றார். இவ்வாறு சென்னையில் 1960இல் படிப்பை முடித்த கலாம் பல புகழ்மிக்க முனைவர் பட்டங்கள் பல பெற்றுள்ளார். கலாம் பாதுகாப்பு ஆராய்ச்சி அமைப்பின் வானூர்தி அபிவிருத்தி அமைப்பு பிரிவின் முதன்மை அறிவியலாளராக சேர்ந்து, இந்திய இராணுவத்திற்காக ஒரு சிறிய ஹெலி கப்டரை வடிவமைத்து தனது பணித் துறையை ஆரம்பித்தார். இங்கு மட்டும் பதவி யினை கலாம் ஆற்றவில்லை. புகழ்பெற்ற விண்வெளி அறிவியலாளர் விக்ரம் சாராபயின் கீழ் இயங்கி வந்த ஒரு குழுவின் அங்கமாகவும் கலாம் இருந்தார். அங்கே பணியாற்றிய அவர் 1969ம் ஆண்டு இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்திற்கு மாற்றப்பட்டு பல்வேறு சாதனைகளை நிகழ்த் தினார். அவற்றிற்கு உதாரணமாக எஸ்.எல்.வி. திட்டம் (1980) கருதப்படுகிறது. எஸ்.எல்.வி. திட்டத்தின் பின்னர் தான் கலாம் தான் யாரென்றே உணர்ந்தார். இவ்வாறு விஞ்ஞானத் துறையில் கலாம் பல நிகழ்வுகளை நிகழ்த்தியுள்ளார்.

கலாம் இந்தியாவின் முக்கிய கட்சிகளான இந்திய தேசிய காங்கிரசு மற்றும் பாரதிய ஜனதா கட்சியின் ஆதரவுடன் 2002ம் ஆண்டில் லட்சுமி சாகலையை தோற்கடித்து இந்திய குடியரசுத் தலை வரானார். இவர் பாட்னா அஸ்தினாபூரியில் உள்ள இந்திய மேலாண்மை நிறுவன வருகைப் பேராசிரியராகவும் திருவனந்தபுர இந்திய விண்வெளி அறிவியல் தொழிநுட்ப நிறுவனத்தின் வேந்தர் ஆகவும், சென்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா மற்றும் ஜே.எஸ்.எஸ். மூர்த்தி மைசூர் பல்கலைக்கழகத்தின் பேராசிரியராகவும் திகழ்ந்தார்.

கலாம் இந்தியா 2020 என்ற புத்தகம் ஊடாக இந்தியாவை வளரும் நாடாக மாற்ற முனைந்தது தொடர்பில், பாரத ரத்னா விருதினைப் பெற்றார். இவர் இந்திய ஊழலை தவிர்க்க என்ற இயக்கத் தையும் தோற்றுவித்த ஒருவராவார்.

இவ்வாறு பல சேவைகளை ஆற்றிய கலாம் ஜீலை மாதம் 27ம் திகதி 2015ம் ஆண்டு இந்தியாவின் மேகாலயா மாநிலத் தலைநகரான ஷல்லாங்கில் இந்திய மேலாண்மை கல்வி நிறுவனத்தில் மாணவர்களிடையே உரையாற்றுகையில் (மாலை சுமார் 6.30 மணியளவில்) மயங்கி விழுந்தார். தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டும் சிகிச்சை பலனின்றி ஆ.ப.ஜெ. அப்துல் கலாம் மரணமானார்.

**சு. விதுசன்**
**தரம் – 09**

**எதிலும் நீ நினைப்பதை செய்! அதற்காக...**
**நீ நினைப்பது அனைத்தும் சரியென எண்ணிவிடாதே!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகு நிலாவும் நட்சத்திரங்களும்

பெரியவர் ஒருவரிடம் வந்த ஒருவன் "நான் அழகு நிலா என்ற பெயரில் உணவு விடுதி நடத்தி வருகிறேன். என்னால் இயன்ற அளவு தரமான உணவை சுவையாக சமைக்கிறேன். சேவை எண்ணத்துடனேயே விடுதியை நடத்தி வருகிறேன்.

இருந்தாலும் என் விடுதிக்கு வாடிக் கையாளர்கள் அதிகம் வருவது இல்லை. எனக்கு என்ன செய்வது என்று தெரியவில் லை. நீங்கள்தான் வழி சொல்ல வேண்டும் என்று வேண்டினான்.

சிந்தனையில் ஆழ்ந்த அவர் "உன் உணவு விடுதியின் பெயரை மாற்றிவிடு எல்லாம் சரியாகிவிடும்" என்றார். பல ஆண்டு காலமாக அதே பெயரில் உணவு விடுதி உள்ளது. அந்தப் பெயர் மக்கள் எல்லோருக்கும் தெரியும். அதனால் பெயரை மாற்ற இயலாது.

"நீ அதன் பெயரை மாற்றித்தான் ஆக வேண்டும். நான் சொல்லுவது போல பெயர் வை. மூன்று நட்சத்திரங்கள் படம் மேலே இருக்கட்டும். கீழே "நான்கு நட்சத்திரங்கள் உணவு விடுதி" என்று பெயர்வை. மேலே மூன்று நட்சத்திரங்களின் படம் கீழே நான்கு நட்சத்திரங்கள் என்று எழுதினால் முட்டாள் தனமாக இருக்காது.

"நான் சொல்வது போல ஒரே ஒரு முறை சோதனை செய்துபார்" என்றார் அவர். சரி அப்படியே செய்கிறேன் என்றான் அவன். தன் உணவு விடுதியின் முகப்பில் மூன்று பளபளக்கும் நட்சத்திரங்களின் ஓவியமும் கீழே நான்கு நட்சத்திரங்கள் என்று பெரிய எழுத்தில் எழுதினான். அந்த வழியாக சென்ற பலரும் அதனை பார்த்தார்கள். அதில் உள்ள தவறு தெரிந்தது. தங்களை தவிர யாரும் அதைப் பார்க்கவில்லை என்று நினைத்தார்கள். தவறை சுட்டி காட்டுவதற் காக அந்த உணவு விடுதிக்குள் நுழைந் தார்கள். உள்ளே சென்றதும் விடுதிக்காரர் தந்த வரவேற்பில் மகிழ்ந்தார்கள். சில உணவுகளை உண்டார்கள். உணவு அவர்களுக்கு மிகவும் பிடித்தது. இப்படியே குறை சொல்வதற்காக வந்த பலரால் விடுதிக்காரருக்கு நல்ல முறையில் வணிகம் நடந்தது.

ச.சரணியா
தரம் – 07

**தான் தூக்கிலிடுவதற்கு ஒரு நிமிடம் முன்புவரை வாசித்துக்கொண்டு இருந்தவர்**

**– பகவத்சிங்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிப்பாடல்கள் சொல்லும் ஒழுக்கங்கள்

நீதிப்பாடல்கள் செம்மொழியான தமிழில் மிக முக்கியமான ஒன்றாகும். நீதிப் பாடல்களை நீதி நூலில் காணலாம். ஒழுக்க கருத்துக்களை கூறும் நீதி நூல்களின் மூலம் பாடல்களின் வாயிலாக எடுத்துக் கூறலாம்.

நீதி நூல்களாக திருக்குறள், நாலடியார், நாண்மணிக்கடிகை, பழமொழி நானூறு, ஐம்பெருங்காப்பியம், ஐஞ் சிறுகாப்பியம், முதுமொழிக்காஞ்சி எனப் பல நீதிநூல்கள் நீதிக் கருத்துக்களைக் கூறுகின்றன. இதனை ஒவ்வொன்றாக நோக்குவோமானால்,

திருக்குறள் உலகப்புகழ் பெற்ற தமிழ் இலக்கியமாகும். இதனை இயற்றியவர் திருவள்ளுவர் ஆவார். இதில் 1330 குறள்கள் பத்துப் பத்தாக 133 அதிகாரங்களில் தொகுக்கப் பெற்றுள்ளன. இது அடிப்படையில் ஒரு ஒப்பரிய வாழ்வியல் நூலாகும். மாந்தர்கள் தம் அகவாழ்விலும் சுமுகமாகக் கூடிவாழும் இசைவுடனும் நலமுடனும் வாழத்தேவையான மாறா அடிப்படைப் பண்புகளை விளக்குகிறது. இந்நூல் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பெரும் பிரிவுகளாக பிரித்தும் அழகுடனும் இணைத்து கோர்த்தும் விளக்கும் பேரழ குடைய இலக்கிய படைப்பாகும்.

திருக்குறள் இயற்றப்பட்ட காலம் சரியாக தெரியவில்லை. இந்நூல் ஏறக்குறை 2000 ஆண்டு பழமையானது என்று கருதப்படுகிறது. மறைமலை அடிகள் செய்த ஆராய்ச்சியின் பயனாய் தமிழ் நாட்டில் ஆண்டுகளைக் குறிக்க திருவள்ளுவர் ஆண்டும் பயன்படுத்தப்படுகின்றது. திருவள்ளுவர் ஆண்டு என்பது பொது ஆண்டோடு 31 ஆண்டுகள் கூட்டப்பட வேண்டும். பழந்தமிழ் இலக்கியங்கள் 04 உள்ளன. அவை எட்டுத் தொகை பத்துப் பாட்டு அடங்கிய

1. பதினெண் மேல்கணக்கு
2. பதினெண் கீழ்க்கணக்கு
3. ஐம்பெருங்காப்பியங்கள்
4. ஐம்சிறுங்காப்பியங்கள்

ஆகியவையாகும். அவற்றில் பதினெண் கீழ்க்கணக்கு எனப்படும் பதினெட்டு நூல்களில் வரிசையில் முப்பால் என்னும் பெயரோடு திருக்குறள் விளங்குகின்றது. அறம், பொருள், இன்பம் என்னும் முன்று பால்களும் கொண்டமையால் முப்பால் எனப் பெயர் பெற்றது. முப்பால்கள் ஆகிய இவை ஒவ்வொன்றும் இயல் என்னும் பகுதிகளாக மேலும் பகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு இயலும் சில குறிப்பிட்ட அதிகாரங்களைக் கொண்டதாக விளங்குகின்றது. ஒவ்வொரு அதிகாரமும் 10 பாடல்களை தன்னுள்ளே அடக்கியது. இப்பாடல்கள் அனைத்துமே குறள் வெண் பா என்னும் வெண்பா வகையைச் சேர்ந்த வை. அக் காலத்தில் இவ்வகை வெண்பாக் களினாலாகிய முதல் நூலும் ஒரே நூலும் இதுதான். குறள் வெண்பாக்களால் ஆனமையால் குறள் வெண்பா என்றும் திருக்குறள் என்றும் இது பெயர் பெற்றது. பாயிரம் என்னும் பகுதியுடன் முதலில் அறத்துப்பால் வருகிறது. அதிலும் முதலில் காணப்படுவது கடவுள் வாழ்த்து என்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரமாகும். தொடர்ந்து வான்சிறப்பு நீத்தார் பெருமை அறம் வழியுறுத்தல் ஆகிய அதிகாரங்கள் அடுத்துவரும் இல்லறவியல் என்னும் இயலில் 25 அதிகாரங்கள் அடுத்துள்ள துறவியல் இயல்பில் 13 அதி காரங்களும் உண்டு.

திருக்குறள் கூறும் ஒழுக்கங்கள் ஒவ்வொன்றும் 133 அதிகாரங்களின் ஒவ்வொரு தலைப்பினூடாகவும் வெளிக் காட்டப்பட்டுள்ளது. உதாரணமாக ஒழுக்க முடைமை என்னும் அதிகாரத்தில் "ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரிலும் ஓம்பப்டும்" என்பதைக் கூறலாம். இவ்வாறு திருவள்ளுவர் மாந்தருக்கு அனைத்து வகையான கருத்துக்களையும், ஒழுக்கங் களையும் திருக்குறள் என்னும் நீதி நூலில் விளக்கியுள்ளார்.

இதே போன்று நீதிக்கருத்துக் களையும் ஒழுக்கங்களையும் ஈரடியில் சொன்ன திருக்குறளைப் போன்று நாலடியில் கருத்துக் கூறுகின்றது. இது பதினெண் கீழ்க்கணக்கு நூலாகும். வாழ்க்கையில் நடைபெறுகின்ற எளிமையான விடயங்களை உபமானமாகக் கையாண்டு நீதி புகட்டு கின்றது. ஒரு மனிதன் எவ்வாறு வாழ வேண்டும். வாழ்க்கையின் நிலையில்லாமை போன்றவையும் கூறுகின்றது. திருக்குறளும் நாலடியாரும் ஒரேமாதிரியான கருத்துக் களை வெளிக்காட்டுவதால் அதனை

"ஆலம் வேலும் பல்லுக்குறுதி
நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி"

என்பர்.

நாலடியார் கல்வியின் சிறப்பினை மக்க ளுக்கு உணர வைப்பதற்கும் அதன் முதன் மையைத் தெளிவுபடுத்தவும் பின்வரும் பாடலின் மூலம் விளக்குகின்றது.

**"குஞ்சி அழகும் கொடுத்தானைக் கோட்ட**
**–முகும்**
**மஞ்சள் அழகும் அழகல்ல**
**நெஞ்சத்து நல்லம்யாம் என்னும் நடுவு**
**நிலையால்**
**கல்வியழகே அழகு"**

என நாலடியார் கூறுகின்றது.

அடுத்து நாண்மணிக்கடிகை என்னும் நூல் நான்கு மணியான கருத்துக்களை மக்க ளுக்கு கூறுவதால் தான் நாண்மணிக்கடிகை என்னும் பெயர் பெற்றது.

பழமொழி நானூறு என்ற நூல் பழ மொழிகள் மூலம் சமூகத்திற்கு ஒழுக்கத்தை வலியுறுத்துகின்றது.

இதைவிட ஔவையார் அருளிய ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நால்வழி நாற்பது, ஞானக்குறள் போன்ற நீதிநூல்களும், அறக்கருத்துக்களையும் ஒழுக்கம் எவ்வாறு பேணப்பட வேண்டும் என்பதையும் கூறுகின்றது.

உதாரணமாக " ஆத்திசூடி - "அறஞ்செயவிரும்பு" எனவும்

கொன்றைவேந்தன் - "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" எனவும் கூறுகின்றது.

இவற்றை விட சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற ஐம்பெருங் காப்பி யங்கள் வாழ்க்கை நிலையில் லாமையும் முற்பிறப்பில் செய்த வினை மறு பிறவியிலும் தொடரும் எனவும் தர்மம் நிலை நாட்டப்படும் என்றும் பல கருத்துக்களை கூறுகின்றன. இதனை விட அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு கருத்துக்களையும் கூறுகின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றதும், யாக்கை, நிலை யில்லாமை என்பதையும் மணிமேகலை விளக்குகின்றது. இவ்வாறு பல ஒழுக்கங் களையும், கருத்துக் களையும் கூறும் நூல் கள் எண்ணற்றவை. அனைத்து நீதி நூல்களும் சமூகத்திற்கு ஒழுக்கக் கருத் துக்களை வழங்குவனவாக காணப்படுகின்றது.

**"நீதி நூல்கள் என்பதே நீதி மற்றும் ஒழுக்கங்களை கூறும் பாயிரம் ஆகும்"**

**க. நிருபன்**
**தரம் – 08**

# நீர் வளம் பேணுவோம்

நீர் ஒரு வளமாகும். உலகில் உள்ள அனைத்து உயிரினங்களுக்கு நீர் மிகவும் அவசியம். நீர் இல்லாமல் ஒரு நாள் கூட வாழமுடியாது. தற்போதைய காலத்தில் நீர் இல்லாமல் பல மிருகங்கள், பறவைகள் போன்ற பல உயிரினங்கள் இறக்கின்றன. மற்றும் குளம், கடல்கள், தடாகங்கள் என்பன வற்றுகின்றன. இதனால் வரட்சி, காட்டுத்தீ சில கிராமங்களில் நிலவுகின்றன. இதற்கெல்லாம் காரணம் இந்த ஊர் மக்களில் சிலர் மட்டுமே. ஏன் எனின் காட்டில் உள்ள மரங்களை வெட்டி அவற்றை விற்பனை செய்வதால் மழைவீழ்ச்சி குறைவடைந்து ஊரில் அனைத்து இடங்களிலும் வரட்சி ஏற்படுகின்றது. அதுமட்டுமன்றி காட்டுத்தீ போன்ற பல அனர்த்தங்களும் ஏற்படுகின்றது. இந்த அனர்த்தங்களை தடுக்க வேண்டும் என்பதற்காகவே கிளி/ ஐயனார்புரம் அ.த.க பாடசாலை மாணவர்கள் அனைவரும் வீடுகளிலும் பாடசாலைகளிலும் மா, தென்னை, கமுகு, பலா போன்ற பல மரக்கன்றுகளை நடுகின்றனர். அவர்களின் நோக்கம் மரங்களை வளர்த்து மழைவீழ்ச்சியைப் பெறுவதாகும்.

ஆனால் அவ்வூரில் உள்ளவர்களில் சிலர் தினமும் காட்டிற்குச் சென்று அங்குள்ள முதிரை, பாலை, வேம்பு, மா போன்ற மரங்களை வெட்டுகின்ற போதிலும் மரங்கள் கூடுவதில்லை குறைந்து கொண்டே போகின்றன. ஏன் எனின் மக்கள் மரத்தை சுலபமாக வெட்டிச் செல்கின்றார்கள். மாணவர்கள் நடும் மரங்களில் சில மரங்கள் வளரும் சில மரங்கள் வாடும் காரணம் சில மாணவர்கள் நீர் இறைக்க மாட்டார்கள் அதனால் வாடுகின்றது. இவ்வாறு குறைந்து போகின்றன. குறைந்து போவதால் இந்த ஊர் மக்கள் இறந்து விடுவார்கள். நீர் இல்லாமல் உயிர் வாழ முடியாது. எனவே மாணவர் ஆகிய நாமும் மரங்கள் வெட்டுவதைத் தடுத்து அவர்களையும் மரங்களை நட வைத்து அதில் இருந்து மழையை வர வைத்து அம் மழையில் இருந்து கிடைக்கின்ற நீரைச்சிக்கனமாக பேணி வாழ்வோம்.

**க. சிந்துஜன்**
**தரம் – 07**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துள்ளித்திரிந்த பள்ளி நினைவுகள்

தொடரூந்து பாதை தாண்டி
தொடக்க கல்வி பயில
கலைவாணி முன்பள்ளி
சென்றதை மறக்கவில்லை
கைவிரல் சூப்பிக்கொண்டு
முதல் நாள் அம்மாவின் பின்
ஓடியதையும் நான் மறக்கவில்லை

ஊர் நண்பியும் - முன்
பள்ளித்தோழியுமான
என் உற்ற உயிர் நண்பி
இது கச்சான் என்று
ஆமணக்கொட்டையை
உண்ணத்தந்ததும் நான் மறக்கவில்லை

கிளி/ஐயனார்புரம் அ.த.க பாடசாலையில்
ஆண்டு நான்கு படிக்கும்போது
ஆசிரியர் வேலை பார்த்து
வகுப்பாசிரியரிடம்
அடிவாங்கியதையும் நான்
இன்னும் மறக்கவில்லை

முன்பள்ளியும் பாடசாலையும்
பயின்று
நான் தேடிய நட்புகளையும்
என் ஆசிரியத் தெய்வங்களையும்
நான் படித்த என்னை வளர்த்தெடுத்த
என் பாடசாலையையும் - நான்
கடுகளவும் மறக்கவில்லை

வி. பிரசாளினி
தரம் – 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோர்கள்

**“பெற்றோரை பேணிடுவோம் – அவர் பெயர் விளங்க வாழ்ந்திடுவோம்.”**

பெற்றோர் நாம் முதலில் கண்ட தெய்வங்கள் ஆவார்கள். பெற்றோரை பேணிப் பாதுகாக்க வேண்டும். எத்தனையோ உறவுகள் இருந்தாலும் அன்னை என்ற உறவு ஈடு இணை அற்றது. தன் குழந்தையின் ஒவ்வொரு உணர்வுகளையும் புரிந்து செயற்படுவாள். தான் பசியுடன் பட்டினி இருந்தாலும் தன் குழந்தைக்கு எப்படியாவது உணவூட்டி வகை செய்வாள். எத்தனை குழந்தைகள் இருந்தாலும் அத்தனை குழந்தைகளுடனும் அன்பு காட்டி அரவணைத்து தாங்கும் அன்னைக்கு நிகர்யார் உள்ளார். தந்தை என்பவர் உழைத்து சம்பாதித்து குழந்தைகளை நெறிப்படுத்தி அவர்களின் முன்னேற்றத்திற்கு பக்க பலமாக இருப்பார். இவர்களது முதுமைக் காலத்தில் இவர்களைக் கவனித்து கொள்ளாத பிள்ளைகள், எவ்வளவு படித்தாலும் வசதி படைத்தவர்களாக பகட்டு வாழ்க்கை வாழ்ந்திருந்தாலும் அதனால் அவர்களுக்கு பெருமை இல்லை.

முற்றும் துறந்த ஆதி சங்கரரமும், விவேகனாந்தரும், தத்தம் தாயின் மேல் அன்பும் கருணையும் காட்டியவர்கள். பிள்ளைகள் தம்மை உருவாக்கிய தாய் தந்தையரை அவர்களது இறுதி வயதுவரை அன்பு காட்டி பராமரித்தலே பெரும் புண்ணியமாகும். முதியோர் இல்லங்களில் தம் பெற்றோரை சேர்த்து விடுவதும் அல்லது அவர்களது தேவையை அறியாது அவர்களை வேதனைப்படுத்துவதால் அவர்கள் தாமாகவே முதியோர் இல்லங்களை தேடிச் செல்லும் நிலையினை ஏற்படுத்தி விடுவதும் கொடிதினும் கொடியது. அன்னை யும் பிதாவும் முன்னறி தெய்வம், ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்ற வாக்கியத்திற்கேற்ப ஒரு காலத்தில் நிஜ உலகின் கடவுளாகிய பெற்றோரை வணங்கினோம். பெற்றோருக்கு அடுத்த படியாகத் தான் தெய்வத்தை நினைக்கக் கூடிய இலக்கியங்களும், புராணங்களும் உள்ளன. பெற்றோர் தமது பிள்ளைகளுக்காக தம் வாழ்நாளில் பெரும்பகுதியை கழித்தனர். பிள்ளைகளுக்காக தன் கணவனை இழந்தவர்களும் கணவனால் கைவிடப்பட்ட கைம் பெண்களும் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். சிறு வயதிலே மனைவியை இழந்து மறுமணம் செய்யாமல் குழந்தைகளை வளர்த்து ஆளாக்கும் தந்தைகளும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

தாயிற்சிறந்தவொரு கோயிலும் இல்லை தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை. தந்தையே அன்பின் எல்லை என்ற பாடல் வரிகள் பெற்றோருக்கு பெருமை சேர்க்கும் வகையில் அமைந்துள்ளன. ஓர் அன்னை பிரசவ காலத்திலும் தன் உடல் நலத்தை விட தன்னுள் உருவான கருவின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் தருகிறாள். பத்துமாதங்கள் கருவில் சுமந்து தனக்குப் பிடித்த, பிடிக்காத உணவுகளைச் சாப்பிட்டு தூக்கத்திலிருந்து புரண்டு படுக்க முடியாமல் மனதில் நல்லெண்ணங்களை வளர்த்து கடவுள் நம்பிக்கையோடு குழந்தையை வளர்ப்பதற்கு, இரவு தூக்கத்தை தொ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லைத்து பசியை மறந்து, அழகை இழந்து, தன் குழந்தையின் நலனை கருத்திற் கொண்டு வாழ்கின்றாள். தந்தை பிள்ளை களை தோளில் சுமந்து பிள்ளைகளின் தேவை களைப் பூர்த்தி செய்து கேட்டவற்றை வாங்கிக் கொடுப்பார். குழந்தையை அன்னை மடியில் தாங்குவது போல தந்தை குழந்தை களை மார்பில் தாங்கி எம்மை நெறிப்படுத்தி ஊக்குவிப்பார். சிறுவயதிலிருந்தே நாம் பெற்றோர் சொல் கேட்பவர்களாகவும் அவர் களது பெயர் விளங்க அவர்களை மதித்து நடக்க வேண்டும். பெற்றோரை வேதனைப் படுத்துவது பெரும்பாவம். அவர்களது ஆசீர்வாதமே பிள்ளைகளது வாழ்விற்கு சிறந்த அருள்.

**"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான்**
**மண்ணில் பிறக்கையிலே**
**அவன் நல்லவனாவதும் தீயவனாவதும்**
**பெற்றோர் வளர்ப்பினிலே" -**

என்ற சினிமாப்பாடல்

பெற்றோர் தம் கடமையை பறை சாற்றுகின்றது. பிள்ளைகள் பெற்றோரது வளர்ப்புக்கு கீழ்ப்படிந்து நடந்தால் தான் 'நல்ல பிள்ளை' என்ற பெயரை பெறமுடியும்.

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? என்ற பழமொழி கூட சிறு வயதி லிருந்தே நல்ல பழக்கவழக்கங்களைப் பயில வேண்டும் எனக் கூறுகின்றது.

எனவே பெற்றோருக்கு கீழ்ப்படிந்து, வணங்கி, உதவிசெய்து, ஆடம்பர செலவு களைக் குறைத்து புரிந்துணர்வுடன் நடப் போம்.

'மகன் தந்தைக்காற்றும் உதவி
அவையத்து முந்தியிருப்பச் செயல்'
'கல்வியில் உயர்வோம்
வளமதை சேர்ப்போம்
நாளைய உலகை
நமதாக்கிக் கொள்வோம்.'

ல. சரண்யா
தரம் – 08

**ஒரு கோடி ரூபாய் கிடைத்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்டபோது ஒரு நூலகம் கட்டுவேன் என்றவர்**

**–மகாத்மாகாந்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியத்தொழிலின் முக்கியத்துவம்

இன்றைய உலகில் பல்வேறு தொழில்கள் காணப்பட்டாலும் ஆசிரியர் தொழிலானது மாணவர் சமுதாயத்திற்கு அறிவூட்டுவதனால் அது ஏனைய தொழில்களை விட முற்றிலும் வேறுபட்டதாகவும் மேன்மையானதும் புனிதமானதும் சுயநலம இல்லாத தொழிலாக கருதப்படுகின்றது. அது மட்டுமல்ல எந்தவொரு ஆசிரியரும் தன்னை விட உயர்ந்து விட்டார்களே என்று பொறாமைப்படாத தொழில் ஆசிரியர் தொழில் மட்டும்தான். ஆசிரியர்கள் அனைத்து மாணவர்களையும் சமமாக கருதி தங்களிடம் கல்வி கற்கின்ற மாணவர்கள் கல்வியிலும் அறிவிலும் உயர்ந்தவர்களாக வரவேண்டும் என அவர்களுக்கு ஏணிப்படிகளாகவும் வழிவாட்டிகளாகவும் விளங்குகின்றனர். ஆசிரியர்கள் தமது நேரத்தை மாணவர்களது வளர்ச்சிக்காகவே அர்ப்பணிக்கின்றார்கள்.

மாணவர்கள் ஆசிரியர்களின் அளப்பரிய சேவையினை பெற்று வைத்தியத் துறை, தொழில்நுட்பத்துறை, நாடகத்துறை, அறிவியல்சார் துறை, விஞ்ஞானத்துறை எனப் பலதரப்பட்ட துறைகளில் முன்னேறிச் சென்று தம்மை வளப்படுத்திக் கொள்கின்றார்கள். இவ்வாறு மாணவர்களது வளர்ச்சிக்குக் காரணமாக அமைவது ஆசிரியர்களது தனிப்பட்ட கரிசனையும் அர்ப்பணிப்பான சேவையும் எனக் கூறினால் அது மிகையாகாது. ஆசிரியர்கள் தமது வாழ்நாள் முழுவதையும் பல்லாயிரக்கணக்கான மாணவர்களது அறிவுக்கண்களை திறந்து வைத்து அறிவூட்டி வருகின்றார்கள்.

இம் மாணவர்கள் கல்வி கற்று பிற்காலத்திலேஉயர்ந்த நிலைக்கு சென்று கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறு உயர்ந்த நிலைக்குச் செல்வதற்கு ஆசிரியர்களது அளப்பரிய சேவை மிகவும் பெருமளவில் உயர்ந்த நிலையில் இருந்து பங்களிப்பு செய்து கொண்டிருக்கின்றது.

ஆசிரிய சேவையானது ஒவ்வொரு மனிதரினதும் தனி ஆளுமை விருத்தியுடனும் தொடர்புபட்டது. அவர்களது சுயநலமில்லாத சேவை காரணமாக நாம் பல்வேறுபட்ட ஆளுமைப் பண்புகளை வகுப்பறையில் கற்றலினூடாகக் கற்றுக் கொள்கின்றோம். ஆசிரியர்கள் கற்பிக்கும் போது தமது ஆளுமைப்பண்புகளை மாணவர்களுக்கு புகட்டுகின்றார்கள். மாணவர்களாகிய நாங்கள் அவற்றினை பின்பற்றி வளர்ச்சியடைகின்றோம்.

எதிர்காலத்தில் நாம் பல்வேறுபட்ட துறைகளில் விற்பன்னர்களாக மாறுவதற்கு நாம் பெறும் கல்வியே காரணமாகவும், அடிப்படையாகவும் அமைகின்றது. எதிர்காலத்தில் நாம் கல்வி கற்ற ஆசிரியர்களது பெயர்களை பெருமையாக கூறி எதிர்கால சமுதாயத்திற்கு நன்றியுடையவர்கள் ஆகவும் அவர்களுக்கு முன்மாதிரி யாகவும் நாம் திகழ வேண்டும். அதுவே நாம் ஆசிரியர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளும் சேவைக்கு நாம் செய்யும் கைம்மாறாகும்.

ஆசிரியர்கள் செய்யும் தியாகங்களுக்கு அவர்களையும் அவர்களது சேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யையும் போற்ற வேண்டும் என்பதற்காகத் தான் ஒக்டோபர் மாதம் ஆறாம் திகதி (10.06) ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டு வரு கின்றது.

எனவே மாணவர்களாகிய நாமும் ஆசிரியர் தினத்தில் மட்டுமல்ல என்றும் அவர்களை போற்றிப் பாராட்ட வேண்டும். ஆசிரியர்களின் சேவையையும் அர்ப்பணிப் பையும் உயர்ந்த நிலைக்குச் சென்ற பின்னரும் அவர்களை பாராட்டக் கூடியவர் களாகவும் மதிக்கக் கூடியவர்களாகவும் அவர்களை நெஞ்சில் நிறுத்தி வைக்கக் கூடியவர்களாகவும் நாம் இருக்க வேண்டும்.

S. லதுர்சனா
தரம் – II

**எதிலும் குறை காண்பவர்களுக்கு ரசிக்க தெரியாது –**
**எதையும் ரசிப்பவர்களுக்கு குறைகளே தெரியாது**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன தொடர்பாடலும் அதன் நன்மைகளும் தீமைகளும்

நமது உயிர் வாழ்க்கைக்கு பெரிதும் உதவுவனவாக விளங்குவது மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்பொறிகளாகும். எமது வாழ்க்கையின் இன்பத்திற்கும் நுகர்ச்சிக்கும் பெரிதும் உதவியாய் அமைவது கண்ணும் காதும் ஆகும். நாம் செவிகளால் எமது மனதிற்கு இன்பம் தரும் பல்வேறு நிகழ்ச்சிகளைக் கேட்கிறோம். எம்முடைய விழியால் எவரும் காண முடியாத அரும் பெரும் காட்சிகளைப் பார்க்கிறோம். இவற்றிற்கு எல்லாம் மூலதனமாக அமைவது கட்புல செவிப்புல தொடர்பு சாதனங்களாகும்.

இன்றைய நவீன உலகிலே கட்புல செவிப்புல சாதனங்களில் வானொலி, தொலைக்காட்சி, இணையம் போன்ற தொடர்பு சாதனங்களும் பல துணை புரிகின்றன.

நவீன தொடர்பு சாதனங்களில் வானொலி மிகவும் முக்கியமானது. வானொலியை எழுதப்படிக்கத் தெரியாதோராலும் விரும்பப்படும் அறிவுசாதனமாக திகழ்கிறது. வானொலி மூலம் அறிவும் இரசனையும் பெற்றோர் பலர் உளர். வானொலிகள் உள்நாட்டுச் செய்திகள், வெளிநாட்டுச் செய்திகள், வர்த்தக வாணிபச் செய்திகள் போன்றன உடனுக்குடன் ஒலிபரப்பப்படுகின்றன. இவற்றிற்கு மேலதிகமாக மாணவர்களைக் கல்வி வளர்ச்சியில் மேம்படுத்துகின்றன. பல்வேறு கல்வி ஒலிபரப்பு நிகழ்ச்சிகளையும் நடத்துகின்றன. சுருங்கக்கூறின் கற்றார்க்கும் கல்லார்க்கும் களிப்பருளும் ஒரு கருவியாக திகழ்கிறது எனலாம்.

இன்று உலகில் மிக பிரபலம் பெற்ற தொடர்பு சாதனமாக தொலைக்காட்சி முன்னணியில் திகழ்கிறது. இது கட்புலன் செவிப்புலன் இரண்டிற்கும் விருந்தளிக்கும் சாதனமாக கருதப்படுகிறது. வானொலி மூலம் நிகழ்ச்சிகளை கேட்டு இன்புறலாம். ஆனால் தொலைக்காட்சி மூலம் நாம் பார்த்தும் கேட்டும் பயன் பெறலாம்.

குழந்தைகளிடம் அன்பாக இருப்பது எப்படி என்பதில் ஆரம்பித்து அணுகுண்டு தயாரிப்பது எப்படி என்பது வரை எழுத்துக்களாகவும் எண்களாகவும் படங்களாகவும் ஒலிப் பேழைகளாகவும் ஒளிச் சுருள்களாகவும் இத்தகவல்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. சுருக்கமாகச் சொன்னால் வற்றாத சுரங்கங்களின் தொகுப்பே இணையம் ஆகும்.

இன்று உலகம் முழுவதையும் ஒரே வலைப்பின்னலில் இணையம் இணைந்துள்ளது. உலகம் முழுவதையும் ஒருவர் தமது வீட்டினில் அமர்ந்து கண்டும் கேட்டும் இன்புறத்தக்க சாதனங்கள் உருவாகிவிட்டன. இச் சாதனங்களால் மனித சமுதாயம் பல்வேறு நன்மையடைந்து வருவருது உண்மையே. இவற்றில் சில தீமைகள் ஏற்படுகின்றன.

குறிப்பாக மனித வாழ்வை நாசமாக்கும் மதுபானங்கள், சிகரெட் போன்ற வற்றைப் பற்றிய விவரங்களைக் குறிப்பிடலாம். இத்தகைய இளஞ்சந்ததியினர் தவறான வழிகளில் செல்லவும் தங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்கால வாழ்வை பாழாக்கி கொள்ளவும் வழியேற்றப்படுகிறது.

நவீன சாதன தொடர்பு சாதனங்கள் தங்கள் பிரசார நோக்கில் மக்கள் கவனத்தை தற்கொலை, கொள்ளை சமுதாய சீர்கேடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றனர். தம் வாழ்வையும் கெடுக்கிறார்கள்.

நவீன சாதன தொடர்புகள் சமூகத்திற்கும் நன்மை தரும் அம்சங்களுக்கு முக்கியம் அளிக்க முன்வரவேண்டும். இன்றைய நிலையில் இது மிகமிக அவசிய மாகிறது. இன்பப் பொழுதுபோக்கு உணர்வை வளர்ப்பதைத் தவிர்த்துச் சமூகத்துக்குப் பயன்தரும் அறிவு, கலை, பண்பாடு, பாரம்பரியம் என்பவற்றைப் பேணும் உணர்வுகளை வளர்க்கும் நிகழ்ச்சிக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும்.

**க. தரணிகா**
**தரம் – 09**

# அது எது?

சாதிமத பாகுபாடு பார்க்கும் மனிதகுலம்
பாகுபாடு பார்க்காத ஒரு வளம் அது!

உறவுகள் விட்டுச்சென்றாலும்
விட்டுச்செல்லாது அது!

ஆயிரம் கப்பல் மூழ்கினாலும்
மூழ்காது அது!

கலங்கரை விளக்கு அணைந்தாலும்
அணையாது அது!

உயிரின் அடையாளம் இதயம் எனில்
வாழ்வின் அடையாளம் அது!

ஆலயத்தில் ஆண்டவன் வாழ பள்ளியில்
வாழும் அது!

அது எது? என்றும் விடைகொடுக்காத
கல்வி எனும் விடியல் அது!

**சி. சுரேந்திரன்**
**தரம் – 11**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கியமான உணவு

உணவின் மூலம் உடலின் தொழிற்பாட்டிற்கும் உடல், உள வளர்ச்சிக்கும் அவசிய போசனைப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடியும். எல்லா வகை உணவுகளும் சிற்சில போசணைப் பொருட்களைக் கொண்டுள்ளன. ஆனால் ஒரு உணவு எல்லா வகையான போசணைப் பொருட்களையும் கொண்டு இருப்பதில்லை. எனவே தினமும் பல வகையான உணவு களை உட்கொள்ளுவதனால் உடலுக்கு அவசியமான எல்லா வகையான போசணைப் பொருட்களையும் அவசியமான அளவுகளில் உள்ளடக்கிய உணவு வேளை ஆரோக்கியமான உணவு வேளை என அறிமுகப்படுத்தப் படுகின்றது.

மரக்கறிகளிலும், பழங்களிலும் அடங்கியுள்ள சில விற்றமின்களும் கனியுப்புக்களும், நோய் எதிர்ப்பு சக்திகளாகப் பயன்படும். நோய் எதிர்ப்பு சக்தி என்பது உடலில் நடைபெறுகின்ற வெவ்வேறு இரசாயனத் தொழிற்பாடுகளினால் உற்பத்தி செய்யப்படுகின்ற சில தீங்கு விளைவிக்க கூடிய பொருட்களை அழித்தொழிக்கக் கூடிய இரசாயனப் பதார்த்தங்களாகும்.

நோய் எதிரப்பு சக்தியை தடுப்பதற்கு மரக்கறிகள், பழங்கள், இலை வகைகள், தானியமும் பருப்பும், எண்ணெயுடனான விதை வகைகள், வாசனைச் சரக்குகள் என்பன உதவுகின்றன. சில மரக்கறிகள் அதாவது பீட்றூட், கத்தரிக்காய், மஞ்சள், வற்றாளை, கிழங்கு, தக்காளி, பூசணிக்காய், முள்ளங்கி, கோவா, சிறகவரை, வெண்டிக்காய், வாழைப்பொத்தி போன்ற மரக்கறிகளை உண்ண வேண்டும்.

நாம் பழங்களையும் உண்ண வேண்டும். பழங்கள் உணவைச் சமிபாடடைய வைக்கும். அதாவது பழங்களில் பப்பாசி, மாதுளை, அன்னாசி, தோடம்பழம், வத்தரிப் பழம், வட்டர் புரூட், கொய்யாப்பழம், மாம் பழம், தேசிக்காய், அப்பிள், முந்திரிகைப் பழம் என்பவற்றை அன்றாட உணவில் சேர்க்க வேண்டும்.

இலைகளில் அகத்தி, முளைக்கீரை, வல்லாரை, முருங்கை இலை என்பவை நாம் அன்றாடம் உணவில் சேர்க்க வேண்டும். தானியம், பருப்பு முதலியவை உணவில் மிகவும் போசனையைத் தருகின்றன. அதாவது குறனல் அரிசி, பருப்பு, சோளம், கடலை, பயறு, கௌபி என்பனவும் அடங்கும்.

எண்ணெயுடனான விதை வகைகளில் மரமுந்திரிகைப் பருப்பு, நிலக்கடலை என்பனவும் வாசனைச் சரக்குகளில் இஞ்சி, பூடு, கறிவேப்பிலை, கறுவா, கராம்பு என்பவற்றையும் சேர்க்க வேண்டும்.

உணவுப்பிரிவுகள் ஆறு உண்டு. ஒவ்வொரு உணவுப் பிரிவுகளும் அவ் உணவுப் பிரிவுகளுக்கான உணவுகள் மற்றும் உணவுகளினால் நிறைவேற்றப் படும் பிரதான தொழிற்பாடுகள் நிறைய உள்ளன.

பிரிவு ஒன்றில் சோறு, குரக்கன், திணை, சோளம் போன்றவை உள்ளடங்கிய தானியங்கள். கோதுமை மா மற்றும் அரிசிமா அடங்கிய உணவுகள் மற்றும் கிழங்கு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றாளை போன்றவை உடலின் நித்திய தொழிற்பாட்டிற்கு அவசியமான சக்தியை வழங்கும். பிரிவு இரண்டில் மரக்கறிகள் மற்றும் கனியுப்புக்களையும் வழங்கும். இது மட்டுமல்லாது நோய் நொடிகளில் இருந்து பாதுகாப்பைத் தரும். பிரிவு மூன்றானது பழங்களை மட்டும் கொண்டது. அதுவும் பிரிவு இரண்டைப் போன்று விற்றமின் மற்றும் கனியுப்புக்களை வழங்கும் நோய் நொடி களிலிருந்து பாதுகாக்கும்.

ஆனால் பிரிவு நான்கு மாமிசமாகக் காணப்படுகின்றது. மீன், முட்டை, பருப்பு மற்றும் விதை வகைகள், அவரை வகைகள் இறைச்சி, கருவாடு போன்றவை புரதத் தையும் மற்றும் உடல் வளர்ச்சிக்கும் மற் றும் அவற்றைப் பேணிப் பாதுகாப்பதற்கும் அவசியமாகும்.

பிரவு ஐந்து பால் மற்றும் பால் உணவுகள் கொண்ட கூட்டம். இக் கூட்டம் புரதத்தை வழங்கும், அதுமட்டுமல்லாது கல்சியம் போன்ற அவசியமான கனியுப் புக்கள் மூலம் எலும்புகளின் வளர்ச்சிக்கும், இயங்குவதற்கும் உதவும். பிரிவு ஆறு எண்ணெய் வகையான உணவுகளைக் கொண்டது. மர முந்திரிகை, நிலக்கடலை, எள்ளு, தேங்காய், நல்லெண்ணெய், தேங் காய் எண்ணெய் உட்பட உணவுக்காக பயன்படுத்தும் வகையான எண்ணெய்கள் உள்ளடங்கிய உணவுகளான மாஜரீன், பட்டர் போன்றவை உடலுக்கு அவசியமான சக்தியை வழங்கும். உடலை பேணி பாதுகாப்பதற்கும், உடல் தொழிற்பாடுகள் சீராக நடை பெறுவதற்கும் அவசியமாகும். இவ் உணவுகள் அறுசுவை உணவாகும்.

சோற்றில் அதிகமான விற்றமின் கனியுப்புக்கள் உள்ளன. நோய் எதிர்ப்பு சக்தியை நன்றாக பேணிக்கொள்வதற்கும் அதனூடாக வெவ்வேறு நோய் நொடிகளில் இருந்து பாதுகாப்பை வழங்குவதற்கு உதவி செய்யும். எல்லா வளர்ச்சிச் செயல் முறை களையும் சரியாக பேணிப்பாதுகாப்பதற்காக உதவி செய்யும்.

குறைந்த கலோரி உடைய உணவு வகைகளினால் அதிகநிறை, அளவுக்கதிக மான நிறை போன்றவற்றை கட்டுப்படுத்து வதற்காக நிறையை பேணிப் பாதுகாப்பதற்கு உதவி செய்யும். இரும்புச் சத்து கடும் பச்சைநிற கீரை வகைகளில் இரும்பு உள்ளடக்கப் பட்டிருக்கின்றது. போலேட்டு அனேகமாக புதிய மரக்கறிகளிலும், பழங் களிலும், விற்றமின் பி வகைகள் அகத்துறிஞ் சலுக்கு தேவையான போலேட்டு அடங்கி இருக்கும்.

விற்றமின் சீ யில் எலும்பு, பல் மற்றும் இழையங்களின் நல்ல வளர்ச்சிக்கும் அவற்றை பேணிப்பாதுகாப்பதற்கு உதவு கின்றது. விற்றமின் ஏ யில் கண்களின் பார்வையை நன்றாக பேணி வைத்திருப் பதற்கும் உடற் கலங்களின் வளர்ச்சிக்கும் அவற்றின் பெருக்கத்திற்கும் உதவுகின்றது. இரும்புச் சத்து அடங்கியுள்ள உணவுகளில் இறைச்சி, மீன், நெத்தலி, கருவாடு, முட்டை என்பன அடங்கும். விற்றமின் சீ உள்ள உணவுகளில் பழங்கள், இலை வகைகள், மரக்கறிகள் என்பன அடங்கும். விற்றமின் ஏ உள்ள உணவாக கடும் பச்சை நிற இலைகள், மரக்கறிகள், பழங்கள், விலங்கு உணவுகளும் அடங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நார் மற்றும் நார்ப்பொருட்கள் அதிகமாக உள்ள சில உணவுகளாக தானியம், உடைந்த பருப்புகள், மரக்கறி, பழங்கள் என்பன மிகவும் பங்களிப்புச் செய்கின்றன.

**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமாகும். அது போல ஆரோக்கியமான உணவுகளை உண்டு ஆரோக்கியமாக வாழ்வோம்.**

**சி. ஜோனாத்**
**தரம் – 08**

# வீட்டுத்தோட்டம்

வீட்டுத்தோட்டம் வீட்டுத்தோட்டம் விரும்பி நாங்கள் செய்வோம்.
பாட்டுப்பாடி பாட்டுப்பாடி பயிர் வகைகள் வளர்ப்போம்.
வீட்டின் அருகே தேடி நாங்கள் விரும்பி நிலத்தை தெரிவோம்.
வேலி போட்டுக் காப்பதற்கும் வேண்டும் வகைகள் செய்வோம்.
மண்ணைக் கொத்தி பயன்படுத்தி மகிழ்ந்து பாத்தி அமைப்போம்.
பசளையிட்டு குழியும் தோண்டிப் பாங்காய் விதைகள் நடுவோம்.
நாளும் பொழுதும் பயிர்கள் வளர நன்கு நீரை இறைப்போம்.
களைகள் பிடுங்கி அவற்றை நாமும் கண்ணைப் போல காப்போம்.
கத்தரி, வெண்டி, தக்காளி தன்னில் நன்கு காய்க்கும்
களிப்பினோடு பிடுங்கி அவற்றைக் கறி சமைக்கக் கொடுப்போம்.
பந்தலில் தொங்கும் பாகல், புடோல் பார்த்து நாங்கள் பறிப்போம்.
பட்சமோடு அம்மாவிடம் பாகம் செய்யக் கொடுப்போம்.
வீட்டுத்தோட்டம் வீட்டுத்தோட்டம் நாங்கள் விரும்பிச் செய்வோம்.
நாட்டின் வளத்தைப் பெருக்க நாங்கள் நாளும் பொழுதும் உழைப்போம்.

**பு. பிறைவண்ணன்**
**தரம் – 10**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளுக்கு நல்ல பெற்றோர்களாக இருப்போம்

வாழ்க்கை தந்த அதிசயத்திற்கு ஓர் அனுபவம் பெற்றோர் ஆவது ஆகும். நல்ல பெற்றோர் என்பதன் கருத்து என்னவென்றால் உங்களின் ஒரு பகுதி உங்களுக்கு வெளியில் நடப்பது போலவும் வாழ்வது போலவும் நீங்கள் உணரக் கூடியதாக இருக்கும் இப் பகுதியானது. உங்களில் இருந்து பிரிந்து போக நீங்கள் விரும்புகிறீர்களா? ஆனால் அது உங்களுட னேயே மிகவும் நல்ல முறையிலும் சந்தோசமாகவும் இருக்கவே நீங்கள் விரும்புவீர்கள். எனவே பெற்றோர் என்பது பொறுப்பானதும் சவால் உள்ளதுமான ஒரு செயன்முறை ஆகும். ஆனால் எங்களால் இயலுமான அளவிற்கு எங்கள் பிள்ளைக்கு உடல், உள கலாசார நலன்களைக் கொடுக்கும் போது இது ஒரு சந்தோசமானதும் மெச்சத்தக்கதுமான அனுபவம் ஆகும். எனவே நல்ல பெற்றோர் என்பது பிள்ளைக்கு நல்லதைச் செய்வதாகும். எவ்வாறான செயல்களைச் செய்து நல்ல பெற்றோர்களாக பிள்ளைக்கு இருக்கலாம் என்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

நல்ல பெற்றோர் என்பது பிள்ளைக்கு நல்லதைச் செய்வதாகும். எங்களுடைய பிள்ளைகள் பற்றி பெரிய எதிர்பார்ப்புக்களை கொண்டிராமல் படிப்படியாக நடைபெறுவதை காண்பதும் ஆகும். பெற்றோராக இருப்பது என்பது ஒரு நீண்டகால வேலை. இது நூறு மீற்றர் ஓட்டத்தைப் போல் அல்லாது மரதன் ஓட்டத்தைப் போன்றது. யௌவன பருவத்தை அடையும் போது பெற்றோர்களாக இருப்பதென்பது ஒரு சவாலாகவும் அமைகிறது.

குழந்தைப்பருவமா? அல்லது யௌவனப்பருவமா? என்ற குழப்பநிலை ஏற்படும்போது நல்ல பெற்றோர்களாய் இருப்பதற்கு உரிய தேர்ச்சிகளும் பிள்ளைகளுடன் நெருக்கமாய் இருப்பதும் மிகவும் தேவையான ஒன்றாக அமைகிறது.

இந்த நேரத்தில் நாம் பிள்ளைகளிடத்தில் உடல், உள நலன்களைக் கொடுப்பது மட்டுமல்லாது செய்யக் கூடியவை, செய்யக்கூடாதவை, அவர்களிடத்தில் ஏற்படும் மாற்றங்கள் அவர்களது விருப்பங்களை விளங்கிக்கொள்ளும் விதம், அவர்களின் தனித்துவம், எதிர்பார்க்கும் பரிசு, பாதுகாப்பின் முக்கியத்துவம், சுதந்திரம், அவர்களது அனுபவம், சமூக ஈடுபாடு, சமவயதுக் குழுவின் தொடர்பு, சாப்பாட்டு வேளையில் ஏற்படும் சந்தோசம் சிறந்த போசணை அடையமுடியாத எதிர்பார்ப்புக்கள், உளநெருக்கடி, பிள்ளையிடம் சுயமதிப்பு, நல்ல ஒழுங்குமுறை, கூடாத பழக்க வழக்கங்களின் விமர்சனம், உதவி புரியும் மனப்பாங்கு, பாடசாலைக்கும் குடும்பத்திற்கும் இடையிலான தொடர்பை உருவாக்குதல், மதுபானம் புகைத்தல் இல்லாத இடமாக வீட்டை உருவாக்குதல். இவ்வாறான செயற்பாடுகளை இனங்கண்டு பெற்றோர்களாகிய நாம் செயற்பட வேண்டும். ஏன் எனில் கண்ணும் கருத்துமாய் வளர்க்கப்பட வேண்டியவர்கள் எம் பிள்ளைகள். அவர்கள் வழிதவறிப்போவதற்கு நாம் வழியாக அமையக்கூடாது. எனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான கருத்துக்களை பார்த்து நடப்போமாயின் நல்ல பெற்றோர்களாக இருக்க முயற்சிக்கலாம்.

முதலில் நாம் பிள்ளைகளுக்கு செய்யக்கூடியவை எவை எனப் பார்ப்போம். அதாவது எதுவாக இருந்தாலும் இருப்பதை பிள்ளைகளுக்கு தெரியப்படுத்த வேண்டும். அவன் அல்லது அவளுடைய நல்ல தன்மைகளை மெச்ச வேண்டும். அவர்கள் கூறுவதை உண்மையாக கேட்க வேண்டும். நேரம் கிடைக்கும்போது அவர்களது கருத்துக்களை கலந்துரையாட வேண்டும். திறந்த மனதுடன் செயற்பட வேண்டும். பிள்ளையுடன் சிலவற்றை சந்தோசமாக செய்வதற்கு நேரம் ஒதுக்க வேண்டும்.

இவ்வாறு இருக்கும்போது செய்யக் கூடாதவை எனப்பார்க்கும்போது இருப்பதை பிள்ளைகளுக்கு தெரியப்படுத்தாது விடல், பிள்ளையை விளங்கிக்கொள்ளாது முடிவெடுத்தல், மற்றவர்களுடன் ஒப்பிடல், பிள்ளையின் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளாது இருத்தல், கேட்ட மாத்திரத்தில் இருத்தல், பிள்ளையுடன் சந்தோசமாக இருப்பதற்கான நேரத்தை வேறு வழியில் செலவு செய்தல் இவ்வாறு பிள்ளைக்கு செய்யக் கூடியதையும் செய்யக்கூடாததையும் இனங்கண்டு நடப்போமேயானால் பிள்ளைக்கு நல்ல பெற்றோராய் இருக்க முடியும் என்பது திண்ணம்.

நாம் பெற்றோர்களாக இருந்து அவர்களுக்கு இயலுமான அளவிற்கு நல்ல முறையில் உதவலாம் என்று நோக்கும் போது “சந்தோசமான பிள்ளை ஒரு நலமான பிள்ளை ஆகும்” ஆகவே நல்ல சுகாரதாரப் பழக்க வழக்கங்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

நல்ல சுகாதாரமானது உடல் ரீதியாக சுகாதாரமாக இருப்பதற்கும் போசாக்காக இருப்பதற்கும் அப்பாற்பட்டது. மனமும் உடலைப் போலவே நல்ல முறையில் கவனிக்கப்பட வேண்டியதும் தொடர்ச்சியாக பாதுகாக்கப்பட வேண்டியதுமான செயலாகும். இதனைப் பெற்றோராகிய நாம் மறந்துவிடக்கூடாது.

எமது பிள்ளைகளின் உடல் தேவையானது ஒரு நாளில் பல தடவைகள் உணவைக் கொடுத்து திருப்தி செய்வது போல அவர்களின் மனமும் தொடர்ச்சியான போசணையை தினமும் புதியவற்றைக் கற்கும் அனுபவத்தின் மூலமும் சந்தோசமான நினைவுகளை குடும்பத்தினருடனும், நண்பர்களுடனும் பரிமாறிக் கொள்வதன் மூலம் பெறுகின்றது. “ஒரு சந்தோசான பிள்ளைக்கு தான் விரும்பப்படும் பிள்ளை என்பது நிச்சயமாக தெரிந்திருக்கும்” ஒரு சந்தோசமான பிள்ளைக்குத்தான் யாரென்பதால் குடும்பத்தினரால் விரும்பப்படுவது என்பது நிச்சயமாக தெரிந்திருக்கும். இவ் விரும்பப்படும் தன்மையானது மற்றவர்களிடம் நல்ல உறவுகளைப் பேணுவதற்கும் அப்பிள்ளை என்ன செய்தாலும் அதனை நல்ல முறையில் செய்வதற்கும் உரிய உறுதியையும் பலத்தையும் கொடுக்கின்றது. இதனை பெற்றோர்களாகியவர்களே கவனம் எடுத்து பார்க்க வேண்டும். அப்போதுதான் நல்ல பெற்றோர்களாக இருக்க முடியும் என்ற நிலை உருவாவதைக் காணலாம்.

பிள்ளைக்கு அவன் அல்லது அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கிக்கொள்ளும் அளவிற்கு விருப்பத்தை வெளிக்காட்ட வேண்டும். உங்களுடையை பிள்ளையை நீங்கள் மிகவும் விரும்புபவராக அடிக்கடி கூறவேண்டும். அத்துடன் பிள்ளையுடன் உற்ற நெருக் கத்தை வெளிக் காட்ட வேண்டும். சிறு பிள்ளையைப் போல் அல்லாது கட்டிளமைப் பருவத்தினர் அவர் களாக வற்புறுத்தாவிட்டாலும் அவர்களுடன் உற்ற நெருக்கத்தை பெற்றோர் வெளிக் காட்ட வேண்டும். அன்பை உண்மையாக அறியும் வழிகளாவன இரக்கமாய் இருப்பதும், அவரில் நன்றியுடையவராக இருப்பதும் ஆகும். இவ்வாறு செய்யும்போது பிள்ளையின் மனதில் பெற்றோர் இடம் பிடிக்கும் நிலை உருவாகின்றது. பெற்றோரும் பிள்ளைக்கு ஏற்றவர் ஆகின்றனர்.

ஒவ்வொரு பிள்ளையும் தனித்துவமானவர் என்பதை பெற்றோர் முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும். அந்த வகையில் ஒவ்வொரு பிள்ளையும் இரு நிறமூர்த்தங்கள் இணைந்தாலும் அனுபவங்களாலும் சமூகத்தாலும் உருவாக்கப் படுகிறது. இப்பிள்ளைகள் ஒரே விதமான அனுபவங்களைக் கொண்டிருக்காது. இதனால் பிள்ளைகள் ஒரேமாதிரியான திறமைகளையும் தனித்துவத்தையும் பெறுபேறுகளையும் கொண்டிருக்காது. இதனால் பிள்ளைகள் மற்றப் பிள்ளையுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது சரியான முறை இல்லை உங்கள் பிள்ளை தனித்துவமானது என்பதை ஏற்று விளங்கிக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு பிள்ளையும் வித்தியாசமானதும் விசேடமானது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

பிள்ளையின் நல்ல இயல்புகளை மெச்சி ஊக்குவிக்க வேண்டும். பொறுமையுடனும் அன்புடனும் பிள்ளையின் நல்ல தன்மைகளை மேலும் வளரச்செய்ய வேண்டும். ஒப்பிட்டுப் பார்த்தால் பிள்ளையை பாதிக்கும் என்பதை மறந்துவிட வேண்டாம். இவ்வாறு பிள்ளையின் தனித்துவத்தை மதிப்போமாக இருந்தால் பிள்ளைக்கு ஏற்ற பெற்றோராக இருக்க முடியும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

உங்களுடைய பிள்ளைக்கு உங்களால் கொடுக்கக்கூடிய முக்கியமான பரிசுப்பொருள் உங்களுடைய நேரமாகும். ஒரு குழந்தைக்கு தன்னுடைய பெற்றோர் முகமும் குரலுமே பார்ப்பதற்கும் கேட்பதற்கும் விருப்பமுடைய ஒன்றாகும். உங்களுடைய அன்பையும் செலவிடும் நேரத்தையும் ஈடுசெய்ய முடியாது. எனவே ஒவ்வொரு நாளும் சிறிது நேரத்தை அவர்களுடன் சேர்ந்து கழிப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். கூடுதலாக செலவிடுவதற்கு பணத்தை கொடுப்பதோ நீங்கள் உங்கள் பிள்ளை மீது காட்டும் அன்பல்ல. அது அவர்களுக்கு கேடாக அமையலாம். எனவே இவ்வாறான விடயங்களைப் பற்றி அக்கறை உடைய பெற்றோராய் இருக்க வேண்டும்.

பெற்றோர் என்பது உங்கள் பொறுப்பு என்பது ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள் ஒருவரும் உங்களுக்கு இங்கு மாற்றீடாக முடியாது மற்றவர்கள் உங்கள் பிள்ளைகளை தூக்குவதற்கும் வளர்ப்பதற்கும் உதவி செய்யலாம் ஆனால் பிள்ளைகளின் பொறுப்பு எப்போதும் உங்களுடனே இருக்கும் அதனை என்றும் மறக்கக்கூடாது. வித்தியாசமான அனுபவங்களை பிள்ளைக்கு வழங்க வேண்டும். பாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பான சூழலில் பல்வேறுபட்ட தேர்ச்சி களை பழகி விடுவார்கள். வயதிற்கு ஏற்ற வித்தியாசமான செயற்பாடுகளில் ஈடுபட விடவேண்டும். அதாவது விளையாட்டு, சங்கீதம், சித்திரம் போன்ற தேர்ச்சிகளை அடைய வைப்பது பெற்றோரின் கடமை யாகும்.

இதன்மூலம் சமவயதுக்குழுவினரு டன் கலந்து பழகுவதற்கும் விட்டுக் கொடுத் து பழகுவதற்கும் உதவியாக அமையும் பிள்ளையின் நண்பர்கள் யார் என்பதை பெற்றோர் கட்டாயம் தெரிந்திருக் வேண்டும். இவ்வாறு பார்த்து நடப்பதன் மூலம் நல்ல பெற்றோராக முடியும்.

எனவே ஒட்டுமொத்தமாக நோக்கும் போது "வாழ்வு" என்பது ஒரு பயணம் எப்போதும் முடிவுப் புள்ளியைப் பார்க்காமல் பயணத்தின் ஒவ்வொரு படியையும் பார்க்க வேண்டும். நாம் எப்போதும் அடைய வேண்டி யதை மனதில் நிறுத்திச் சாப்பாட்டு நேரத் தைக் கூட சந்தோசமான குடும்ப இணைப்பு நேரமாக மாற்றிப் பிள்ளைகளின் நலனில் கூடிய முயற்சி எடுக்கும் பெற்றோராக இருக்க வேண்டும். அப்போதுதான் பிள்ளைகளி டத்தில் பெற்றோரின் மதிப்பு அதிகரிக்கும் மனதளவில் பிள்ளை பிழை விட்டாலும் பெற்றோரிடத்தே மன்னிப்புக் கேட்கும் தன்மை உருவாகும். என்பதில் எந்தவித மாறுபாடும் இல்லை என்ற நிலை உருவாக வழிசமைக்கும்.

**திருமதி சு. கேதீஸ்வரநாதன்**
**ஆரம்பக்கல்வி ஆசிரியர்.**

**எங்கே நல்ல புத்தகங்கள் எரிக்கப்படுகின்றனவோ**
**அங்கு விரைவில் நல்ல மனிதர்களும் எரிக்கப்படுவார்கள்**
**–சேகுவாரா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளநலம்

இன்றைய உலகில் நலமாக வாழ்பவர்களைக் காண்பது மிகவும் அரிதான ஒன்றாகவே உள்ளது. முன்பெல்லாம் ஒருவர் வசதியாக வாழ்வதைப் பார்த்து பொறாமைப் படும் நாம் இப்போது ஒருவர் ஆரோக்கியமாக வாழ்வதைப் பார்த்து பொறாமைப்படும் அளவிற்கு இன்றைய உலகம் மாற்றமடைந்துள்ளது. உடல் ஆரோக்கியமாக வாழ்ந்தாலும் மனம் நலமாக இருப்பதில்லை. உடல் ஆரோக்கியமாக வாழ்வதென்பது மன ஆரோக்கியத்திலேயே தங்கியுள்ளது எனலாம்.

மனநலம் என்பது இன்று எல்லோராலும் பேசப்பட்டுவரும் ஒரு முக்கியான விடயமாக கருதப்படுகின்றது. உள ஆரோக்கியம் என்பது எமது மனம் சார்ந்த ஒரு விடயமாகும். எமது மனம் அல்லது உளம் பாதிப்படைவதற்கு மனதிற்கு ஏற்படும் பல்வேறுவிதமான அழுத்தங்கள் காரணமாகும். பள்ளி செல்லும் குழந்தைகள் முதல் உடல் நலிவுற்று வாழும் முதியவர்கள் வரை மனஅழுத்தத்திற்கு ஆளாகுகின்றனர். எனக்கு இந்த உலகில் ஒரு பிரச்சனையும் இல்லையென கூறக்கூடிய ஒருவரை எம்மால் அடையாளம் காணமுடியாது. எமது நாளாந்த வாழ்க்கையில் தொந்தரவுகள், ஏமாற்றங்கள், கவலைகள், பிரச்சினைகள் கலந்தவையாகவே உள்ளது.

இவ்வாறான வேளைகளில் மனம் பாதிப்பிற்கு உள்ளாகின்றது. இன்றைய உலகில் பெரும்பாலான உடலியல் தொடர்பான நோய்களுக்கு முக்கிய காரணமாக மன அழுத்தம் உள்ளதாக பல ஆய்வுகள் கூறுகின்றன. இந்த மனப்பாதிப்பு மிகவும் ஒரு கொடுமையான நோயாக கருதப்படுகின்றது. இது ஒருவருடைய இயல்பான வாழ்க்கையைப் பாதிப்படையச் செய்வது மட்டுமல்லாது அவர்களுடன் சேர்ந்து வாழ்பவர்களையும் சூழலையும் பாதிப்படையச் செய்கின்றது. மனஅழுத்தம் நம்மைச் சூழ்ந்த சமூகத்தின் செயற்பாடுகளால் நமக்கு ஏற்படுவதுடன் நம்முடைய வாழ்க்கைமுறை, சிந்தனைகளால் ஏற்படுகின்றது. ஏமாற்றம், பயம், நிராகரிப்பு எரிச்சல், அதிக வேலை, குழப்பம், பாதிப்பு, இறப்பு, நட்புமுறிவு, காதல் தோல்விகள், உறவில் விரிசல், கோபம், தவறான பழக்கவழக்கங்கள், இயற்கை அனர்த்தங்கள், துஷ்பிரயோகங்கள், வேலையின்மை, நித்திரை இன்மை, தோல்விகள், காலநிலை மாற்றங்கள் இவ்வாறான நம்மைச் சுற்றி ஏற்படும் நிகழ்வுகள் மன அழுத்தத்தை ஏற்படுத்துகின்றது. மன அழுத்தமானது தொடர்ச்சியாக ஏற்படும் போது உளப்பாதிப்படையச் செய்கின்றது.

சிறிய அளவில் உளப்பாதிப்பு ஏற்படும்போது அதை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இல்லாவிடின் இது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்திவிடும். ஒருவரை தற்கொலை செய்யும் மனநிலையிற்கு அழைத்துச் செல்லும். உளப்பாதிப்பானது ஒரு நபரின் உயிரியல் வயதை முப்பது வயதால் அதிகரிக்கின்றது என உளவியல் அறிஞர்கள் கூறுகின்றார்கள். எமது சமூகத்தின் தவறான எண்ணங்களால் உளப்பாதிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புக்கு உள்ளானவர்கள் சரியான உளச் சிகிச்சை முறையை பெற விரும்புவதில்லை. உளநல மருத்துவரை நாடிச் செல்வது மில்லை. அவ்வாறு உள நல மருத்துவ சிகிச்சை பெறுபேறுகளை நமது சமூகம் அவர்களை பைத்தியக்காரர்களாக வே சித்தரிக்கின்றார்கள். இதனால் எம்மில் உளப்பாதிப்புக்கு உள்ளானவர்கள் தங்களை கேலி செய்வார்கள் என எண்ணி உளச்சிகிச்சை பெறத் தவறிவிடுகின்றனர்.

சமூகத்தில் உள்ளவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். உளநலம் பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் பைத்தியக்காரர்கள் இல்லை. இது ஒரு வகையான உள நலத்தை மேம்படுத்தும் சிகிச்சை. நாம் அவர்களுக்கு மிகவும் உறுதுணையாக இருக்க வேண்டுமே தவிர அவர்களை கேலி செய்து ஒதுக்கி வைக்காது இருக்கப்பழகிக் கொள்ள வேண்டும். எமது நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக எமது சமூகம் மிகவும் உளப் பாதிப்புக்குள்ளாகி உள்ளது. இதில் பெரும் பாலும் சிறுவர்களும் முதியவர்களும் மிகவும் பாதிப்படைந்துள்ளனர். இன்று பாடசாலை மாணவர்களில் இவ்வாறான பிரச்சினையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

உளநலத்தைப் பாதிக்கும் முக்கிய காரணியான மனஅழுத்தத்தை நிவர்த்தி செய்வதற்கு எமது மனதின் சிந்தனைகளை தூய்மைப்படுத்த வேண்டும். எதிர்மறையான சிந்தனைகளை நிவர்த்தி செய்து நல்ல சிந்தனைகளை வளர்த்துக் கொள்ளுதல், அமைதியான குடும்ப சூழலை ஏற்படுத்துதல், எத்தனை கஷ்டங்கள் இருந்தாலும் சிரிக்க கற்றுக் கொள்ளுதல், விளையாட்டில் ஈடுபடுதல், தியானம், காலையில் நேரத்துடன் எழும்புதல், சரியான தூக்கம், மன்னிக்கும் மனநிலை, இயற்கையை விரும்புதல், நூல்களை வாசித்தல், எழுதக்கற்றுக் கொள்ளுதல் இவ்வாறு மன அழுத்தத்தை குறைத்து உள ஆரோக்கியத்தைப் பேணி உடல் உள ஆரோக்கிய மனிதர்களாக வாழப் பழகிக் கொள்வோம்.

**ஆ. விஜயகுமார்**
**(ஆசிரியர் – ஆங்கிலம்)**

**ஒரு நூலகம் திறக்கப்படும்போது ஊரில்**
**ஒரு சிறைச்சாலை மூடப்படும்**
**– விவேகானந்தர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் தினம்

சிறுவர்களை மகிழ்விக்கும் நோக்கிலும் அவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் நோக்குடனும் அவர்களுக்கென்று ஒரு தினமும் வகுக்கப்பட்டு உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படுகின்றது. அதுதான் சர்வதேச சிறுவர் தினமாகிய அக்டோபர் 1ஆம் திகதியாகும்.

1954ஆம் ஆண்டில் சிறுவர் தினம் சர்வதேச ரீதியாக கொண்டாடப்பட வேண்டியதன் அவசியத்தை ஐ.நா வலியுறுத்தியது. 18 வயதிற்கு குறைந்த சகலரும் சிறுவர்கள் என ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. 1990ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ம் திகதி சர்வதேச ரீதியில் அமுலுக்கு கொண்டுவரப் பட்ட சிறுவர் உரிமைப் பிரகடனத்தில் 1991ம் ஆண்டு இலங்கை கைச்சாத்திட்டுள்ளது.

உலகில் வாழ்கின்ற மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் சிறுவர்களாக காணப் படுகின்றனர் எனக் கூறுகின்றது. சிறுவர்களின் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் மற்றும் அவர்களது கருத்துக்களுக்கு செவிசாய்க்கப்பட வேண்டும் என்ற நோக்கிலேயே சிறுவர் தினம் சர்வதேச ரீதியாக கொண்டாடப்பட்டு வருகிறது. சிறுவர்களின் உரிமைகளை வென்றெடுப்பதில் சர்வதேச சிறுவர் தினக் கொண்டாட்டங்களின் பங்கினை மறுப்பதற்கில்லை.

சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்குடன் 2008 ஜீன் மாதம் 12ம் திகதி தொழிலாளர் எதிர்ப்பு தினம் அனுஷ்டிக்கப் பட்டது. சிறுவர்கள் ஒரு நாட்டினதும் ஒரு சமுதாயத்தினதும் அச்சாணி என்பது நாம் அறிந்த விடயம். ஒரு சமூகத்தினது தூண்களாகவும் ஒரு நாட்டினது முதுகெலும்பாகவும் செயற்பட இருப்பவர்களும் இவர்களேதான். இவர்கள் அனைவரும் பாதுகாக்கப்பட்டு நல்வழிப்படுத்தப்படுவார்களேயானால் அந்தச் சமூகம் அந்த நாடு தலை நிமிர்ந்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

சிறுபராயம் என்பது ஒரு இனிமையானது பெரியோர்களாகிய அனைவரும் கடந்து வந்த பருவமாகும். இதில் மகிழ்ச்சியடையாத மற்றும் தமது கடந்த கால சிறுபராயத்தினை நினைத்து இனிமையாக அசைபோடாத எவரும் இருக்கமாட்டார்கள்.

எதிர்கால உலகின் தலைவர்களாகவும் இந்த உலகை காப்பதற்கு தயாராகும் பாதுகாவலர்களாகவும் இருப்பவர்கள் சிறுவர்கள் ஆகும். "இளமையில் கல்வி சிலையில் எழுத்து" எனும் வாக்கிற்கமைய சிறுவயதிலேயே சிறுவர்கள் வாழும் சூழல் அவர்களின் எதிர்கால வாழ்க்கையில் தாக்கம் செலுத்துகின்றது.

உலகிலுள்ள அனைத்து சிறுவர்களுக்கும் உள்ள அடிப்படை உரிமைகள் சர்வதேச சிறுவர் தினமாகிய அக்டோபர் 1ம் திகதியே நினைவு கூறப்படுகின்றன.

சிறுவர்களின் உரிமைகளை பாதுகாக்க அவர்களை நல்வழிப்படுத்த உள்நாட்டு, சர்வதேச ரீதியாக பல நிறுவனங்கள் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்கள் தொடர்பான சட்ட ஒழுங்குகளை ஒவ்வொரு நாளும் கொண்டிருப்பது போன்று சர்வதேச ரீதியாக ILO, WHO, UNESCO, UNICEF போன்ற பல நிறுவனங்கள் சிறுவர்களின் நலன்களை பாதுகாப்பது தொடர்பில் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன.

சிறுவர்களுக்கான முதலாவது உச்சிமாநாடு 1990ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30ம் திகதி நடைபெற்றது. இது சிறுவர் சம்பந்தமான முக்கிய தினமாகும். அன்று சிறுவர் இறப்பினையும் போஷாக்கின்மையினையும் 2000 ஆண்டளவில் நீக்குவதற்கான தீர்வு எடுக்கப்பட்டது.

இலங்கையில் அண்மைக்காலம் தொட்டு சிறுவர்களுக்கு அவர்களது உரிமைகளுக்கும் முக்கியத்துவமளிக்கப்பட்டு வருவது கண்கூடு. அந்தவகையில் தனியார் நிறுவனங்கள் பலவும் அரச நிறுவனங்கள் பலவும் சிறுவர்களுக்கென பல செயற்றிட்டங்களை செயற்படுத்தி வருகின்றன.

சிறுவர்களுக்கென பாடசாலை ரீதியாக கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் வழங்கப் படுகின்றன. தனியார் நிறுவனங்கள் பாடசாலை சிறுவர்களுக்கு பல்வேறு பொருட்களை வழங்குவதுடன் சிறுவர் நிகழ்ச்சிகளை விழிப்புணர்வு சார்ந்த விடயங்களை வானொலி, பத்திரிகை மூலம் வெளிப்படுத்துவதுடன் சிறுவர்களுக்குள் மறைந்து இருக்கின்ற திறமைகளை வெளிக்கொணரும் வகையில் சிறுவர் சஞ்சிகைகளை வெளியிடல் போன்ற நல்ல செயற்பாடுகளை எமது நாட்டில் நடாத்தி வருகின்றன. சிறுவர் பாதுகாப்பு விடயத்தில் நாடளாவிய ரீதியில் பல்வேறு நிறுவனங்களும் அமைச்சு மட்டத்தில் திணைக்களங்களும் செயலாற்றி வருகின்றன. இதில் குறிப்பாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பங்கு மகத்தானது.

'இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள்' இந்த வாசகத்தின்படி ஒரு நாட்டின் சிறுவர்கள் மதிக்கப்பட வேண்டும். நாளைய எதிர்காலம் நன்றாக அமைய இன்றைய சிறுவர்கள் நலலதொரு பிரஜையாக உருவாக்கப்பட வேண்டியது அவசியமானதொன்றாகும். அந்த வகையில் ஒரு குடும்பத்தை எடுத்தால் அந்த குடும்பத்தில் சிறுவர்கள் எவ்வாறு மதிக்கப்படல் வேண்டும் என்பதையும் எவ்வாறு பராமரிக்கப்படுகின்றார்கள் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

சிறுவர்களை நாளைய தலைவர்களாக உருவாக்கும் பொறுப்பு ஆசிரியர்களுக்கும் மற்றும் கல்விக் கூடங்களுக்கும் இருக்கின்றன. அதேபோல் பெற்றோர் இருக்கும் சூழல் குடும்பநிலைமை, நண்பர்கள் போன்ற இதர காரணிகளும் அதனை தீர்மானிக்கின்றன.

எனவே நாளைய தலைவர்களாக வரவேண்டிய இன்றைய இளம் சிறுவர்களையும் அவர்களை சுற்றியுள்ள பொறுப்புகாரர்கள் அனைவரும் தத்தமக்குரிய வகிபாகத்தை சரிவர நிறைவேற்றி ஊக்குவிப்பவர்களாயின் நிச்சயமாக எதிர்காலத்தில் சிறந்ததொரு சந்ததியை எதிர்பார்க்கலாம்!

**"வாழ்க சிறார்கள் சமுதாயம்"**

**நி. கிருசாளினி**
**தரம் – 08**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் ஏன் அடிமையானாள்?

## கற்பு

கற்பு என்ற வார்த்தையை பகுபத மாக்கிப் பார்ப்போமானால் கல் என்பதி லிருந்து வந்ததாகவும் படி - படிப்பு என்பது போல கல் - கற்பு என்கின்ற இலக்கணம் சொல்லப்பட்டு வருகிறது. அன்றியும் கற்பெனப்படுவது சொற்றிறப்பாமை என்கிற வாக்கியப்படி பார்த்தால் கற்பு என்பது சொல் தவறாமை. அதாவது நாணயம், சத்தியம் என்பவற்றிற்கு விரோதமில்லாமல் என்கின்ற கருத்துக் கொண்டதாக இருக்கிறது. நிறை என்ற சொல்லுக்கு பொருள் பார்த்தால் அறிவின்மை, உறுதிப்பாடு கற்பு என்ற பொருள்களே காணப்படுகின்றன. கற்பு என்பது பெண்களுக்கு மாத்திரம் சம்பந்தப் பட்டது என்பதற்கு தக்க ஆதாரம் கிடைக்கா விட்டாலும் அழிவில்லாதது, உறுதியுடையது என்கின்ற பொருள்களே காணக்கிடக் கின்றன. பெண்கள் விடுதலை வேண்டு மானால் ஒரு பிறப்புக்கொரு நீதி வழங்கும் நிர்ப்பந்தம் கற்புமுறை, ஒழிந்து இரு பிறப்பிற்கும் சமமான சுயேச்சை கற்பு முறை ஏற்பட வேண்டும்.

## காதல்

அன்பு, ஆசை, நட்பு என்பவற்றின் பொருளை தவிர வேறு பொருளைக் கொண்டதென்று சொல்லும்படியான காதல் என்றும் ஒரு தன்மை ஆண் - பெண் சம்பந்தத்தில் இல்லை என்பதை விவரிக் கவே இவ்வியாசம் எழுதப்படுவதாகும். இன்றைய தினம் காதலைப் பற்றி பேசுபவர் கள், காதலென்பதை ஆசையல்ல, காம மல்ல என்றும் அன்பு, நேசம், நட்பு மற்றும் எதுவானாலும் இன்பத்திற்கும், திருப்திக் குமேயொழிய, மனதிற்கு திருப்தியும் இன்ப மும் இல்லாமல் அன்பும், ஆசையும், நட்பும் இருப்பதாக காட்டுவதற்காக என்பதை எடுத்துக் காட்டுவதற்கே.

## கல்யாண விடுதலை

ஆண் - பெண் கல்யாண விஷயத் தில் நாட்டில் உள்ள கொடுமையைப் போல் வேறு எந்த நாட்டிலும் கிடையவே கிடையாது என்று சொல்லலாம். நமது கல்யாண தத்துவம் எல்லாம் பார்த்தால் பெண்களை ஆண்கள் அடிமையாகக் கொள்வது என்ப தை தவிர வேறு ஒன்றுமே இல்லை. அவ் வடிமைத்தனத்தை மறைத்து பெண்களை ஏமாற்றுவதற்கே சடங்கு முதலியவைகள் செய்யப்படுவதோடு அவ்வித கல்யாணத் திற்கு தெய்வீக கல்யாணம் என்பதாக ஒரு அர்த்தமற்ற போலிப் பெயரையும் கொடுத்து பெண்களை வஞ்சிக்கின்றனர். பொதுவாக கவனித்தால் நமது நாடு மாத்திரமல்லாமல் உலகத்திலேயே அநேக பெண்கள் கல் யாண விஷயத்தில் கொடுமையாயும், நிர்ப் பந்தமாயும் நிறுத்தப்படுகிறார்கள். இக் கொடுமை இனியும் தொடருமானால் சொற்ப காலத்துக் குள்ளாக திருமணச் சடங்கும், சொந்தமும் உலகத்தில் அநேகமாய் மறைந்தே போகும் என்பதை உறுதியாய் சொல்லலாம்.

ஆகவே மற்ற நாடுகளில் இருப்பது போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்யாண ரத்துச்சட்டம் சமீபத்தில் ஏற்ப டாமல் போகுமானால் கல்யாண மறுப்பு பிரசாரமும், கல்யாணமான ஆண் - பெண் பலதரப் பிரசாரமும் தான் செய்ய வேண்டி வரும். அது ஒரு புறம் இருந்தாலும் மனிதன் இருக்கும் வரை அனுபவிக்க வேண்டியது இன்னமும் திருப்தியாகும். இதற்கு ஆணும் பெண்ணும் முக்கிய சாதனமாகும்.

## சொத்துரிமை

பெண்களும் தங்களுக்கு மற்றவர் களால் இழைக்கப்பட்ட கொடுமையையும், இழி வையும் கருதிப் பாராமல் பல நாட்டு சுதந்திரத்திற்கு தாங்களும் கூப்பாடு போடு வதை நாம் பார்க்கிறோம். ஆனால் அவர் களுக்கு உண்மையான சுதந்திரம், விடு தலை என்பவைகளின் பொருள் தெரியாத தாலும் தெரிய முடியாமல் வைத்திருக்கிற வாசனையாலும் இவ்வாறு திரிகிறார்களே தவிர வேறில்லை. இனி பெண்கள் விஷயத் தில் இதுபோலதான் அவர்களுடைய சுதந்திரத்தையும், உணர்ச்சியையும் கட்டி போட்டிருக்கும் கொடுமையானது நாட்ட வருக்கு சுதந்திர உணர்ச்சி இல்லை என்பதை காட்டவும் அவர்கள் அடிமை களின் குழந்தைகள் என்பதை ஒப்புக் கொள்ளவும் ஆதாரமான தொன்று என சொல்லலாம்.

பெண் அடிமையா என்பதற்கு உள்ள காரணங்கள் பலவற்றில் சொத்து ரிமை இல்லாதது என்பதே மிக முக்கியமான காரணம் என்பது நமது அபிப்பிராயம். ஆதலால் பெண்கள் தாரளமாக துணிவுடன் முன்வந்து சொத்துரைமை கிளர்ச்சி செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும்.

## பெண்கள் விடுதலைக்கு ஆண்மை அழிய வேண்டும்

பெண்கள் விடுதலையின் பேரால் உலகத்திலே அநேக இடங்களில் அநேக அமைப்புக் களும் , முயற்சிகளும் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு வருவது யாவரும் அறிந்ததே. இம் முயற்சிகளில் ஆண்களும் மிக கவலையுள்ளவர்கள் போல காட்டிக் கொண்டு மிகப் பாசாங்கு செய்து வருகி றார்கள். ஆண்கள் முயற்சியால் செய்யப் படும் அவ்வித விடுதலை இயக்கமும் எவ் வழியிலும் பெண்களுக்கு உண்மையான விடுதலை அளிக்க முடியாது.

தற்காலப் பெண்கள விடுதலைக் காகப் பெண்களால் முயற்சிக்கப்படும் இயக்கங்களும் யாதொரு பலனையும் கொடுக்கமால் போவதால் மேலும் மேலும் அவை பெண்களின் அடிமைத்தனத்திற்கே கட்டுப்பாடுகளை பலப்படுத்திக் கொண்டே போகும் என்பது நமது அபிப்பிராயம். அன்றியும் ஆண்கள், பெண்கள் விடு தலைக்கு பாடுபடுவதால் பெண்களின் அடிமைத்தனம் வளருவதுடன் பெண்கள் என்றும் விடுதலை பெற முடியாத கட்டுப் பாடுகள் பலப்பட்டுக் கொண்டு வருகின்றன. பெண்களுக்கு மதிப்பு கொடுப்பதாகவும் பெண்கள் விடுதலைக்காக போராடுவ தாகவும் ஆண்கள் காட்டிக்கொள்வது பெண்களை ஏமாற்ற செய்யும் சூழ்ச்சியே வேறில்லை.

ஆண்மையால்தான் பெண்கள் அடிமையாக்கப்பட்டிருந்தார்கள். சுதந்திரம், வீரம் முதலிய குணங்கள் உலகத்திலே ஆண்மைக்குத்தான் அவை உண்டென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்கள் முடிவு கட்டி கொள்கிறார்கள். எனவே பெண் அடிமையானது ஆண் மக்களாலேதான் ஏற்பட்டது என்பதும் அதுவும் ஆண்மையும் பெண் அடிமையும் கடவுளாலேயே ஏற்படுத்தப்பட்டதாக எல்லா ஆண்களும் கருதிக் கொண்டிருக்கி றார்கள். பெண்கள் விடுதலைக்கு இப்பொழுது பெண்களும் தடையாகவும் இருக்கிறார்கள். ஏனெனில் இன்னமும் பெண்கள் தாங்களும் ஆண்களைப்போல முழு விடுதலைக் குரியவர்கள் என்ற எண்ணமே தோன்றவில்லை.

எனவே தற்கால நிலையிலுள்ள பெண்கள் விடுதலைக்கு வேறுவாத முயற்சிகளையும் செய்து தங்களுடைய அடிமைத்தனத்திலிருந்து மீண்டு வரமுடியும் என்பதே உண்மை.

நா. ஆர்த்தி
தரம் – 11

# அன்பின் வடிவமான அன்னையின் கவிதை

அன்னை அன்பின் வடிவமானவள்
அழகிய உருவமானவள்
பூமியில் நான் பிறப்பெடுக்க
பண்பின் சாயலவள்

ஈரைந்து மாதங்கள் பக்குவமாய்
கருவறையில் சுமந்தும்
அன்பின் இரத்தம்தனை
பாலாக ஊட்டும் அன்னை அவள்

தாய்மை என்னும் பட்டம் பெற்றாய்
பெற்றெடுத்த போதும் - உன்
பேதை மனம் நினைத்தபோது
சொல் அம்மா சொல்

பேதை போல் இருந்த என்னை
மேதை போல் ஆக்கினாய்
இன்னொரு பிறப்பெடுத்தால் - என்னை
மீண்டும் உன் மடி மீது சுமந்துவிடு

அ. ஜெனி
தரம் – 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிபோதையால் ஏற்படும் உடல் உள தாக்கங்கள்

இன்று நாட்டில் மது அருந்தும் பழக்கம் மக்களிடையே அதிகரித்துள்ளது. அதிகமான இளைஞர்களும் இதற்கு அடிமையாகின்றார்கள். குடிப்பவர்கள் தாம் குடிப்பதற்கு பல காரணங்களைக் கூறுவர். எப்படியோ குடிக்கு அடிமையாகி தமது உடலையும் உளத்தையும் கெடுத்துக் கொள்கிறார்கள். குடிபோதை காரணமாக உடலில் பல நோய்கள் ஏற்படுகின்றன.

## உடலில் ஏற்படும் நோய்

பசியை ஏற்படுத்த வேண்டுமென்று பலர் குடிக்கிறார்கள். ஆனால் அதிகளவு மது அருந்துபவர்கள் பசியையே இழந்து தனது உணவையே கவனிக்காது வருகின்றார்கள். இதனால் போசனைக்குறைபாடு, நோய் எதிர்ப்புசக்தி குறைவுபடுதல், நோய் தொற்று முதலிய ஏற்படுகின்றது.

## ஈரலுக்கு ஏற்படும் தாக்கம்

உணவு உண்ணுவதை தவிர்ப்பதால் "சிரோசிஸ்" என்னும் பாரிய நோய்ப் பாதிப்பு ஏற்படும். ஈரல் சுருக்கமாக மாற்றமடைந்து மெல்ல மெல்ல தனது தொழிற்பாடுகளை இழக்கும். மதுவை தொடர்ந்து அருந்துவதால் ஏற்படும் "சிரோசிஸ்" என்னும் நோய்க் காரணமாக அதிக மரணம் ஏற்படுகின்றது.

## இதயநோய் காரணமாக ஏற்படும் நோய்

இதயத்தின் தசைகளை மது பாதிப்பதால் நாட்பட்ட இதயநோய் ஏற்படும். இதயம் முற்றாக இயங்கமுடியாத நிலை ஏற்படும். அதிக மதுவினால் அதிகுருதி அமுக்கம், பாரிசவாதம் ஏற்படலாம்.

## பாலியல் செயற்பாடும் மதுவும்

பாலியல் செயற்பாட்டைக் கூட்டும் என்றும் நம்பியே பலரும் மதுவை எடுக்கின்றனர். ஆனால் இதிலும் ஏமாற்றம் தான். மது பாலியல் செயற்பாட்டைக் குறைக்கவே செய்கின்றது. நீண்ட காலம் மது அருந்துபவர் தனது ஆற்றலையும் ஆண்மையையும் இழப்பார். மனைவியால் எப்போதும் சந்தேகம் ஏற்படும்.

## உளத்தில் ஏற்படும் பாதிப்பு

மதுவை தொடர்ந்து குடிப்பவர் உடல் அதற்குப் பழக்கப்பட்டு செயல் இழந்து சகிப்புத்தன்மை ஏற்படுகிறது. இதனால் அதிகளவு மதுவை எடுக்க வேண்டிய நிலை ஏற்படும். நிலைமை மோசமடைய மனக் கவலை தான் அதிகரிக்கும். பின்னர் மனக்கவலை மறக்க என்று கூடிய அளவில் மதுவை அருந்துவார்கள். இதனால் அதிக நரம்புத் தொகுதியையே சோர்வடையச் செய்துவிடும். இதனால் மனச்சோர்வு உண்டாகி சந்தேகம், விரக்தி, தூக்கம் இன்மை, பயம் என்பன ஏற்படும். சாதாரண மக்களிலும் பார்க்க இத்தகைய செயற்பாடுகள் தற்கொலை எண்ணத்தை தோற்றுவிக்கின்றது. இதன் காரணமாக மரண வீதமும் அதிகரிக்கின்றது.

## தடுப்புமுறை

குடிக்கு அதிகளவு அடிமையானவர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிமையாகிவருகின்றவர்கள் அனைவரும் குடியை விட விரும்பினால் அவர்களுக்கு பல வழிகளிலும் உதவும் முறை இருக் கின்றன. அவற்றில் முக்கியமானதும் மிக இலகுவானதுமான குழுச்சிகிச்சை எனலாம். இம்முறையில் குடியை விட்டவர்களும் குடியை விட விரும்புவோர் கூடி கலந்துரையாடி அவர்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதாகும். தாமும் அவர் களைப் போல குடியை விட்டு இயல்பான அமைதியான வாழ்வுக்கு திரும்ப முடியும் என்ற நம்பிக்கையை பெறுகின்றார்கள். வாரத்திற்கு ஒரு முறை ஒரு குறிப்பிட்ட நாளில் சந்திப்பதன் மூலம் குடியை முற்றாகவே விட்டுவிட வழி பிறக்கின்றது. குடியை முற்றாக விடுபவர் வைத்திய ஆலோசனையுடனேயே விட வேண்டும். அப்போது தான் குடியை விட்டவுடன் ஏற்படும் "புவிரியன் நெம்ன்ஸீ" மாயத் தோற்றங்கள் உண்டாதல், கை விரல்கள் நடுங்குதல், வலிப்பு ஏற்படல், மனச்சோர்வு, பயம் போன்ற நிலைக்கு வைத்திய சிகிச்சை அளிக்க முடியும். ஒருவர் குடியை விடுவதற்கு அவரின் மனைவி, குடும்பத்தினர், குழந்தைகள் அனைவரினதும் ஒத்துழைப்பும் மிகவும் தேவையாக இருக்கும். இதன் மூலம் இதற்கு குடிபோதை, புகை அற்ற ஒரு அமைதியான சமுதாயத்தை நோக்கி செல்ல முடியும். சில மனிதர்கள் தம்முள் மனத்தைரியத்தை நிறுத்திக் குடிப்பழக்கத்தினை விடுத்தாலும், புகைத்தல் என்பது வாழ்விற்கு பெரும் சவாலாக காணப்படுகின்றது. புகைத்தல் என்பது புகைப்பிடிப்பர் மட்டும் பாதிப்பதாக கருத முடியாது, புகைப்பிடிப்பவரின் அருகில் இருப்பவரும் புகைத்தலினால் அதிகம் பாதிக்கப்படுகின்றார்கள் இவ்வாறு பாதிக்கப் படுபவரும் மார்பக புற்றுநோய், இதய அழிவு போன்ற ஏற்படுவதற்கு பெரும் அச்சுறுத் தலாகும். சிகிரெட்டில் காணப்படும் "நிக்கோடடின்" என்னும் மிக கொடிய பதார்த்தம் வயிற்றில் நெருப்பை மூட்டும். சுகத்தை அனுபவிப்பதற்காக இறைவன் தந்த உடலை, வாழ்நாளில் எண்ணிக்கை இவை அனைத்தையும் புகைப்பிடிப்பவர்களே அழித்துக் கொள்கின்றார்கள். எனவே புகைத் தலின் எண்ணிக்கையும் அதனை பிடிப்பவ ரின் எண்ணிக்கையும் குறைவதாகவே இல்லை. இவற்றை அழிக்க நினைத்தால் அதன் வழியை கண்டுபிடிப்பது தான் மிக முக்கியமான விடயம் ஆகும். புகை வாழ்வின் மிகப் பெரிய பகையாகும். இவ்வாறான புகை, போதையை அழிப்பதால் நாம் இயற்கை அழகு அன்பான பண்பான உறவான சமுதாயத்தை உருவாக்க முடியும்.

U. கிருசாயினி
தரம் – II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுத்தமான சூழலை உருவாக்குவோம்.

இன்று உலகெங்கும் சுற்றுச்சூழல் சீர்கேடு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. உயிரினங்கள் நல்ல நீரையோ, சுத்தமான காற்றையோ, சுகமான வாழ்வையோ நுகர முடியாதனவாக அவதியுறுகின்றன. நம்மைச் சுற்றியுள்ள சுற்றுப்புறம் நாள்தோறும் மோசமடைந்து வருகிறது. நிலம், நீர், காற்று என அனைத்துப்பகுதிகளிலும் மாசுபாடுகள் பெருகியவண்ணம் உள்ளன. இதனால் சுத்தமான சூழலை உருவாக்குவதற்கு தடையாக உள்ளது. சுற்றுச்சூழல் மாசுபடுவதற்கு மனிதனது நடத்தைகளே பெரிதும் காரணமாகிறது. இங்கு சுத்தமான சூழலை உருவாக்க வேண்டிய மக்கள் சூழலை மாசுபடுத்தி வருகின்றனர். இந்நிலை மாற வேண்டும். மாற்ற முயல வேண்டும். இது நம் ஒவ்வொருவரது கடமையாகும்.

இன்று நகர்ப்புறங்களே பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றன. நகரங்களில் மக்கள் தொகை நாளுக்கு நாள் பெருகிய வண்ணம் உள்ளது. சீரான குடியிருப்பு வசதிகள், நீர் விநியோக வசதிகள், கழிவுகளை உடனுக்குடன் அகற்றக்கூடிய வசதிகள் குறைந்தே காணப்படுகின்றன. இதனால் நகர்ப்புறத்தில் பெருமளவில் குப்பைக் கூளங்கள் தேங்கிக்கிடக்கின்றன. இதனால் அழுக்குநீர் தேங்கி நிற்கும் நிலை காணப்படுகின்றன. அழுக்கு நீரில் நோய்களைப் பரப்பும் கிருமிகள், நுளம்புகள் உற்பத்தியாகின்றன. இதனால் தொற்று நோய்கள் பரவிவிட வழியேற்படுகின்றது.

நாம் வாழுமிடத்தைச் சுத்தமாக வைத்திருக்கவேண்டியது நமது தலையாய கடனாகும். ஆனால் நாம் என்ன செய்கின்றோம்? நாம் வாழ இடமளித்த இடத்தையே மாசுபடுத்துகிறோம். நாளாந்தம் நாம் பாவித்துவிட்டு பொலித்தீன் உறைகள், பிளாஸ்ரிக் பொருட்கள் போன்றவற்றை நிலத்தில் வீசி விடுகிறோம். அவை நிலத்தில் உக்காது நீண்டகாலம் புதைந்து கிடக்கின்றன. இதனால் நிலம் பெரிது மாசுறுகிறது. இவற்றினால் கால்நடைகளுக்கே பெரும் பாதிப்பு ஏற்படுகிறது என நினைவிற்கொள்ள வேண்டும்.

உயிர்கள் வாழ்வதற்கு இன்றியமையாதது நீர். நீரின்றி உலகில்லை. ஆனால் நீரினை நாம் பேணிப்பாதுகாக்கின்றோம் என்று உரைத்திட முடியாதுள்ளது. நாம் நீர்நிலைகளில் பெரிதும் குப்பைகளை வீசுகின்றோம். துணிதுவைத்தல், பல்துலக்கி எச்சில் துப்புதல், ஆடு, மாடுகளைக் குளிப்பாட்டுதல் போன்ற செயல்களிலும் ஈடுபடுகிறோம். இதனால் நீர்நிலைகள் பெரிதும் மாசடைகின்றது. அழுக்கான நீரைப்பருகுவதனால் பல்வேறு நோய்களுக்கு உட்படுகின்றனர். பலவகையான நோய்க்கிருமிகள் உற்பத்தியாகவும் வழிவகுக்கிறது.

சுத்தமான காற்றையே நாம் சுவாசித்தல் வேண்டும். ஆனால் இன்றைய அவசரயுகத்தில் அதிகரித்துவரும் வாகனப் பெருக்கமும் வானளாவ எழுப்பப்படும் மாடிகளும் சுத்தகாற்றை நாம் சுவாசிக்க முடியாதவாறு செய்துவிடுகின்றன. வாகனங்களும் தொழிற்சாலைகளும் அபரிவிதமாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருகிவருவதால் அவற்றிலிருந்து வெளியாகும் நச்சுப்புகைகள் வாயுமண்டலத்தில் கலந்து நம்மை வந்தடைகின்றன. அவற்றைச் சுவாசிக்கும் மக்கள் சுவாசம் சம்பந்தமான நோய்களுக்கு இலக்காகிறார்கள். சில இடங்களில் வாயுமண்டலத் திலிருந்து அமில மழையே பொழிகிறது. இது உயிர்களுக்கு ஆபத்தையே விளைவிக்கிறது.

இன்று மனிதர்களிடம் புகை பிடிக்கும் பழக்கம் அதிகரித்தே வருகிறது. போக்குவரத்துச் சாதனங்களிலும் வீதிகளிலும் புகைப்பிடிப்போரால் பலர் பாதிப்புக் குள்ளாகியிருக்கின்றனர். இத்தகைய அவலநிலையை புதுக்கவிதை பாடும் கவிஞர்கள் பலர் நகைச்சுவையாக நாட்டு நடப்புகள் பற்றி பாடியுள்ளனர். குப்பைகளை கண்ட கண்ட இடங்களிலே போடக் கூடாது. அவற்றை உடனுக்குடன் அப்புறப்படுத்து வதற்கான ஏற்பாடுகளை உள்ளூராட்சி மன்றங்கள் மேற்கொள்ள வேண்டும். கண்ட இடங்களில் உமிழ்த்தல், இரைச்சல் மிகுந்த ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துதல் போன்றவற்றை கட்டுப் படுத்த வேண்டும்.

சுருங்கக் கூறின் "சுத்தம் சுகம் தரும்" எனும் முதுமொழிக்கேற்ப நாம் ஆரோக்கியமாக வாழ்வதற்குச் சுற்றாடற் சுத்தம் பேணப்பட வேண்டும். அதனைப் பேணிக் காக்கும் பொறுப்பு மக்கள் அனைவரையுமே சார்ந்துள்ளது. சுத்தம் பேணிச் சூழலை பாதுகாக்க அனைவரும் உறுதிபூண வேண்டும். இதுவே காலத்தின் தேவையாகும்.

**அ. தூயவன்**
**தரம் – 08**

**நண்பனைப் பற்றி அடுத்தவரிடம்சொல்லும்போது நல்லதை சொல்**
**அவனிடம் மட்டுமே அவன் குறைகளை சொல் அதுவே சிறந்த நட்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையின்பமே நிலையின்பம்

மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே கலை என்ற ஒரு விடயம் நமது வாழ்வில் ஓர் முக்கிய அங்கமாக இருக்கின்றது. கற்கால மனிதன் தொடங்கி இன்றைய நவீன கால மனிதன் வரை மனிதர்கள் கலையை உருவாக்கிக் கண்டுகளித்து இரசித்து அனுபவித்து வருகிறார்கள். காலப்போக்கில் கலை என்று சொல்லப்படுவது பல மாற்றங்களை உள்ளடக்கி இன்று பல்வேறு முன்னேற்றங்களை அடைந்துள்ளது. கலை என்ற சொல்லின் விளக்கத்தை பல நிலைகளில் கூறலாம். கலை என்பது திறமை மற்றும் நுட்பமான தன்மையை உள்ளடக்கியது. பார்வை, கேட்கும் திறன் மற்றும் பல ஐம் புலன்களின் உணர்வுகளை பாராட்டுக்குரிய வகையில் சொல்வதே கலை என்று அழைக்கப்படுகிறது.

இந்திய மரபிலே குறிப்பாக இந்து மரபிலே 64 கலைகள் கூறப்பட்டுள்ளன. இவை பற்றிய பட்டியலை நோக்கும்போது எவ்வகையான திறனும் கலையெனக் கருதப்பட்டமையினை அவதானிக்கலாம். வழக்கமாக இன்று பொதுவாக கலைகள் எனும்போது இசை, நடனம், நாடகம், இலக்கியம், கட்டிடக்கலை, சிற்பம், ஓவியம் முதலியனவே ஒருவரின் மனதிற்படும். ஆனால் 20ம் நூற்றாண்டில் பெரும்பாலும் கலைகளை ஒன்பதாக வகுத்துள்ளனர். அதாவது கட்டிடக்கலை, சிற்பம், நடனம், இசை, ஓவியம், கவிதை, திரைப்படம், ஒளிப்படவியல், வரைகதை என்பவையாகும்.

கலைகள் பல இருப்பினும் லலித கலைகளுள் சிறந்து விளங்குவது சங்கீதக் கலையாகும். இதற்கு பல காரணங்களைக் கூறலாம். இசையானது மனித வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து காணப்படுகிறது. மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை இசையே தொடர்கிறது. அதாவது குழந்தை பிறந்து மருத்துவிச்சிப் பாடல் தொடக்கம் தாலாட்டுப்பாடல், சிறுவர் பாடல், விளையாட்டுப்பாடல், நலங்குப்பாடல், தொழிற் பாடல், ஒப்பாரிப் பாடல் என வாழ்க்கை முழுவதுமே இசை காணப்படுகிறது. அது மட்டுமன்றி இசையினால் இறைவனையும் அடைந்து விடலாம் என்பது யாவரும் அறிந்த ஒரு உண்மையாகும். அத்தோடு இந்துக் கடவுள்களின் கைகளில் இசைக்கருவிகள் இருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. உதாரணமாக சரஸ்வதியின் வீணை, கண்ணனின் புல்லாங்குழல், நாரதரின் தம்புரா, நந்தினியின் மத்தளம், சிவனின் உடுக்கு என சொல்லிக் கொண்டே போகலாம்.

மேலும் கலைகள் இயற்கையம்சத்தைப் பின்பற்றி எழுந்துள்ளன. கர்நாடக இசையில் அடிப்படையாக விளங்கும் ஸ, ரி, க, ம, ப, த, நி எனும் ஏழு ஸ்வரங்களும் முறையே மயில் அகவுதல், எருது எழுப்பும் ஒலி, ஆடு எழுப்பும் ஒலி, கிரவுஞ்சப் பறவை எழுப்பும் ஒலி, குயில் கூவுதல், குதிரை கனைத்தல், யானை பிளிறுதல் போன்ற ஒலிகளை அடிப்படையாகக் கொண்டவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் சொற்களே இல்லாமல் இதயங்களை கவர்ந்திருப்பவை இராகங்களாகும். உதாரணமாக மோகன இராகத்தினை ஒரு தமிழர் அல்லது சிங்களவர் அல்லது ஆங்கிலேயர், அல்லது வேறு எந்த இன மொழியைச் சேர்ந்தவர் ஆலாபனை செய்தாலும் அனைவராலும் அந்த இராகத்தின் மூலம் வெளிப்படும் உணர்வுகள், இனிமை, ஸ்வரஸ்தானங்கள் என்பவற்றைப் புரிந்து கொள்ள முடிகின்றது. எனவே தான் வார்த்தைகள் இல்லாமல் இதயங்களை, இனங்களை இணைத்து வைக்கும் சர்வதேச மொழி இசையாகும்.

இராகங்களை ஒருவர் மனத்தூய்மையுடன் சுருதி சுத்தமாகப் பாடினால் மழை பொழியும் என்பதை எமது முன்னோர்கள் நிரூபித்துள்ளனர். இவ்வாறு இயற்கையை கட்டுப்படுத்தும் சக்தி வாய்ந்த இசைக்கு முன் பிராணிகள் எம்மாத்திரம். இதனாலன்றோ கிருஸ்ணன் பிருந்தாவனத்தில் ஊதிய புல்லாங்குழல் இசையைக் கேட்டுப் பயிர்களும் மிருகங்களும், பறவைகளும் மெய் மறந்திருக்க, பசுக்கள் தம்மை மறந்து பால் சொரிந்தன என்பதும் குறிப்படத்தக்க ஒரு விடயமாகும்.

சில நோய்களுக்கு மருந்தாகவும் இசை அமைகிறது. கல்வி அபிவிருத்தியிலும் அளப்பரும் பங்கு வகிப்பதோடு, ஓர் அங்கமாகவும் விளங்கிக்கொண்டிருப்பது இசைக் கலையே ஆகும்.

**செல்வி. பி.மேரி ஜேக்குலின்**
**ஆசிரியர் (சங்கீதம்)**

**உலகில் மனிதனால் முடியாதது எதுவும் இல்லை இருந்தும், மனிதனால் முடியாதது மனிதனாக இருப்பது மட்டும்தான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேர் ஐசாக் நியூட்டன்

சேர் ஐசாக் நியூட்டன் 1942ம் ஆண்டு கிறிஸ்மஸ் தினத்தன்று டிசம்பர் 25 இங்கிலாந்தில் லிங்கள் ஷயர் கவுண்டியில் கோஸ்டர் வேர்த்துக்கு அருகில் உள்ள வுஸ்தோர்ப் என்னும் சிற்றூரில் ஒரு சராசரி விவசாய குடும்பத்தில் பிறந்தார். இவர் பிறப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னரே இவரது தந்தையார் இறந்து விட்டார். இரண்டு ஆண்டுகளுக்கு பின் நியூட்டனை அவரது பாட்டியின் கவனிப்பில் விட்டு விட்டு தாயாரும் தனது புதிய கணவனிடம் வாழ சென்று விட்டார்.

நியூட்டன் கிராமப் பாடசாலையில் பயின்றார். ஆரம்பத்தில் அவர் படிப்பில் சரியாக கவனம் செலுத்தவில்லை. ஆனால் ஒரு முறை தன்னை கேலி செய்த வயதில் தன்னைவிட பெரிய சிறுவனை நையப் புடைத்த பின் தன்னம்பிக்கை அதிகரித்து நன்றான படிக்க தொடங்கினார். சிறுவயதில் நியூட்டனுக்கு அறிவியல் ஈடுபாடு இருந்தது. தண்ணீரில் வேலை செய்யும் கடிகாரத்தை கண்டு பிடித்தார். அவர் குடும்ப வறுமை காரணமாக படிப்பை கைவிட வேண்டி இருந்தமை. கல்வி ஆசை அறிந்து கொண்ட மாமன் 1661இல் கேம்பிறிஜ் மருத்துவர் கல்லூரியில் சேர்த்தார். கல்லூரியில் கற்பித்த அரிஸ்டோட்டிலைப் பின்பற்றிய தாகவே இருந்தார். நியூட்டன் டெஸ்கார்க கரடஸ், கலிலியோ கொப்பனிக்ஸ் போன்ற நவீன தத்துவவாதிகளு டைய கருத்துக் களை கற்க விரும்பினார். இவர் 1665 ஈருறுப்பு தோற்றத்தை கண்டுபிடித்தார். பிற்காலத்தில் நுண்கணிதம் என வழங்கப்பட்ட கோட்பாட்டை உருவாக்க தொடங்கினார். இவர் 1665ல் பட்டம் பெற்றதும் பெரும் கொள்ளை நோய் காரணமாக பல்கலைக்கழகம் மூடப்பட்டது. இரண்டு வருடங்களில் வீட்டில் இருந்த படியே புவியீர்ப்பு என்பவற்றை ஆராய்ந்தார்.

இவர் 1665ம் ஆண்டு பட்டப்படிப்பை முடித்தார். 1667ம் ஆண்டு தனது 75வது வயதில் நியூட்டன் டிரினிபி கல்லூரியில் இயற்பியல் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். டிரினிபி கல்லூரியில் அவருக்கு கௌரவ பட்டம் வழங்கப்பட்டது.

புவிசார் விண்வெளி சார் இயக்கங்களை கட்டுப்படுத்தும் இயற்கை விதிகளை முதன் முதலில் விளக்கியவர் இவரே ஆவார். இவர் அறிவியல் புரட்சியுடனும் சூரிய கோட்பாட்டின் வளர்ச்சியுடனும் தொடர்பு பட்டிருந்தார். கோள்களின் இயக்கத்திற்கான கெப்லரின் விதிகள் தொடர்பில் கணித ரீதியான தகவல்களை வழங்கியதில் நியூட்டனுக்கு பங்கு உண்டு. வால் வெள்ளி போன்ற விண்பொருளின் சுற்று பொருட்களில் நீள்வட்டமாக மட்டுமன்றி வளைவாகவும் இருக்கலாம் எனவும் வாதித்து மேற்படி விதிகளை விரிவாக்கினார்.

பட்டகம் (prism) எனப்படும் முக்கோணத்தில் ஒளி விழும்போது ஏற்படும் விளைவாக இவர் கண்டறிந்தார். வெண்ணிற ஒளி பல நிற ஒளிகளின் செய்கை என விளக்கியவரும் இவரே.

அப்பிள் மரம் ஒன்றின் கீழ் இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது அப்பிள் பழம் அவரின் தலையில் விழுந்தபோது சிந்தனையை கிளறி புவி சார்ந்த விண்வெளிசார்ந்த எண்ணக்கரு விவாதித்து நியூட்டனும் லப்னிசும் நுண் கணித கோட்பாடுகளை தனித்தனியே உரு வாக்கியதுடன் வெவ்வேறு குறியீடுகளையும் பயன்படுத்தினார். அவருடைய குறியீடு கள்வழிமுறையும் மேம்பட்டதாக கருதப் பட்டது. அவரது கடைசி 23 வருடங்களில் லிப்னிசுனுடன் பிரச்சினைகளால் பாழாக்கப் பட்டது. தன்னுடைய கண்டுபிடிப்புக்களை திருடியதாக அவர் குற்றம் சாட்டி வந்தார். நியூட்டனுக்கு தன்னம்பிக்கையும் விடாமுயற் சியும் தூண்களாக இருந்ததாக அவருடைய செயற்பாடுகள் வன்மையாக எதிர்க்கப்பட்ட போதெல்லாம் அவர் மனம் தளர்ந்து விடவில்லை. தன்னம்பிக்கையுடன் தனது ஆராய்ச்சியை தொடர்ந்தார். 1669ல் கணித தத்துவத்திற்கான லுக்காரின் பேராசிரியராக தெரிவு செய்யப்பட்டார். நியூட்டனை பற்றிய கோட்பாடுகளில் ஒன்றான ஒவ்வொரு வினைக்கும் அதன் எதிர் திசையிலும் இருந்து சமனான எதிர் வினைக்கும் மற்றும் இன்னொரு கோட்பாடு நிலையான பொருளை நகர்த்துவதற்கு புவிவிசை இன்றியமை யாதது.

இவர் எழுதிய நூல்கள் மெத்தேப் ஆப்பிளக்ரியான்ஸ் எனும் நூலை 1671இலும் ஆப்டிக்ஸ் எனும் நூலை 1704இலும் அரித்த மெடிக்கா யுனிவர்கலிஸ் எனும் நூலை 1707ல் எழுதினார். இவர் சிறப்புகள் 1703ம் ஆண்டில் நியூட்டன் ராயல் சொசைட்டியின் தலைவராகத் தேர்ந்தெடுக் கப்பட்டார். அடுத்த 20 ஆண்டுகள் அவர் ஒவ்வொரு ஆண்டும் தலைவனாக தேர்ந்தெடுக்கப் பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

நியூட்டன் நோய்வாய்ப்பட்டு 1727ம் ஆண்டு மார்ச் 20ம் திகதி இயற்கை எய்தினார். இவரது சமாதி லண்டனில் வைக்கப்பட் டுள்ளது. மாணவராகிய நாம் நியூட்டனைப் போன்று அறிஞராக வாழ்வில் உயர வேண்டும்.

**இ. சுஜீபன்**
**தரம் – 10**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழின் பாரம்பரிய மருத்துவம்

மருத்துவ மனைகளில் முன் பதிவு செய்து கொண்டு மக்கள் காத்துக்கிடக்கும் நிலை இப்பொழுதும். ஆனால் நம் முன்னோர்கள் காலத்தில் வீடு தேடி வைத்தியர் வந்து நோய் தீர்த்தனர். ஒரு காலத்தில் சமுதாய நலம் கருதும் தேவையாக இருந்து வந்த மருத்துவம். இன்றைய காலகட்டத்தில் பணம் கொடுக்கும் துறையாக மாறிவிட்டது. தடுக்கி விழுந்தால் மருத்துவமனை என்று மலிந்து கிடக்கின்றது. இந்த சூழலிலும் நாட்டு வைத்தியத்தின் தேவையும் செயற்பாடும் ஒருபுறம் இருந்துகொண்டு தான் இருக்கின்றது. இயற்கையால் கிடைக்கக்கூடிய புல், பூண்டு, மரம், வேர், செடி, கொடி, பட்டை, இலை, பூ, காய், வித்து போன்றவற்றை பயன்படுத்தி உடல் கோளாறுகளை தீரக்கும் வைத்தியமே நாட்டு வைத்தியம். இது தலைமுறை தலைமுறையாக நம் நாட்டில் இருந்துவரும் பாரம்பரியமான மருத்துவமுறை நவீன மருத்துவம் தோன்றுவதற்கு முன்னே தமிழர்கள் மருத்துவத்தில் கைதேர்ந்தவர்களாக இருந்தமைக்கான சான்றுகள் இலக்கியங்களில் உள்ளன.

**"பத்து மிளகு இருந்தால் பகையாளி வீட்டிலும் விருந்து உண்ணலாம்."**

என்ற பழமொழி இன்றும் வழக்கில் உள்ளது. எமது உணவு பழக்கத்திலும் மாற்றம் உள்ளது.

**"வெளிநாட்டுக் குப்பை உணவை தவிர்த்தால் தொப்பை இல்லாத வாழ்க்கை வாழ முடியும்."**

அந்த அளவிற்கு எமது பாரம்பரிய உணவுகள் ஆரோக்கியமானதாகவும் இருந்தது. முன்னைய காலங்களில் சளி, இருமல் என்றால் வீட்டுவைத்தியமும் பாரம்பரிய வைத்தியமுமே கை கொடுத்தது. ஆனால் நாம் இன்று எழுதிய உடனேயே ரிக்கட் முன்பதிவு செய்து வைத்திய சாலைக்கு செல்கின்றோம்.

ஆங்கில மருத்துவத்துறையை பின்பற்றினால் நோய் உடனேயே குணமாகிவிடும். ஆனால் அதன் பின்தான் பக்கவிளைவுகள் எவ்வளவு? இந்த தன்மை பாரம்பரிய வைத்திய முறைகளில் இல்லை. நோய் குணமாக சிறிய காலம் எடுத்தாலும் அவை பூரணமாகின்றவை அல்லவா? குறைகின்றது. எந்த பக்க விளைவுகளும் இல்லை. எனவே நாம் பாரம்பரிய முறைக்கு மாற வேண்டும். முன்பு வீட்டு வைத்தியத்திற்கு பின்பற்றிய மூலிகைகளும் அதன் பயன்களும்

| | | |
|---|---|---|
| **துளசி** | : | சளி மற்றும் பாம்பு விசத்தை மாற்றும் |
| **வேம்பு** | : | மாறாசுரம், மலேரியா சிறுவர்களுக்கான அகச்சுரம் போன்றவற்றை நீக்கும் |
| **அகத்தி** | : | சலரோகத்தை மாற்றவல்லது |
| **குறிஞ்சா** | : | சலரோகம், கல்லடைப்பு போன்றவற்றை மாற்றும் |
| **குப்பைமேனி** | : | தோல் வியாதியை முழுமையாகக் குணமாக்கவல்லது |
| **கீழ்க்காய்நெல்லி** | : | செங்கன்மாரி, மங்கன்மாரி போன்றவற்றை மாற்றும் |

இவைபோன்ற மூலிகைகளை பயன்படுத்தி பண்டையகால மக்கள் நீண்ட காலம் உயிர் வாழந்தார்கள். சித்தமருத்துவத்திற்கும் நவீன மருத்துவத்திற்கும் இடையிலான வேறுபாடுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சித்த மருத்துவம்**

- பயன்படுத்துவது கடினம்
- பக்கவிளைவு அற்றது
- நோயை முற்றாக குணப்படுத்தும்
- மூலிகைகளை இலகுவில் பெறமுடியும்

**நவீன மருத்துவம்**

- பயன்படுத்துவது இலகு
- பக்கவிளைவு உள்ளது
- நோயை முற்றாக குணப்படுத்தாது
- மருந்துகளை இலகுவில் பெற்றுக்கொள்ள முடியும்

நாம் பாரம்பரிய மருத்துவமுறைக்கு மாறவேண்டும். நாம் பாரம்பரிய உணவு பழக்கத்திற்கு மாறவேண்டும். வரகு அரிசிச் சோறு, பனாட்டு, ஒடியற்கூழ் இவை எல்லாம் எவ்வளவு சுவையல்லவா? இன்று சிறு பிள்ளைகளின் புற்றுநோய், சக்கரைவியாதி இவையெல்லாம் எப்படி வந்தன? மேலைத்தேய உணவுமுறைகளை நாம் பின்பற்றி வந்தமையாலே ஆகும்.

எனவே மேலைத்தேய உணவுகளை எல்லாம் விட்டு பாரம்பரிய உணவுமுறைக்கு மாறுவதோடு எமது ஆயுட்காலத்தை நீண்ட கால ஆயுட்காலமாக மாற்றுவோம்.

**"இயற்கையாக கிடைக்கின்ற உணவுகளை**
**உட்கொள்வோம் எம்மை பாதுகாப்போம்"**

ப. சிலோஜினி
தரம் – 11

# சேர் ஐசாக் நியூட்டன்

இங்கிலாந்து நாடு தத்தெடுத்த முத்து
சேர் ஐசாக் நியூட்டன் என்னும் அற்புதவிளக்கு
ஆயிரத்து அறுநூற்று நாற்பத்து இரண்டாம்
ஆண்டு உலகம் கண்டது ஒரு வெளிச்சம்

நத்தார் திருப்பரிசாய் கிடைத்ததால்
நல்லுலகில் பிறந்தது புது வெளிச்சம்
நியூட்டன் எனும் நாமத்தில்
நிறைந்தது எங்கள் ஞாலம்

புவிக்கு ஈர்ப்பு உண்டு
ஒளிக்கு ஏழு நிறமுண்டு
ஒரு சக்திக்கு எதிர் விளைவு உண்டு
போற்றிடும் பொக்கிசங்கள் உண்டு
போற்றுவது மிக நன்று

K. துஷாந்தனன்
தரம் – 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் மனதை விட்டு என்றுமே நீங்காத பள்ளி நாள் நினைவுகள்

சின்னச் சிட்டாய் சிறகடித்துப் பறக்க, சிந்தனைகளை வளர்க்க, வாழ்வில் சிறந்து விளங்க கானல் நீராம் கல்விதனில் வானம் முட்டும் பட்டமதில் ஏற வெள்ளைச் சீருடை அணிந்தவளாய் எனது சின்ன பயணத்தை தொடர 2008ம் ஆண்டிலே கிளி/ ஐயனார்புரம் தமிழ்க்கலவன் பாடசாலை எனும் தொடரூந்தில் ஒரு பிரயாணியாக ஏறினேன். அத் தொடரூந்தில் ஏறியதும் ஆரம்பம் முதல் இன்றுவரை பல நினைவுத் துளிகளை அள்ளித் தந்தது.

எல்லோருக்கும் மங்காத நினைவாய் இருப்பது அவர்கள் பள்ளிக்கு வந்த முதல் நாள். அதேபோன்று போன்று எனக்கும் மறக்க முடியாத நினைவலையாய் என் முதல் பள்ளி நாள் இருந்தது. நான் என் அம்மாவைப் பிரிந்து வந்து பள்ளியில் சேரும்போது அம்மாவிற்கடுத்த தாயாக தென்பட்டவர் என் முதலாம் வகுப்புச் சகுந்தலா ரீச்சர்.

அவருடைய அன்பும் என்மேல் காட்டிய கரிசனையும் அளவிடமுடியாது. அம்மாவைப் பிரிந்த கவலைகள் தொலைந்து என் பள்ளியின் இன்பம் என்னை மகிழ வைத்தது. தொடர்ந்து சென்ற என் பயணத்தில் ஏற்பட்ட சிக்கல் தான் 2008ம் ஆண்டின் பின்னரைப்பகுதியில் ஏற்பட்ட யுத்தம். இந்த யுத்தமானது பலரது வாழ்வையும், உயிரையும் மாய்த்துப் போட்டது. என் கண்ணால் கூட எத்தனையோ உயிர் இழப்புகளை பார்த்தேன். அன்று என்னை பயம் பிடித்துக்கொண்டது. நானும் ஒருநாள் இறந்துவிடுவேன், என் தொடரூந்து பயணம் இத்துடன் நின்றுவிடும் என நினைத்து அழுத சந்தர்ப்பங்களும் உண்டு. ஆனால் கடவுளின் சித்தத்தால் நானும் என் குடும்பத்ததாரும் உயிர் பிழைத்துக் கொண்டோம். மீண்டும் எனது பாடசாலையில் வந்து நான் படிப்பேன் என்று கனவில் கூட நினைக்கவில்லை. அதையெல்லாம் தாண்டி மீண்டும் புத்துயிர் பெற்றது தான் என்னால் மறக்க முடியவில்லை.

2010ம் ஆண்டில் யுத்தம் முடிந்த பிற்பாடு என் பாடசாலையைப் பார்த்ததும் என் கனவுகள் யாவும் கலைந்து போகும் அளவுக்கு எட்டி விட்டது என் பள்ளி நினைவுகள். மிகவும் மனம் உடைந்து போனேன். சித்திரமாய் இருந்த என் பள்ளி இப்படி சின்னாபின்னமாய் போனதும் என் நம்பிக்கையை இழக்க நேரிட்டது. சில காலம் கழிந்தன. அப்போது நான் யோசித்தேன். என் மனதில் தோன்றிய வெறிகளை சாதிக்க வேண்டும் என்று.

**முயற்சி இருந்தால் முதலாய் வருவாய்**
**முயன்று முடித்தால், நீ தான் வெல்வாய்**
**தடைகள் தாண்டி நடைகள் போடு**
**சுவரை எழுப்பி சித்திரம் வரை**

என்ற சிந்தனைகள் இவ்வாறு என் கல்வியை வளமடைய வழி அமைத்தேன். மீண்டும் ஒரு மகிழ்ச்சியான பயணமாக தொடரூந்துப் பயணம் மாறியது.

முதல் தடவை என எல்லோரும் கூறும் புலமைப்பரீட்சை வகுப்பில் கால் எடுத்து வைத்தேன் 2012ம் ஆண்டில். அப்போது நான் மிகவும் ஆர்வத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்தேன், முயற்சித்தேன். என் தடையை தாண்ட எனக்கு உறுதுணையாக அநேகர் இருந்தார்கள். அதிலும் என் 5ம் வகுப்பு ரீச்சர் ஜெகதீஸ்வரியும் எனது அம்மாவும் தான். என் வாழ்வில் அவர்களை மறக்க முடியாது என் இதய அறையில் ஒட்டிக்கொண்டார்கள். முயற்சியும் பயிற்சியும் செய்த நான் எடுத்த செயற்பாடுகள், இறைநம்பிக்கை என்பன என்னைப் பல பாராட்டுக்களை பெற வழி வகுத்தன. முதல் தடையை இவ்வாறு தாண்டும்போது பல நினைவுகள் என்னில் வந்து சேர்ந்தன.

என் தொடருந்து பயணத்தில் ஓட்டுனர்களாக என் ஆசான்களும் அதில் பயணிப்பவர்களாக நானும் என் நண்பர் களும் பயணித்தோம். பள்ளி நினைவு மட்டும் தான் என் இறந்த காலத்தை நினைக்க வைக்கும் ஞாபகங்களாகும்.

அடுத்து என்னால் மறக்க முடியாதது என் பள்ளியில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்வுகளும் தான். முக்கியமாக பொங்கல், கால்கோள் விழா, ஆசிரியர் தினம், சிறுவர் தினம், வாணிவிழா, பரிசளிப்பு விழா, ஒளிவிழா என்பன காணப்படுகின்றன. இதுமட்டுமல்லாது பல கலைத்துறைகளை மேம்படுத்த பல்வேறு மன்றச் செயற்பாடு களும் நடைபெற்று வருகின்றன. அத்தோடு 2017ம் ஆண்டிலே தமிழ்த்தினம், ஆங்கில தினம் என்பனவும் நடைபெற்றன. நான் வயதாகி வியாதிப் படுக்கையில் கிடந்தாலும் என் பள்ளி நினைவுகளை நினைக்காது இருக்கவே மாட்டேன். இருக்கவும் முடியாது எனலாம். அதே போன்று ஒவ்வொரு வருட மும் செல்லும் கல்விச் சுற்றுலாக்கள் என்பன பல அனுபவங்களையும், பல பாட விளக்கங் களையும் பெற்றுத்தந்தன. நண்பர் களுடன் சேர்ந்து இருக்கையில் வரும் இன்பத்தை உணர முடிந்தது. மறவாத நினைவாய் எனக்குள் என்றும் வாழ வழிவகுத்தது.

2017ம் ஆண்டிலே என் மனதை விட்டு என்றுமே நீங்காததாய், நீங்கமுடியாததாய் இருப்பது மேலைத்தேய வாத்திய அணி ஒன்று தெரிவு செய்யப்பட்டு அதைப் பழகி முதலாவதாக பரிசளிப்பு விழா அடுத்து விளையாட்டுப் போட்டி என என் பள்ளி நிகழ்வுகளில் அவற்றை இசைக்க வழியேற் பட்டதாகும். என் பள்ளி வரலாற்றிலே முதன் முதலாவதாக மேலைத்தேய வாத்திய அணியாக காணப்பட்டது எனது அணிதான் எனக் கூறும்போது மிகவும் சந்தோசத்தையும் பெருமையையும் எனக்கும் என் சக நண்பர்களுக்கும் அள்ளித்தந்தது. அதிலும் எனக்கு மிகவும் சந்தோசம் என்னவெனில் அந்த அணிக்கு தலைவியாக நான் இருந் தமையேயாகும்.

ஒரு மனிதனின் வாழ்வில் இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும் எனச் சொல் வார்கள். அதே போல் என் பள்ளி நினைவு களில் கவலை தந்தது 2017ம் ஆண்டு O/L பரீட்சைக்காக தயார் செய்து கொண்டு தம் பள்ளிப் படிப்பை நிறைவு செய்ய காத்திருந்த என் சகோதரர்களின் மனம் தான். கடைசிக் கட்டத்தில் அவர்களுக்கான பிரிவு உபசார விழாவை நடாத்தும்போது ஒரு இனம்புரியாத கவலையும் மறுபுறம் அடுத்த வருடம் இந்த நிலைக்கு நாம் ஆளாகிவிடுவோமே என்ற அச்சமும் எழும்பின.

2018ம் ஆண்டின் தொடக்கத்திலே எனக்கும் என்சக நண்பர்களுக்கும் மகிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தந்த விடயமாவது ஒரு வலைப்பந் தாட்ட அணியை தெரிவு செய்து போட்டிக் குச் சென்றதாகும். போட்டியிலே நாம் வெற்றி பெறவில்லை என்றாலும் போட்டியில் பங்கு பற்றியது பெரும் மகிழ்வைத் தந்தது. இவ்வாறு பள்ளிப்பயணம் தொடருகையில் சில சில நினைவுகள் மாத்திரம் நெஞ்சில் ஆழமாய் புதையும்.

நான் இறக்கும்வரையில் கூட என் நண்பர்களை நினைத்துக் கொண்டே இருப் பேன். ஏனெனில் அவர்கள் என்மேல் கொண்ட அன்பும் நட்பும் சொல்ல முடியாது. அவ்வளவு விலையேறப் பெற்றது. நான் அழும்போது என் கண்ணீரை துடைத்த நட்பு, என் கஸ்டத் தின் போது எனக்கு உதவிய நட்பு, யார் என்னைப் பற்றி பிழையாகக் கதைத்தாலும் அதைத் தாங்க முடியாதவர்களாய் அவர் களிடம் சென்று சண்டைபோடும் நட்பு என ஆயிரம் வகைகளைப் போட்டுப் பார்க்கலாம். எனவே என் நண்பர்கள் என் இதயத்தின் ஓரத்தில் மாத்திரம் அல்ல என் உடல், உயிர் என எல்லாவற்றிலும் கலந்தவர்களாகி மறக்க முடியாதவராய் அழிக்க முடியாத பாறைகளாய் உருமாறி விட்டார்கள்.

என் ஆசான்களும், அதிபரும் என்னை நல்வழிப்படுத்தி எனக்கு ஊக்கம் தந்தவர்கள் அவர்களையும் என் வாழ்நாளில் மறப்பதென்பது "கல்லில் நார் உரிப்பது" போன்ற மிகவும் கஸ்டமான விடயமாகும். பெற்றோருக்கடுத்த கடவுள் என் குருமார் களே. அவர்கள் இல்லையெனில் நான் தடைகளை தாண்டியிருக்க முடியாது. வாழ்வில் வெற்றி காண முடியாது. எனவே என் ஆசான்கள் என் கண்போன்றவர்கள். அவர்கள் இல்லையெனில் வாழ்வே இருள டைந்துவிடும். எனவே முதலாம் வகுப்பு தொடங்கி பதினோராம் வகுப்பு வரும் வரைக்கும் என்னை சீர்படுத்தி, ஊக்குவித்து நல்வழிப்படுத்திய ஆசான்களை மறக்கவே முடியாது.

சின்ன சிட்டாய் பள்ளிக்குள் வந்து தொடருந்துப் பயணத்தை அழகாய் ஆரம்பித்து அதிலே முடிவுவரை வருவதற்கு எத்தனையோ தடைகள் வந்தாலும் அதை யெல்லாம் தாண்டி நினைவலையால் நீந்தும் மீனாய் ஆகி விட்டேன். என் மனதில் அடித்த சிட்டு இப்போது பட்டாம்பூச்சியாக சுற்றித் திரிகிறது நினைவலைகளோடு. என்றுமே யாராலுமே மறக்க முடியாது பள்ளி நினைவு களை. நானும் என் வாழ்நாளில் இவற்றை யெல்லாம் மறந்துவிடவே மாட்டேன். அவ் வாறு என் பள்ளி நினைவை மறக்க வைக்கும் ஒரே ஒரு ஆயுதம் என் மரணம் மட்டுமே.

**K. அன்பரசி**
**தரம் – 11**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயற்சி

முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை. நம்மால் இது நிச்சயம் முடியாது என்று எண்ணும் கடினமான காரியங்கள் கூட திரும்ப திரும்ப விடாமுயற்சியுடன் செய்தால் கட்டாயம் வெற்றியடைய முடியும். அது மேலும் நமக்கு நம்பிக்கையை ஊட்டும்.

'ரால்ப் எமர்சன்' 'எந்த செயலை செய்வதற்கு விடாமுயற்சி எடுக்கிறோமோ அதனை வெல்ல முடிகிறது. சாதிக்கிற போது அந்தச் செயல் என்றும் எளிமையாகி விடவில்லை. நமது முயற்சி அதனை செய்து முடிக்க எளிமையாயிருக்கிறது' என்றார்.

எந்தக் காரியமும் ஆரம்பமாகும் போது மலைப்பாகத்தான் தோன்றும். குழந்தை கூட நடக்க ஆரம்பிப்பதற்கு முன்னர் விழுந்து எழுந்துதான் நடக்கப் பழகுகிறது. கீழே விழுகிறோமோ என்று அவர்கள் முயற்சிக்காமல் விடவில்லை. விடாமுயற்சி மட்டும் இல்லாவிட்டால் பல சாதனைகள் நடந்திருக்க மாட்டா 'தோமஸ் அல்வா எடிசன் சொல்கிறார்'. ஒரு தோல்வி ஏற்பட்டால் மேலே முயற்சி செய்யாமல் இருப்பது தான் பலவீனமே. இன்னொரு முறை முயற்சி செய்து பார்ப்போமே எனும் எண்ணந்தான் வெற்றிக்கு நிச்சயமானவை.

புத்தகங்களைத் தொடர்ந்து படித்து வந்தால் பல அறிஞர்களின் பொக்கிசங்களை நம்மால் அறியமுடியும். நாம் எல்லாம் படித்து முடித்து விட்டோம் என்று எண்ணுவது சுலபம் ஆனால் கற்றது கைமண் அளவுதான் என்று புத்தக சுரண்டல்களை தோண்டத்தோண்ட புரியும் ஒவ்வொரு சாதனையாளரும் ஆரம்பத்தில் எவ்வளவு சோதனைகளை சந்தித்து இருக்கிறார்கள். அரசியல், ஆராய்ச்சி, இலக்கியம், இசை என்று எந்தத் துறையிலும் சரித்திரத்துறை செய்வதற்கு எத்தனைமுறை தோல்வியைத் தழுவி இருக்கிறார்கள் என்று தெரியும்.

1936ல் 'தியோடர் சேயஸ்கீசல்' எனும் நாவலாசிரியர் ஐரோப்பாவிற்கு கப்பலில் பயணித்துக்கொண்டிருந்தார். அப்போது கப்பல் எஞ்சினின் சத்தத்தின் தாளகதி அவரை ஒரு பாடலை எழுதத் தூண்டியது. அதை அடிப்படையாக வைத்து ஒரு நாவலை எழுதினார். அந்த நாவல் பதிப்பாளர்களால் 27 முறை ஏற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பப்பட்டது. பலர் இரண்டு மூன்று முறை தோல்வி கிடைத்த பின் இனிமேல் ஒன்றும் செய்ய முடியாது என்று விட்டு விடுவார்கள். ஆனால் 27 முறை தோல்விக்குப்பிறகு அவரது நண்பர் ஒருவர் அவருக்காக அந்த நாவலை புத்தகமாக வெளியிட்டார். வெற்றியும் அடைந்தார். டாகடர் சேயஸ் 1991ம் ஆண்டு இறந்தார். அதற்கு அவரது புத்தகம் 200 மில்லியன் பிரதிகள் 15 மொழிகளில் விற்றிருந்தன. அவரது இறப்பிற்கு பிறகு மேலும் 22 மில்லியன் பிரதிகள் விற்றன.

'மல்பெரி தெருவில் அதைப் பார்த்தேன் என்று நினைக்கும்போது' என்ற தலைப்பிலான அந்தப் புத்தகத்தின் கதாபாத்திரங்கள் அனைத்து குழந்தைகளின் மனதிலும் குதூகலத்தை ஏற்படுத்தியது. அந்த எழுத்தாளரின் விடாமுயற்சிக்கு கிடைத்த பரிசு இது.

ஹாரிப்பாட்டரை உருவாக்கிய ஜே. கே ரௌளிங்கைப் பற்றி தெரியாதவர்கள் யாரும் இருக்கமுடியாது. மணமுறிவான தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைக்குத்திருந்த பெண்மணி கீசலைப் போலவே இவருக்கும் குழந்தைகளுக்கான புத்தகம் எழுத வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. அவருக்கு ஒரு பெண் குழந்தை இருந்தது. போதுமான பணவசதி இல்லாத தால் கிடைக்கும் நன்கொடைகள் மூலமே வாழ்க்கை நடாத்தி வந்தார். ஆனாலும் தான் எழுத வேண்டும் என்ற முயற்சியைக் கை விடாமல் தொடர்ந்தார். கொஞ்சம் கொஞ்ச மாக தனது ஹாரிப்பாட்டர் கதையை பல வருடங்கள் தொடர்ந்து எழுதினார். அவருக் காக எழுதும் கதை மற்றவர்களுக்கு பிடிக் குமா? என்று சந்தேகம் யாராவது பிரசுரிக்க மாட்டார்களா? என்ற ஆர்வம் மட்டும் இருந் தது. அவர் சொல்கிறார் 'நான் குழந்தையாக இருந்தபோது எனக்கு என்ன படிக்கப் பிடிக்குமோ அதைத்தான் நான் எழுதினேன்' என்று. பல பதிப்பாளர்கள் அவரது புத்தகங் களை பிரசுரிக்க மறுத்து விட்டார்கள் ஒரு முறை தவிர ஹாரிப்பாட்டார் புத்தகங்கள் இன்று எவ்வளவு பிரபலமானவை என்று நாம் அனைவரும் அறிவோம்.

2004ம் ஆண்டுக்குள் நூற்றுக் கணக் கான கோடி டாலர்கள் அவருக்கு கிடைத் தது. இலட்சக்கணக்கானோர் அவரது புத்த கங்களை வரிசையில் நின்று வாங்கினார்கள். அவரது விடாமுயற்சிக்கு அவருக்கு அலாவு தீனின் அற்புத விளக்காக இருந்தது. அவரது விடாமுயற்சிக்கு முன்னால் ஹாரிபாட்டரின் மந்திர வித்தைகள் காட்ட ஒன்றுமே இல்லை எனலாம். வெற்றிக்கு பின்னால் அவர் சொன்னார் எனது புத்தகம் பிரசுரமானது ஓர் அற்புதமான நிகழ்வுதான் ஆனால் எனக்குக் கிடைத்த மிகப்பெரிய பரிசு வாசகர்கள் காட்டும் உற்சாகம்தான். T.V யின் முன் கட்டுண்டு கிடந்த குழந்தைகளை தனது புத்தகத்தின் மூலம் மீட்டெடுத்ததே அவர் தான். பல இலட்சக்கணக்கானோருக்குப் படிப்பதனால் ஏற்படும் சந்தோசத்தை தன் புத்தகங்கள் மூலம் காட்டினார். தோல்விகள் கதவை மூடும்போது தொடர்ந்து விடாமுயற்சி யுடன் கதவைத் திறப்பதுதான் வெற்றிக்கான சாவி. விவேகானந்தர் சொல்கிறார். வெற்றி பெறுவதற்கு தேவையான முடிவில்லா விடாமுயற்சியும் அதிகமான நம்பிக்கையும் தான் விடாமுயற்சி கொண்டவனாவான் என சங்கல்ப சக்தியால் மலைகளும் நொருங்கி விழுவதும் உண்டு. அன்று சொல்வான் அதுபோன்ற சக்தியைக் கொண்டிரு அது போன்ற மனஉறுதியை கொண்டிரு நன்றாக உழைத்திரு உனது குறிக்கோளை நிச்சயம் நீ அடைவாய். கடலை நோக்கி மலை சொல்லியது நான் உன்னை விட பலசாலி என்னை யாரும் அழிக்க முடியாது என்று பல ஆயிரம் ஆண்டுகளில் கடலின் அலைகளால் மலை மறைந்தது. கடல் அலைகள் தொடர்ந் தன.

ஒருமுறை தோல்வியை சந்தித்து விட்டால் பின் துவண்டு விடாதே. தோல்வி நிரந்தரம் அல்ல தோல்வி வந்தால் அதிலி ருந்து மீண்டும் முன்னேறு. ஆனால் ஒரு போதும் முயற்சி செய்ய மறக்காதே. இதனை மறவாமல் இருந்தாலே வெற்றி நம் காலடி யில் சரணடையும். நம் நாட்டின் நோபல் பரிசாளர் தாகூரின் ஆரம்ப காலத்து கவிதை களை வங்கமொழி அறிஞர்கள் எவ்வளவோ அவமானப்படுத்தினர். தாகூர் அவரது மேதா விலாசத்தை விடவும் அவரது விடாமுயற் சியே அவருக்கு நோபல் பரிசை கொண்டு கொடுத்தது. இதே போல் முயற்சி செய்த வர்கள் பலர் இருக்கிறார். அவர்களை போல் நாம் விடாமுயற்சியுடன் ஒரு காரியத்தை செய்தால் வெற்றி அடைய முடியும்.

**வி. விந்துஜன்**
**தரம் - 08**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களவு போனது விவசாயத்தின் உரிமை

## கண்ணால் காணக்கூடிய ஒரே ஒரு சாமி விவசாயி

எமது நாடு ஓர் விவசாய நாடு என்பதினால் விவசாயிகளிற்கு எமது நாட்டில் பஞ்சமே இல்லை.தொழில்களில் மகத்தான தொழில் விவசாயம். இந்த தொழிலை செய்யும் விவசாயி மகத்தானவன். சோறு போடுபவன் சாமி என்றால் சோற்றைப் பெற்றுத்தருபவனும் சாமியே. விவசாயி ஆனவன் தன் இலாபம் பாராது மற்றவர் வயிற்றை நிரப்புகின்றான்.

உழவே கதியென்று விவசாயியோ மழை, வெயில் பாராது பிறர் பசியைத் தீர்க்கின்றான். நாட்டில் உரமில்லாமல் போனாலும் மழை இல்லாமல் போனாலும் உழைக்கும் விவசாயிக்கோ ஈடில்லை. கண்ணால் காணக்கூடிய தெய்வமான விவசாயிக்கு விடுமுறையென்று ஒருதினமும் இல்லை வருடம் முழுவதும் வியர்வை சிந்துகின்றான். நல்வழிப்படுத்தும் பெற்றோர் சிறுவயதிலிருந்து நற்சிந்தனைகளைத் தம் பிள்ளைகள் மனதில் விதைத்து நீ வைத்தியராக வா, சட்டத்தரணியாக வா, பொறியியலாளராகவா என்பார்கள். ஆனால் ஒரு பெற்றோர் கூட தன் பிள்ளையை விவசாயியாக வா என்று கூறுவதில்லை. விவசாயிகளை மட்டமாகவே கூறுவார்கள்.

நமது வாழ்க்கையில் ஒரு முறையாவது வைத்தியர் தேவைப்படுவார். ஒரு முறையாவது சட்டத்தரணி தேவைப்படுவார். நமது பசியைப் போக்க ஒருநாளில் மூன்று முறை தேவைப்படுபவன் விவசாயி மட்டுமே. விவசாயியால் பச்சை மட்டும் பரப்பப்பட்ட வயலில் இன்று பல கட்டங்கள் எழுகின்றன. இதனால் சூழல் மாசடைகின்றது என்பதை அறியாது விஞ்ஞானம் வளர்ச்சியடைகின்றது என்கின்றோம்.

வறுமையில் பேரடிபட்ட விவசாயியோ சதுரடிக்கு விலை பேசி தன் சொந்த நிலத்தை விற்கின்றான். விவசாயியை அவமரியாதை செய்யும் நாம் அறிய வேண்டும். விவசாயிகளின் கை பட்டுத்தான் ஒவ்வொரு பருக்கையும் எம் கையை வந்தடைகின்றது என்று. கைமரந்து உழைக்கும் விவசாயிக்கு முதுகும் வயிறும் மறந்து போனது அடிபட்டு சீரோடு வாழ்ந்த விவசாயி இப்போது போராடி வாழ்கின்றான். விவசாயி போராடி போராடி சோரவில்லை என்பதையும் அவன் இல்லாமல் போனால் நமக்கு சோறே இல்லை என்பதையும் நாம் மறக்க கூடாது.

விவசாயி தன் வயிற்றுக்குப் போராடவில்லை, ஊர் வயிற்றுக்கும் தான் என்பதனை நாம் புரிந்து கொள்ளும் வரை விவசாயிகளின் போராட்டம் வெறும் சத்தமாக மட்டும் தென்படும். நாம் இந்த போராட்டத்தை புரிந்து கொள்ளாவிட்டால் சோற்றுக்கு யுத்தம் நடக்கும் என்பதை உணர வேண்டும்.

தொலைக்காட்சியில் வெளிவரும் விவசாயிகளின் போராட்டத்தை நாம் மறுவாரம் தொல்லைக்காட்சியாக மாற்றி வருகின்றோம். விவசாயி வறுமையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரடிபட்டு தன் நிலத்தை விற்கின்றான் என்றால் அவன் தன் தாய்மடியை தத்து கொடுப்பதற்கு சமனானது என்பதனை புரிந்து கொள்ள வேண்டும்.

விவசாயிகளுக்கு தண்ணீர் வங்கியும், வங்கித்தள்ளுபடியும் பொய்யாய் போனது. ஒவ்வொரு விவசாயியும் வறுமையில் வாடி தற்கொலை செய்தால் நம் நிலை தான் என்ன?

பயிர் வாடியதால் விவசாயிக்கு ஆல மரம் தூக்குமரம் ஆனது, பூச்சிக் கொல்லி மருந்தானது விருந்தானது இப்படியே போனால் நம் நிலைமை தான் என்ன?

**"அழிந்து போவது விவசாயத்தின்**
**வளர்ச்சி மட்டுமல்ல**
**உலகின் வளர்ச்சியும் தான்"**

**S. உஷாளினி**
**தரம் – 11**

# புத்தக பொன் மொழிகள்

1) நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கி வந்து என்னைச் சந்திப்பவனே தலை சிறந்த நண்பன்?

ஆபிரகாம்லிங்கன்

2) ஆயிரம் புத்தகங்களை வாசித்தவன் ஒருவன் இருந்தால் அவனை காட்டுங்கள்: அவனே எனது வழிகாட்டி?

ஜீலியஸ் சீசர்

3) உலக வரையத்திலுள்ள மூலை முடுக்குகளுக்கெல்லாம் போகவிருக்கிறாயா, ஒரு நூலகத்துக்குச் செல்?

லஸ்கார் டஸ்

4) புரட்சிப் பாதையில் கைத்துப்பாக்கிகளை விட பெரிய ஆயுதங்கள் புத்தகங்களே?

பெனின்

5) உண்மையான வாசகன், வாசிப்பை முடிப்பதே இல்லை?

ஆஸ்கார் வைல்ட்

**றெ. பானுசா**
**தரம் – 07**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் மகத்துவம்

இந்த உலகிலே அழியாத செல்வம் கல்விச் செல்வம். மற்றைய எல்லா செல்வத்தையும் மிக இலகுவில் பெற முடியும். ஆனால் கல்விச்செல்வத்தை பெற்று விட்டால் அது எமது வாழ்நாளில் இருந்து நீங்காத ஒன்று. மன்னர்க்கு தன் நாட்டில் மட்டும் சிறப்பு, கற்றோர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு. அதாவது அரசனுக்கு தன் நாட்டில் மட்டுமே சிறப்பு. கல்வி கற்ற சான்றோர்க்கு எங்கு சென்றாலும் சிறப்பு உண்டு. சிலர் இந்த கல்வியை வெறுத்ததால் அவர்கள் இன்று எந்த நிலைமையில் இருக்கிறார்கள் என்று சிறிது நோக்குவோம்.

சிலர் கல்வியே எமது உயர்வு என்று நம்பி கல்வியை கற்று பலர் பட்டதாரி வேலைகளையும் செய்து சிறந்து வாழ்கின் றனர். ஒருவர் கல்வியை கற்கும்போது கசக்கும் கற்ற பின்னர் தான் இனிக்கும். கல்வியை நாம் சிறுபராயத்திலிருந்தே ஆரம்பித்திலிருந்து கற்க வேண்டும். அவ்வாறு கல்வியை கற்கா விட்டால் எமக்கு முழு அறிவும் கிடைக்காது.

'கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு' என்பது போல கல்விக்கு ஆரம்பம் மட்டுமே உண்டு முடிவே இல்லை. கல்வியை நாம் மூத்தோர் வயது வரையும் படிக்கலாம். இப்போது கல்வியை கற்று சில பேர் பல தொழில்களையும் பல சேவைகளையும் செய்து வருகிறார்கள். எமது வாழ்விற்கு முக்கியத்துவம் வாய்ந்தது கல்வியே ஆகும். நாம் கல்வியை எவ்வளவு கற்கிறோமோ அவ்வளவிற்கு எமது அறிவும் வளரும்.

**வெள்ளத்தனைய மலர் நீட்டம் – மாந்தர்க்கு**
**உள்ளத்தனைய உயர்வு**

என வள்ளுவர் கூறுகிறார்

இக் காலத்தில் ஆண்களும் சில பெண்களும் கல்வியையும் விட்டு பாடசாலைக்கும் செல்லாமல் சில ஆண்கள் தமது வாழ்வை வீதிகளிலும் சில பெண்கள் சமையலறையிலும் இருந்து தமது வாழ்வை தாங்களே அழித்து விடுகிறார்கள்.

கல்வி என்னும் அழகான பயிருக்கு தண்ணீரை ஊற்றினால் அது காய்த்து பழுத்து அறிவு எனும் கனியை தரும் கல்வி எமது வாழ்விற்கு அழகான பயிராகும். அதை நாம் எமது வாழ்வில் வளர்த்து பயன் பெறுவோம்.

**மு. சயந்தினி**
**தரம் – 09**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமாற்றம்

அதிகாலை கோவில் மணியோசை கேட்டு அதிர்ச்சியுற்று எழுந்த கண்மணி இரவுத் தூக்கமின்றி மனதின் கனமேறிய இதயம் மூச்சிரைத்தவளாய் விம்மி, விம்மி வானத்தை வெறித்தபடி...........கடந்த கால வாழ்வு அர்த்தமற்றவை என நினைவுகள் மீளௌ என்ர பிள்ளையளை வளர்த்தன் என்ன பிரயோசனம்? பெரியவன் ராஜீ, சின்னவன் சாரங்கன், பிள்ளை சங்கவி எல்லாரையும் யோசிச்சாலும்............

எங்கட வளர்ப்பு பிழையோ? எல்லாரையும் ஒழுங்கா பள்ளிக்கூடம் அனுப்பினன். துணிமணி தோச்சு, சமைச்சு கொடுத்தன் ஆனா, ஒண்டும் படிக்கேல்ல...... இப்ப எல்லாம் இழந்து இந்த குடிலில் இருக்கிறேனே:

பெரியவன் சின்ன வயசிலே என்ர சொல்லக் கேளாமல் ஊர்ப்பெடியளுடன் சுத்தித் திரிஞ்சான். பள்ளிக்கூடம் போ... போ... எண்டு எத்தனை தடவை கூட்டிக்கொண்டு போய் கதைச்சு விட்டாலும், இரண்டு மூன்று நாட்களுக்கு பிறகு அவன் ஏதோ சாட்டுச் சொல்லி நிண்டிடுவான்.

அன்றொரு நாள் "அடியே கண்மணி உன்ர மூத்தவன் எங்க போட்டான் பொலிஸ் ஆரையோ தேடினவங்களாம் அவனும் திரியிறவன் தானே கவனமா வளர்த்துப்போடு பிள்ளைகளை" விமலாவின் வார்த்தைகள் கணையாய் துளைத்தன.

தன் கணவன் கூலி வேலை செய்து ஓடாய் தேய்ந்து இரவு வந்து உடல் சாய்த்து உறங்குவதைத் தவிர வேறு நேரம் கிடைப்பது அரிது. பிள்ளைகளை கவனிக்கிற பொறுப்பு அவளுடையதே. மற்றைய இரண்டு பிள்ளைகளில் 10 வயது சாரங்கன் இரண்டாவது. கடைசிப் பிள்ளையே சங்கவி தரம் 3ல் படிக்கின்றாள். இவ்வாறே இவர்களது குடும்பப்பின்னணி, உதவிக்கு என்று அவர்களிற்கு யாரும் இல்லை. எங்கேயோ இருந்தார்கள்.

சுற்றம் தழுவல் என்பது கேள்விக் குறி!

கடவுளே! கடவுளே! என்ர பிள்ளையைக் காப்பாற்று என்றவளாய் கோயில் கோயிலாக அலைந்தாள். மகனைத் திருத்தவில்லை என்ற கோபம் ஒருபுறம், பிள்ளைப் பாசம் மறுபுறம். காலையில் 4 மணிக்கு எழுந்ததுமே தன் கடமையைத் தொடங்குவாள். தேநீர் தயாரித்து கொடுப்பது, தன் கணவனை வேலைக்கு அனுப்புவது, சுற்றிச் சுழன்று வேலை செய்தும் தான் தன் சாப்பாட்டைக் கவனிப்பது மிக குறைவு.

சாரங்கன் கொலசிப் வகுப்புக்கு போகவேணுமாம். பெரியவன் ராஜீ! கூட்டிக் கொண்டு போய் விடு தம்பி! என அனுப்பிய கண்மணி சாரங்கன் வீடு திரும்பினாலும், ராஜீ வீடு வந்து சேர மாட்டான். இரவு 6 மணி தேடிப் பிடித்து வீடு சேர்ப்பிக்க படும்பாடு. அறிவுரை எவ்வளவு கூறினாலும் கேட்க மறுக்கும் வயதுகள். ராஜீ உன்னைத் திருத்தேலா, உன்னை என்ன செய்வன்... தாயின் அறிவுரை மட்டுமல்ல, தந்தை கணபதியும் பதிலுக்கு சில அறிவுரைகள். சில சமயம் குடி மயக்கத்தில் வீடே அதிரும்படி சண்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சச்சரவுகள் வேறு.

தாங்கித் தரிக்கும் கண்மணி என்ன செய்வாள்? இருக்கும் சிறிய குழந்தைகளும் இரவுப்படிப்புமின்றி, தூக்கத்தில், இராவுண வின்றியும் நித்திரையாகும் நாட்கள் எத்த னை, காலம் உருண்டோடின. பெரியவன் ராஜீ பள்ளிப்படிப்பு பாதியிலே நிற்க, வீடும் மறந்து எங்கோ! தாய் கண்மணி தன் பிள்ளை வீடு வருவான் வருவான் என எதிர்பார்த்த நாட்கள் மாதங்களாயின. சந்தைக்கு போன கண்மணியின் காதில் எட்டிய வார்த்தைகள், கண்மணியின்ர மகன் கலியாணம் செய்திட் டானாம். கொஞ்சநாள் மதுவில் மயங்கிக் கிடந்தான். இப்போ அவன் மாதுவிடம் மை யல் கொண்டான். ஆடி அடங் கும் வாழ்க்கை யடா!

உழைப்பு, உழைப்பு, குடி இவ்வாறு வாழ்ந்த கணபதியின் உடல்நிலையும் தளர்ந்து நோய்வாய்ப்பட்ட நிலையில் தன் மகனது செய்கை வெறுப்பைத் தந்தாலும் தன் மகனை சிறுவயதிலே கண்டித்து வளர்க்கவில்லை என்பதும் புரியாமலில்லை. மூன்று பிள்ளைகளில் ஒன்றை இழந்தவளாக வாழ்ந்தவளுக்கு கணபதியின் நிலையும் மோசமாக இருந்தது. ஏதேதோ வருத்தங்கள் ஒன்று மாறி ஒன்று வந்துகொண்டே இருந்தது. ஆஸ்பத்திரியும் வீடும் "புற்றுநோயாம் அதுவும் வாய்க்குள்ள சாப்பிட ஏலா, விழுங்க ஏலா, கணவனது பராமரிப்பு கடமை செய்ய ஆட்கள் இல்லையே என்ற ஏக்கம், செல வுக்கு காசு என்ன செய்வது என மறுபுறம். அவள் இடையிடையே கூலி வேலைக்கு செல்லவே வேண்டும். பிள்ளைகள் தந்தை யை கவனிக்க நின்று விடுவார்கள். எத்தனை நாட்கள் பாடசாலையை விட்டுவிட்டு நிற் கிறது, என்னால் படிக்க முடியாது அம்மா, இது O/L படிக்கும் சங்கவியின் வார்த்தைகள் மட்டுமல்ல பாடசாலை செல்லாமலே நின்றுவிட்டாள்.

சின்னவன் சாரங்கன் க.பொ.த உயர்தரம் படிக்க கணிதம் எடுத்துக்குடுக்க வேணும் என்ற நிபந்தனையுடன் சென்றான். மறுமுறையும் கணிதம் சித்தியடைய முடியா மல் போக 'அம்மா என்னால் தொடர்ந்து படிக்கப்போகேலாது நான் கடையில நிக்கப் போறன்' என அவன் வேலை தேடிச் சென் றான். வழமைபோல் புடவைக் கடை ஒன்றில் நின்ற சமயம் தந்தையின் இறப்புச் செய்தி... தந்தையின் இறப்பு வேதனையைக் கொடுத்தாலும் தாயின் சுமை நீங்கியதை எண்ணி மனம் ஆறுதலடைந்தது. ஒருவாறு மரண சடங்கு நிறைவேற வழமையான வாழ்க்கையோட்டம் தங்கை சங்கவி, தாயை கவனிப்பது, தங்கை திருமணம் என சாரங் கனின் கடமை.

குடியிருக்கும் வீடும் சேர்த்து வைத்திருக்கும் பணத்துடன் சங்கவி திரு மணம் நிறைவேறியது. தங்கை கணவனது மகிழ்ச்சியான வாழ்வுக்காக, குடியிருக்க வீடற்ற அன்னையை எங்காவது பராமரிப்பு நிலையங்களில் சேர்க்கலாமா? என யோசித் தவனாக, "அம்மா இப்போ தங்கச்சியின்ர வளவுக்குள்ள இருக்கிற கொட்டில்ல இருங் கோ, மாசம் முடிய லீவுக்கு வந்து வந்து போறன், சமைச்சு சாப்பிடுங்கோ! மகனது வார்த்தைகள் முள்ளாய் நெருடினாலும் ஒன்றுமே செய்ய முடியாத நிலையில் எத்தனையோ சுமைகளைத் தாங்கிய வளுக்கு சுகம் எப்போது வருமோ!

**திருமதி. க. லங்கரூபன்**
**ஆசிரியர் (தமிழ்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகளைத் தாண்டி

இன்று கவதாவுக்கு பரிசளிப்பு விழா. அவள் க.பொ.த சாதாரணப் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றமைக் காக இந்த விழா நடைபெறுகிறது. ஆனால் இந்த நிலையை அடைவதற்காக அந்தச் சிறுமி பட்டபாடுகள் சொல்லிலடங்கா தவைகள்.....

அன்று ஒருநாள் கவிதா பாடசாலைக குச் செல்லும்போது காலை உணவின்றி பசியோடு சென்றாள். ஆனால் அவள் பசி யோடு இருந்தாலும் மற்றவர்களுக்கு தான் பசியோடு இருப்பதாக காட்டிக் கொள்ள வில்லை. வயிற்றைப் பிடுங்குகின்ற பசியோடு இருந்தாலும் பாடத்தில் தான் தனது கவனத் தைச் செலுத்துவாள்.....

தாயை இழந்த நிலையிலும் குடிகார னாகிய தந்தையுடன் இருந்து தனது படிப் பைத் தொடர்ந்தாள் அந்தச் சிறுமி. தனது படிப்புத் தேவைகளுக்கும் அன்றாட தேவை களுக்கும் பெரும் போராட்டத்தின் மத்தியில் காலத்தை ஓட்டினாள். அவளுக்கு இரு சகோ தரர்கள் இருக்கின்றார்கள். அவர்களை அவள் தாய்போன்று இருந்து காத்து வந்தாள் ஒரு பக்கம் படிப்பு மற்றைய பக்கம் குடும்பப் பொறுப்பு இவற்றையெல்லாம் அவள் தான் செய்து வந்தாள். சிறு வயதிலேயே படிப்பை யும் தொடர்ந்து குடும்பப்பொறுப்பையும் தனது தலைமேல் சுமந்த அவள் தனது படிப்புத் தேவைகளுக்கும் தனது சகோதரர் களின் படிப்புத்தேவைகளுக்கும் தேங்காய் விற்று அதன் வருமானத்திலேயே செலவு செய்தாள்.

தனது வீட்டின் நிலைமைகளையும் உணர்ந்த அவள் தனது படிப்பைக் கை விடவில்லை. தனது பிஞ்சு நெஞ்சுக்குள் அத்தனை வலிகளையும் சுமைகளையும் சுமந்து கொண்டிருந்தாள். பாடசாலைக்கு செல்வதற்கு ஒரு சைக்கிள் இல்லாமை யினால் அவள் தனது சகோதரர்களையும் கூட்டிக்கொண்டு நடந்து செல்வாள். ஒரு நாள் வேறு பிள்ளைகள் சைக்கிளில் செல்வதைப் பார்த்த அவளிடம் சைக்கிள் வேண்டித் தருமாறு கேட்டனர். அப்பொழுது அவளுக்கு தமது நிலைமையை யோசித்தவுடன் கண்ணீர் வந்தது. இவற்றை எல்லாம் தாண்டி தனது பள்ளிப்படிப்பைத் தொடர்ந்தாள்.

மாலை நேர வகுப்பிற்குச் செல் வதற்கு பணமில்லாமல் சக மாணவர்கள் செல்வதைப் பார்த்து ஏங்கிக் கொண்டிருப் பாள். க.பொ.த சாதாரணப் பரீட்சைக்காக நகர்ப்புறங்களில் நடைபெறும் கருத்தரங்கு களிற்கு பேரூந்தில் செல்வதற்கு பணமில் லாததால் சக மாணவர்களை வீதியில் நின்று வழியனுப்பி வைப்பாள். பாடசாலையில் நடைபெறும் நிகழ்வுகளிற்கு புதிய வெள் ளைச்சட்டை தைக்க முடியாமல் பழைய, கிழிந்த, பழுப்புநிறமாக உள்ள சட்டையுடன் செல்வாள். பாடசாலைச் சப்பாத்து வேண்டு வதற்கு பணமில்லாமையினால் இறுக்க மாகவும் கால்களை வெட்டுகின்றதுமாக வுள்ள சிறிய வயதில் அணிந்த பிஞ்ச சப்பா த்தை அணிந்து செல்வாள்.

அவள் பாடசாலைக்கு சென்றால் அனைத்து மாணவர்களும் அவளின் நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைப் பார்த்து ஏளனம் செய்வார்கள். அதே போன்று வீதியில் செல்பவர்களும் நக்கலாகப் பேசுவார்கள். இதனை எல்லாம் தன் மனதில் போட்டுக் குழப்பிக் கொள்ளாமல் இருந்தாள். அவளின் ஆடை அணி கலன்களில் அவளின் நிலை தெரிந்தாலும் அவளின் முகத்தில் வறுமை நிலையைக் காட்டிக் கொள்ள மாட்டாள். பாடசாலையிலோ வேறு பொது இடங்களிலோ எல்லோரிடமும் அன்பாகவும் பண்பாகவும் பேசுவாள். புத்திக் கூர்மையுடனும் செயற்படுவாள். அவள் பணவசதி இல்லாத காரணத்தினால் வகுப்புகளுக்குச் செல்ல விட்டாலும் தனது படிப்பினை பாசாலையிலும் நூலகத்திலும் தொடர்ந்தாள். ஊரிலே ஓர் இலவசமாக வகுப்பு நடைபெறுகின்றதென்றால் அவள் தான் அங்கு முதலாவதாக நிற்பாள்.

பாடசாலை மூன்றாந்தவணை விடுமுறை விட்டு ஆரம்பிக்கும்போது எல்லா மாணவர்களும் புத்தகங்களுக்கு புது உறை போட்டுக் கொண்டு செல்வார்கள். ஆனால் அவளோ செய்தித்தாளில் அல்லது சீமெந்து தாளில் புதிய புத்தகங்களுக்கு உறை போட்டுக் கொண்டு செல்வாள். மற்றைய மாணவர்களோ புதிய புத்தகப்பையுடன் செல்வார்கள். அவளோ கிழிந்து இனிமேல் கிழிவதற்கு இடமில்லாத புத்தகப்பையுடன் செல்வாள். புதிய கொப்பி வாங்குவதற்கு வழியில்லாமையினால் அவள் பழைய கொப்பியில் எழுதிய ஒற்றைகளை கிழித்து விட்டுக் கொண்டு செல்வாள்.

இவ்வாறாக கஸ்டங்களையும் வலிகளையும் தாங்கிய நெஞ்சம் அவள் பரீட்சை எழுதும்போது சோர்ந்துவிடவில்லை. இறை நம்பிக்கையும் தன்னம்பிக்கையும் தான் அவளுக்கு உறுதுணையாக இருந்தது. தனது வறுமைநிலையினை உணர்ந்து விடா முயற்சி செய்து க.பொ.த சாதாரணப் பரீட்சையில் மாவட்ட ரீதியாக முதலிடம் பெற்று தன்னைப் பற்றி நக்கலாகப் பேசியவர்கள் தமது வாயில் கைவைத்து வியக்கும்படி தனது வலிகளைத் தாண்டி சந்தோசத்துடன் அவள் மேடையில் ஏறி நிற்கின்றாள். பெரியோரின் வாழ்த்துக்களையும் பெற்று எல்லோரது பாராட்டுக்கும் உரித்துடையவளானாள். அவளின் வாழ்வில் வந்த வலிகளைத் தாண்டி வாழ்வில் உயர்வு கண்டாள். வலிகள் தான் வெற்றிக்கு முதல்படி என்பது அவளின் வாழ்வின் அனுபவங்களில் இருந்து எமக்கு கிடைக்கின்றது. அவள்தான் சுமந்த வலிகளோடு முன்னேறியது மட்டுமல்லாமல் எமக்கும் ஒரு முன்னோடியாக விளங்குகின்றாள்.....

**M. நிலாமதி**
**தரம் – II**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது பாடசாலை

இயற்கைச் சூழலும், நீர்வளமும், செல்வச் செழிப்பும் மிகுந்த மற்றும் வயலும் வயல் சார்ந்த இடமாகவும் காணப்படுகின்ற கிளிநொச்சி எனும் நகரிலே கிட்டத்தட்ட 25km தொலைதூரத்தில் அமைந்துள்ள வன்னேரிக்குளம் என்ற பிரதேசத்திலே நான் புதியதாய் சேர்ந்த வன்னேரி பிரதேசத்திற்கு ஒரு முத்தாக கிடைத்த பள்ளியின் பெயர் தான் கிளி/ஐயனார்புரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை. இந்தப் பாடசாலை பல சிக்கல்களுக்கும், சவால்களுக்கும் மத்தியில் 2000ம் ஆண்ட ளவில் கால் பதித்தது என எனது பெற்றோர் சொல்லக்கேட்டிருக்கின்றேன். நான் 2005ம் ஆண்டளவில் தான் இந்த வன்னேரி என்னும் உடலிற்கு உயிரோட்டமாக இருக்கின்ற இந்த பள்ளியில் நான் காலடி பதித்தேன். நான் இந்த பாடசாலைக்கு ஆரம்பத்தில் வரும்போது மரநிழலிலும், குடிசைகளிலும் தான் மாணவர்கள் மற்றும் எனது அக்கா, அண்ணா, போன்றோரும் அந்த நிழலிலும் இருந்து கல்வி கற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதிபர்களாக கடமையாற்றிய யாவரும் மாணவரிடத்தே அன்பும், பரிவும், இரக்கக்குணமும் கொண்டவராய் இப் பாடசாலையின் ஆரம்ப வளர்ச்சியில் பெரும் பணியாற்றினார். அவரின் மூலமாக ஆரம்பகாலத்தில் காணப்பட்ட கொட்டகைகள் எல்லாம் மாட மாளிகையாக குறிப்பிட்ட நாட்களுக்குள் வளர்ச்சி பெற்றது. இவர்களின் செயற்றிறன் மூலம் 1 தொடக்கம் 11 வரை வகுப்புக்களும் உயர்த்தப்பட்டது. பின்பு யுத்தம் காரணமாக மீள்குடியேற்றம் பெற்று மீண்டும் இந்த பாடசாலையில் தரம் 04ம் வகுப்பில் இருந்து கற்க ஆரம்பித்தேன். அந்த வேளையில் புதிய அதிபராக சகுந்தலா தேவி நியமனம் பெற்றார். அவரும் அதே போன்று மாணவரிடத்தே அன்பாக பேசினார். இவர் யுத்த சேதமாக்கப்பட்டிருந்த எனது பாடசாலையை சில சிறிய வேலைகள் மூலம் மீண்டும் பாடசாலைக்கு மெருகினை ஊட்டினார். அவரின் இடமாற்றத்தை அடுத்து கே. பி. நடேசலிங்கம் என்ற இறைவனின் பெயரினை உடைய அவர் எனது பாடசாலைக்கு புதிய அதிபராக பொறுப்பேற்றார். பாடசாலையில் மிகுந்த பற்றுக்கொண்டவரும் ஊரினுள் நல்மதிப்பையும் பெற்றவராகவும் இறைபக்தி உடையவராகவும் காணப்பட்டார். இவரின் கடமைக் காலத்திலே மின்சார வசதி பாடசாலைக்கு வழங்கப்பட்டு எனது பாடசாலை ஒளியேற்றப்பட்டு வன்னேரியின் முத்தாக திகழ்ந்தது. காலங்களும் கடந்து சென்றன.

2016ம் ஆண்டு அதாவது நான் தரம் 10ல் கல்வி பயிலும் காலம் அது. அந்த வருடத்தில் ஒரு பெரும் மாற்றம் ஏற்பட்டது. அதற்கு காரணம் புதிய அதிபர் ஒருவரின் நியமனம், எனது பாடசாலைக்கு புதிய அதிபர் வந்தார். அவரின் தோற்றமும் பார்வையும் என்னை மெய் சிலிர்க்க வைத்தது. அவர் ஒரு ஆண் சிங்கம் போல தோற்றமளித்தார். இவர் கிளிநொச்சி மாவட்டத்திலே திருவையாறு எனும் பிரதேசத்தில் அங்குள்ள பாடசாலையில் ஆசிரியராக பணியாற்றிய அனுபவம் கொண்டவராகவும், நன்மதிப்பும் பெற்றவராக கிளிநொச்சி மாவட்டத்திலும் சரி வன்னேரி பிரதேசத்திலும் சரி சிறந்து விளங்கினார். அந்த தெய்வத்தின் வருகையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடியிருந்த செடி, பூத்துக்குலுங்குவது போல பூத்துக்குலுங்கியது எனது பாடசாலை. இவரின் மூலம் மாணவர்களின் ஒழுக்கம் மாணவர்களின் அறிவுத்திறன், பாடசாலையின் அழகு, பாடசாலையின் சுத்தம், பாடசாலையின் வளர்ச்சி போன்ற அனைத்து செயற்பாடுகளையும் இவர் மிகவும் சிறப்பாக செய்தார். இவரின் மூலம் தான் கடந்த வருடம் 2017.10.17ம் திகதி அதாவது 1997.10.17ல் பாடசாலையின் ஆரம்பநாள், நினைவு கூறு முகமாக மீள்குடியேற்றத்தின் பின் முதன் முதலாக பெரும் விமரிசையாக பரிசளிப்பு விழா கொண்டாடப்பட்டது மற்றும் அத்தோடு நூல் வெளியீடும் செய்யப்பட்டது. ஆனாலும் எனது பாடசாலைக்கு இன்னும் பல வசதிகள் தேவைப்படுகின்றன. எனது பாடசாலையின் மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கேற்ப, பாடங்களுக்கு ஏற்ப ஆசிரியர்களும் போதாமை உள்ளனர். மேலும் பாடசாலையில் மாணவர்களின் அறிவினை தன்னகத்தே வளர்க்கவும், சமுகம் தொடர்பான ஆற்றல் களைப் பெறவும் ஒரு நூலகம் இல்லை. மாணவர்களின் கலைப்படைப்புக்களையும் ஆற்றல்களையும் வெளிக்காட்டக்கூடிய வகையில் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட கலைக் கூடம் இல்லை. (சங்கீதஅறை, நடனஅறை, சித்திரஅறை, நாடகஅறை) அத்தோடு மாணவர்களின் திறமையை வெளிக்காட்டும் வகையில் விளையாட்டு மைதானமும் சீரற்ற நிலையில் காணப்படுகிறது. இவையே எனக்கு இருக்கக்கூடிய கவலையாகும். இவற்றை அதிவேகமாக சீர்செய்தால் எனது பாடசாலை கிளிநொச்சி மட்டத்திலே பல நன்மதிப்பையும் மாணவர் அறிவிலும் சரி விளையாட்டிலும் சரி முன்னணி வகிக்கும் என்பதில் எனக்கு எந்தவித ஐயமும் இல்லை. எனவே பாடசாலை யை முன்னேற்றி வாழ்வில் உயர்ந்திடுவோம்.

**யோ. கிரிகரன்**
**தரம் –II**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மாணவர் பாராளுமன்றம்

பாடசாலை மாணவருக்கு ஜனநாயகமும் அதன் பொறுப்புக்களும், வகை கூறலும் என்பன பற்றியும் சட்டத்தின் ஆதிபத்தியம், வாக்கு, வாக்களித்தல் ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றிய செய்முறை அறிவை பெறுவதற்குரிய வழிகளை திறந்து உரையாடல், இணக்கப்பாடு, ஏனையோரின் கருத்துக்களுக்கு செவிமடுத்தல் மற்றும் பெரும்பாலானோரின் இணக்கப்பாட்டை ஏற்றுக்கொள்ளல் போன்ற திறமைகளையும் மனப்பாங்குகளையும் வழங்கி பரந்துபட்ட சமூக ஒருமைப்பாட்டை கட்டியெழுப்பும் நோக்குடன் பாடசாலையின் முறைமை 2008ம் ஆண்டு ஏப்ரல் மாதம் வெளியான 2008/15ம் இலக்க சுற்று நிருபத்தின் மூலம் அறிமுகம் செய்யப்பட்ட வேலைத் திட்டமே இவ் மாணவர் பாராளுமன்றம் ஆகும்.

- இம் மாணவர் பாராளுமன்றத்தின் குறிக்கோளாக ஜனநாயகத்தின் அடிப்படை எண்ணக் கருக்கள் மற்றும் அவற்றின் பிரயோகம் தொடர்பான விரிவான விளக்கத்தை வழங்குதல்.
- தேசிய கல்வி பொதுக் குறிக்கோள்கள் மற்றும் பொதுத்தேர்ச்சி குறிக்கோள்களை அடைவதற்காக செயல் ரீதியான சந்தர்ப்பத்தினை உருவாக்குதல்
- சமாதானத்தையும், நல்லுறவையும் ஏற்படுத்துவதற்காக தேசிய வேலைத்திட்டம் ஏற்ற பாடசாலை மட்டத்தில் வழங்கல்
- வெவ்வேறு மக்களினங்களுக்கும் சமய குழுவினருக்கும் இடையே கூட்டுணர்வுகளை, சகவாழ்வு சகோதரத்துவம், புரிந்துணர்வு ஆகியவற்றை விருத்தி செய்து சமூக ஒன்றிணைப்பை வளப்படுத்தும் செயற்பாட்டை மேற்கொள்ளல்.
- பிரதேச மற்றும் தேசிய அபிவிருத்தியை நோக்காக கொண்டு மாணவர் தேசத்தை கட்டியெழுப்பும் பணிக்காக நேரடியாக தொடர்புபடுத்திக் கொள்ளல்.
- பாடசாலை மாணவரின் தலைமைத்துவ திறன்களை விருத்தி செய்தல்
- குடியியற் பாடத்தின் வழியே கோட்பாடு நீதியிலும் செயற்பாட்டு நீதியிலும் தேர்ச்சியினை மேலும் வினைத்திறனுள்ளவாறு செய்ய வழிகோரல்.

- **மாணவர் பாராளுமன்றம் 4 பிரிவுகளை கொண்டது**

1. பாடசாலை மாணவர் பாரளுமன்றம்
2. வலய மாணவர் பாராளுமன்றம்
3. மாகாண மாணவர் பாராளுமன்றம்
4. தேசிய மாணவர் பாராளுமன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **இதில் நிறைவேற்று சபையானது**

    1. செயலாளர் நாயகம்
    2. பிரதிச் செயலாளர் நாயகம் (அபிவிருத்தி)
    3. பிரதிச் செயலாளர் நாயகம் (நிர்வாகம்)
    4. பிரதிச் செயலாளர் நாயகம் (ஒழுக்கம்)

- **அமைப்புமுறை**

    - சபாநாயகர்
    - பிரதமர்
    - சபைமுதல்வர்
    - பிரதி சபாநாயகர்
    - அமைச்சர்கள் 10 பேர்
    - பிரதி அமைச்சர்கள் 10 பேர்
    - ஆலோனை செயற்குழு 10 பேர்

- **இவ்வாறு மாணவர் பாராளுமன்ற முறை அமைப்பு முறையானது காணப்படுகின்றது. இதன் அமைச்சர்களாக**

❖ மாணவர் நட்புறவு விருத்தி மற்றும் மாணவர் நலன்புரி அமைச்சு

❖ மாணவர் தேர்ச்சி மற்றும் புத்தாக்க அலுவலக அமைச்சு

❖ பாடசாலைகளுக்கு இடையே நட்புறவை கட்டியெழுப்பும் மற்றும் விருத்தி செய்யும் அமைச்சு

❖ கல்வி, மனிதவள அபிவிருத்தி மற்றும் தகவல் தொடர்பாடல் அமைச்சு

❖ சமூக நல்லிணக்கம் மற்றும் மாணவர் பாதுகாப்பு நடவடிக்கைகள் அமைச்சு

❖ சுகாதார போசணை மற்றும் விளையாட்டு அலுவலக அமைச்சு

❖ விவசாய மற்றும் சூழல் அபிவிருத்தி அமைச்சு

❖ பௌதீக வள அபிவிருத்தி மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

வேட்பாளருக்குரிய வேட்பு மனுக்கள் கோரப்பட்டு வாக்கெடுப்பின் மூலம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். அவர்கள் சத்தியப்பிரமாணம் செய்த பின்னர் அமைச்சர்கள் தங்களது அமைச்சுக்களுக்கு உரிய பொறுப்புகளை தெரிவு செய்வார்கள். பாடசாலையில் முதலாம் தவணையில் மாணவர் பாராளுமன்றம் தெரிவு செய்யப்பட்டு குறைந்தது தவணைக்கு ஒரு தடவையாவது மாணவர் பாரளுமன்றம் கூட்டப்பட வேண்டும். இவ்வாறு இதன் செயற்பாடுகள் அமையும்.

**மி. வேதுர்சன்**
**தரம் –11**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஸ் வண்டிப்பயணம்

வங்கியில் சின்ன வேலை
வஸ் பிடித்து போக வேணும்
காலையில் எழுந்து அவசரமாய்
குளித்து விட்டு அயன் போட்ட
ஆடை உடுத்தி அலங்காரம் செய்து விட்டு
பரபரப்புடன் ஓடி வந்து
காத்திருந்தேன் நானும் வீதியின் ஓரத்திலே

புழுதியை அள்ளி இறைத்தபடி
புதிதாய் ஐந்தாறு வாகனங்கள்
தொடரிலே செல்கிறது
ரோட்டுப் போடினமாம்
கூறி நின்றார் அருகிருந்தவர்

மெல்ல வஸ்சும் வந்து சேர்ந்தது - ஏறினேன்
பாதி உடல் உள்ளே மீதி உடல் வெளியே
எட்டிப்பிடிக்க எதுவும் இன்றி
ஒற்றைக்காலில் தொடர்கிறது என் பயணம்

மீதி உடலை உள் நுளைத்து
மற்றைக் காலை வைத்தேன்
“அம்மா! ஐயோ! என் கால்” அவலக்குரல்
பட்டென எடுத்து விட்டேன் என் காலை
திட்டமிட்ட சதி என்றது மற்றைய குரல்
திகைத்து நான் நிற்கையிலே

சோக்கான ரோட்டு அங்கே
சோறு போட்டுச் சாப்பிடலாம்
சொன்னவரைப் பார்க்கேல்ல
வெளிநாட்டுக்காரன் போல
சோறுடனே கறியும் சேர்த்து சாப்பிடலாம்
என்றார் இன்னும் ஒருவர்
விடுவானா எம் ஊரான் என்று
எண்ணியபடி நிற்கையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறங்கும் இடம் வந்தது
பத்துநிமிட வேலை பட்டென முடிந்துவிட

மறுபடியும் தொடங்கியது என் பயணம்
உறுமீன் வரும்வரை காத்திருந்த
கொக்கைப்போல காத்திருந்தேன் - மற்றைக்காலில்
எம் ஊர்வரும்வரை

**வதனி வன்னியசிங்கம்**
**ஆசிரியர் (ஆரம்பக்கல்வி)**

# என் பாடசாலை

நாங்கள் படித்திடும் பாடசாலை இது
பாடம் படித்திட பாடசாலை வாருங்கள்
நாம் கூடி விளையாடும் முற்றத்தைப் பாருங்கள்
பாடியே ஆடி பாடசாலை வாருங்கள்

நூல்களைக் கற்றிட நல்ல நூலகம் இங்கே
நூல்கள் பல கற்று நல் மனிதனாய் வாழலாம்
தேடியே பயில்வோம் சிறார்கள் நாமுமே
கூடியே உண்ண நல் சமையல் அறை உண்டு
சத்துள்ள உணவே சமைத்துண்போம் என்றும்
கூடியே உண்ணும் காக்கையைப் போல்
கொடுத்துண்டு வாழ்வோம் நாமுமே

சுத்தமே பேணுவோம் எந்நாளுமே நாங்கள்
குப்பை கூழம் கூட்டியே
குறித்த குழியில் கொட்டிடுவோம்
அழகான பூந்தோட்டம் அமைப்போம் - நாளும்
அதை அக்கறையுடன் வளர்த்திடுவோம் - எப்போதும்
ஒழுக்கமுடன் கல்வியும் என்றுமே வேண்டும்
நல் ஆசானை என்றுமே போற்றிடு நீயும்
அவர் ஆசியுடன் நீயும் ஆண்டிடுவாய் இவ்வுலகை

**கி. சதுர்சிகா**
**தரம் – 02**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுக்கம்

ஒழுக்கம் என்பது ஒரு சிக்கலான மரபு நிலையாகும். மேலும் ஒழுக்கம் என்பது நீதி, சமூகம், பண்பு, கலாச்சாரம் ஆகியவற்றைக் கொண்ட சமுதாயம் விரும்புகின்ற வகையில் ஒத்து வாழும் ஒரு குணமாகும். ஒவ்வொரு துறையிலும் சிறந்து விளங்கிட அவரவர் தமது ஒழுக்கத்தின் பால் சிறந்தவராய் இருத்தல் அவசியமாகிறது. இதனையே வள்ளுவர்,

**"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை**
**இழுக்கத்தின் எய்துூர் எய்தாப் பழி"**

என்கிறார்.

ஒரு விளையாட்டு வீரன் எவ்வாறு தனது ஒழுக்க நிலையை கடைப்பிடித்து வெற்றி பெறுகின்றானோ அவ்வாறே நாம் ஒவ்வொருவரும் எமது வாழ்க்கை சிறந்த முறையில் கட்டியெழுப்ப வேண்டும். உயர்ந்த வானமும் நம் வசப்படும் ஒழுக்கம் பற்றி கருத்துக்களை ஈ.வெ. இராமசாமி என்பவர்,

"தனக்கும் அன்னியனுக்கும் துன்பம் தராமல் நடப்பதும் பிறருக்கு ஒழுக்கத்தை பற்றி சொல்வதை விட தன்னிடம் எந்தளவு ஒழுக்கம் இருக்கின்றது. என்பதை ஒவ்வொருவரும் நினைத்து பார்க்க வேண்டும் " என்கிறார்.

உங்கள் மனதை நீங்கள் பரிசுத்தமாக வைத்துக்கொண்டு தைரியமாகப் பேச வேண்டும். எவ்வளவு தூரம் உணர்ச்சியோடு உங்கள் மனம்மாறி நீங்கள் குற்றமற்றவர்களாக நல்ல ஒழுக்கம் உள்ளவர்களாக இருக்கின்றீர்களே. அவ்வளவுக்கு துணிந்து தொண்டாற்ற முடியும். பிறருக்கு எவ்வித தொல்லையும் தராத வாழ்வே ஒழுக்கம். இது எல்லா நிலையும் ஒழிந்த நிலையில் தான் வளர முடியும். ஒழுக்க அடிப்படையிலே இன்ப வாழ்க்கை பெற முடியும்.

அறிவில்லாத போது புத்திசாலித்தனம் இழக்கப்படுகின்றது. புத்திசாலித்தனம் இல்லாதபோது ஒழுக்கம் இழக்கப்படுகின்றது. செயற்படும் ஆற்றல் இல்லாதபோது பணம் இழக்கப்படுகின்றது. பணம் இல்லாததால் சூத்திரர்கள் வீழ்ந்தனர்கள். கல்வி அறிவு இழக்கப்படுகின்றது. பொய்யமொழிப் புலவர் ஒழுக்கம் பற்றியும் கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார். திருக்குறள் மூலம் ஒழுக்கம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

"ஒழுக்கம் உடையவர்கள் கொள்ளவோ தீய வார்த்தையும் வாயால் சொலல்" தீய வார்த்தையும் வாயால் சொல்லல் போன்றவற்றின் மூலம் கூறியுள்ளார். மற்றும் பாடசாலைகளில் ஒழுக்கமானது மாணவர்களை வலிமையுள்ளவர்களாக எதிர் காலத்தில் சிறந்த தலைவர்களாக மாற்றுகின்றது. நல்ல நடத்தை ஒரு மாணவனை நோக்கி மற்றவர்கள் திரும்பிப்பார்க்க வைக்கின்றது. பள்ளிகளில் ஒழுக்கத்தை உருவாக்குவதில் ஆசிரியர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றார்கள் தான் ஒரு முன்மாதிரியாக திகழ வேண்டும். என மாணவன் என்றும் போது மாணவர்களை அவர்கள் மீது நம்பிக்கை கொள்ளுமாறு இருத்தல் வேண்டும். சரியான நேரத்தில் முடித்தல், ஆசிரியர்களுக்கும், பெரியவர்களுக்கும் மரியாதை செய்தல் முதலியவை பள்ளிகளின் ஒழுக்கச் செயற்பாட்டை அதிகரிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளியில் ஒழுக்கத்தை கற்றுக் கொண்ட மாணவர்கள் குடும்பம், சமதாயம் என்பவற்றில் பிரயோசிக்கிறார்கள். ஒழுக்கம் உயர்வினைத் தருவதால் தான் அது உயிரினை விட மேன்மையானது என கருதப்பட்டுள்ளது. மனிதனாக பிறந்த ஒவ்வொருவரும் சிறுவர் முதல் பெரியோர் வரை ஒழுக்கத்தினை கடைப்பிடிக்க வேண்டும். உண்மை பேசுதல், பெற்றோரை மதித்தல், களவு செய்யாமை போன்ற ஒழுக்கத்தின் பால் எனப்படும் உலகில் உள்ள யாவும் ஒழுக்கம் பேணலின் அவசியம் பற்றி எடுத்து கூறுகின்றார்கள்.

"தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்" என்பது முன்னோர் பழமொழி. எனவே இளமையில் இருந்து ஒழுக்கத்தை பேணுவது சிறந்தது. ஒழுக்கத்தில் இருந்து மீறுவோர் ஏதோ ஒரு வகையில் தண்டனை பெறுவார்.

"எந்தக்குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே அவர்கள் நல்லவராவதும், தீயவராவதும் அன்னை வளர்ப்பிலே" என்பது பாடல் பெற்றோர் ஒழுக்கம் பேணுவதில் பெரும் பங்கு செலுத்துகின்றது.

**"பிரிந்தோம்பிக்காக ஒழுக்கம்**
**தெரிந்தோம்பிக் தேரினும் அஃதே துணை"**

வருந்தியேனும் ஒழுக்கத்தை பேணிக்காக்க வேண்டும். பலவும் ஆராய்ந்து கைக்கொண்டு தெரிந்தாலும் ஒழுக்கம் உயிருக்கு துணையாகும்.

**"ஒழுக்கம் உடைமை குடிமை இழக்கும், அழிந்த பிறப்பாய் விடும்"**

ஒழுக்கம் உடையவர் இருப்பதே உயர்ந்த குடிப்பிறப்பின் தன்மை ஒழுக்கம் கெடுதல் இழிந்த பிறப்பின் தன்மை ஆகிவிடும்.

இன்றைய காலகட்டத்தில் கல்விக்கும், பணத்திற்கும் சமூகம் தரும் மதிப்பில் பத்தில் ஒரு பங்கு கூட ஒழுக்கத்திற்கு தருவதில்லை என்பது கசப்பான உண்மை. ஆனால் ஒழுக்கம் இல்லாத கல்வியும், பணமும் இன்று எப்படியெல்லாம் சீரழிவை ஏற்படுத்தி வருகின்றன என்பதை நம் கண்கூடாக பார்க்கின்ற காலகட்டம். நீதிநெறிகளை நமக்கு வலியுறுத்தும் நூல்கள் நம் சான்றோர்கள் இயற்றிய நீதி நூல்கள் பல நீதிக்கருத்துக்களை எளிய நடையில் நமக்கு எடுத்துரைப்பதாகும். அவைகளின் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், திருக்குறள், நாலடியார், திரிகடுகம், சிறுபஞ்சமூலம், பழமொழி முதலிய நூல்கள் தமிழில் இலக்கிய வரலாற்றில் முத்திரையில் ஆகம். இவற்றில் திருக்குறள் உலகளவில் தமிழர்களின் ஒழுக்க நெறிகளை பறைசாற்றும் ஒப்பில்லாத நூலாக புகழப்படுகின்றது. அதனால்தான் "உலக பொதுமறை" என போற்றுகின்ற உலக மொழி பலவற்றில் மொழி பெயர்க்கப்படும் என்பவற்றில் திருக்குறள் அவற்றினூடாக

"ஒழுக்கம் விழுப்பம் தரும்"என்பது சிறந்தது விழுப்பம் என்பது உயர்வு என்ற பொருள்படும்.

**"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்,**
**உயிர் நீப்பர் மானம் வரின்"**


ஒழுக்கம் என்பது கல்வி, கலாச்சாரம் என்பவற்றிலும் ஒழுக்கம் காணப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுவதில்லை. எமது பழக்கங்களிலும் அமைந்து காணப்படுகின்றது. மதுபோதை பாவனை என்பது ஒழுக்கம் ஆற்ற செயற் பாடாகும். மதுபோதையின் போது, புகை யிலை பாவனையின் போது சுவாசம் தொடர் பான நோய்கள் ஏற்படுகின்றது. புகையிலை நிறுவனம் நாளாந்தம் 33 கோடி ரூபாய் இலாபம் பெறுகின்றது. இவ்வாறு புகைப் பொருள் பாவனையால் ஒவ்வொரு நபருக் கும் அரசாங்கம் வருடம் 72 பில்லியன் ரூபாய் செலவிடுகின்றது. புகைப்பொருள் பாவனை, மதுபோதை பாவனை என்பவற்றின் மூலம் இறப்புக்கள் ஏற்படுகின்றது. எனவே நாம் ஒவ்வொருவரும் எம் உயிரிலும் மேலான ஒழுக்கத்தினை பின்பற்றி சிறந்த மனித சமுதாயத்தை கட்டியெழுப்புவது ஒவ்வொரு வரின் உரிய தலையாய கடமையாகும்.

இ. மதுசன்
தரம் – 11



பேருண்ட பக்ஷய அன்னப் பிணையல்

இவ் அன்னப் பிணையல் வடிவம் எம்பக்க தேவலாய மரத்தூணில் செதுக்கப்பட்டுள்ளது.

சி.பவிசன், தரம் 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித நேயம்

எத்தனையோ உயிரினங்கள் இருந்தாலும் மனிதநேயத்தால் தான் மனித இனத்திற்கு மரியாதை. இந்த மனித நேய உணர்வு தான் அடுத்தவர் துக்கத்திலும் துயரத்திலும் பங்கெடுக்க வைக்கிறது. இந்த மனித நேயத்தால் தான் பிறந்த நாளில் இரத்ததானம் இறந்த பின்பு உடலுறுப்புக்களை தானம் செய்கிறார்கள். ஆகா! எவ்வளவு மனித நேயம், இந்த நடைமுறை இன்று வளர்ந்து வருகிறது. ஒருபுறம் குன்றிய செயற்பாடுகள் நடைபெற்றாலும் இன்னொரு புறத்திலே மனிதநேயம் வளர்ந்து சென்று கொண்டிருக்கிறது.

இன்று மதங்களின் மூலமும் மனித நேயம் வளர்க்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. பசி என்பது வெறும் வயிற்றுப் பசி மட்டுமல்ல, வாழ வழியற்றுத்தவிப்பது.... இவற்றை பேணுகிறது தான் உண்மையான மதம் அதிலிருந்து வெளிப்படுவது தான் மனிதநேயம்.

இளம் வயதில் பள்ளியில் தொடங்கும் வாழ்க்கை எந்த பேதமும் இல்லாமல் தான் வளர்கிறது. ஆனால் இடையில் அரசியல் சுயலாபங்களுக்காக மனிதர்களே மனிதர்களை பறிகொடுக்கம் மாயக்கலையை அரங்கேற்றுகிறார்கள். இடையில் புகுந்த இந்த பேதங்கள் நிச்சயம் இடையில் மாய்ந்து போகும்.

**மனித நேயத்தை**

1. இயற்கையின் பால் மனிதன் கொண்டிருக்கும் மனிதநேயம்
2. அரசு தன் மக்களின் பால் காட்டும் மனிதநேயம்
3. தனிமனிதன் மற்றொரு மனிதன் பால்கொள்ளும் மனிதநேயம்

என நோக்கலாம். இவ்வாறு ஒவ்வொருவரும் மனித நேயத்தோடு வாழ்ந்தால் மோதல் என்பதற்கான வரைவிலக்கணத்தை அகராதியிலே தான் தேடிப்பார்க்க வேண்டும்.

இயற்கையின் பால் நாம் மனித நேயம் காட்டும்போது சூழல் பாதுகாப்பு என்பது கேள்விக்குறியாக மாறியிருக்குமோ? இக்காலநிலை தான் மாற்றத்தை அழித்திடுமோ? இல்லை இல்லவே இல்லை சூழல் பசுமையானதால் நம்மை பாதுகாத்திடும்.

ஒழுக்கம் என்பது மிகவும் முக்கியமானது. மனித வாழ்க்கையை உயர்த்தும் படிக்கல் ஒழுக்கம். தனிமனிதர்கள் ஒவ்வொருவரும் ஒழுக்கம் உடையவராக வாழ வேண்டும். தனிமனித ஒழுக்கம் சமுதாயத்தை கட்டியெழுப்பும். தனிமனிதன் தவறிழைக்கும்போது அது முழு சமுதாயத்தின் நிலையை கேள்விக்குறியாக்கும். இவ் ஒழுக்கத்தை ஒருவர் கடைப்பிடிக்க வேண்டுமாயின் அவர் மனிதநேயம் மிக்கவராக கருத வேண்டும. எனவே ஒழுக்கத்திலும் மனித நேயத்தின் செல்வாக்கு காணப்படுகிறது.

முடியும் என எண்ணியதால் தான் விண்ணை முட்டி நிற்கிறது. பலதுறைகளில் நாம் கண்ட பயிற்சி.எனவே மனிதநேயத்திலும் நாம் முடியும் என்று மன உறுதியோடு ஒவ்வொரு தனி மனிதனும் செயற்பட்டு சமுதாயத்தில் சிறந்த முறையில் வளரந்து செல்வோம்.

**ச. பிறைவண்ணன்**
**தரம் – 08**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கல்வி நோக்கங்களில் விழுமியங்கள்

## அ. "மனிதத்துவப் பண்புகள் மனிதப் பிறவியின் அங்கங்கள்"

விழுமியம் என்னும் சொல் ஆங்கிலத்தில் Value என்று அழைக்கப்படுகின்றது. இச் சொல்லிற்கு பெறுமதி, மதிப்பு, விழுமியம் எனப் பொருள்படும். ஒரு சமுதாயத்தால் அல்லது சமுதாயத்தில் இருக்கின்ற பெரும்பாலானோர் பின்பற்றல், நம்பிக்கைகள், நியமனங்கள் என்பனவே மதிப்புகளாகும். கேன் (1962) விழுமியம், மதிப்பு இரண்டும் கல்வியில் வேறுபாட்டை காட்டிநிற்கின்றது. விழுமியம் என்பது தனிநபர், சமூகம், வாழ்க்கை என்பவற்றை போஷிக்கின்ற, வளப்படுத்துகின்ற, அர்த்தமாக்கின்ற மனித குணப்பண்பாகும். இவ்வரைவிலக்கணத்தின்படி எல்லா விழுமியங்களும் நல்லவை, மீளத்தோன்றக் கூடியவை, மானிடவாத உளவியலாளரும் விழுமியங்களை இதற்கு கிட்டிய அர்த்தத்திலே பயன்படுத்தினர். உதாரணமாக ஒல்பொட் விழுமியம் சுய ஆத்மாவுடன் தொடர்புபட்டதாகும். பிரபல மானிடவாத உளவியலறிஞரான ஆப்பிஹாம் மாஸ்லோ (1911) மனிதனது செயலுக்கு வழிவகுக்கின்ற விழுமியங்களை மனித தன்மையினுள் நிலவுகின்ற இயற்கையின் விடயமாகும். என்கின்றார்.

விழுமியப் பண்புகளை மனிதனின் உயிர் வாழ்க்கைக்கு வழிகோலுகின்றது. மனிதன் பிறக்கும்போதே அவனுடன் ஒன்றாகவே விழுமியப்பண்பும் கலந்துள்ளது. பின் உலகுடன் ஒன்றித்து வாழ்வதற்கும் விழுமிய பண்புகள் அவசியமாகின்றன. இப் பண்புகளை கீழைத்தேய மதங்களான இந்து, பௌத்தம், தாய் சமயம் போன்றவற்றில் அதிகம் காணலாம்.

**விழுமியங்களுக்கு உதாரணம்**

1. அன்பு
2. தைரியம்
3. உண்மை
4. சாந்தம்
5. சமாதானம்
6. அறிவு
7. கணிப்பு
8. கெட்டித்தனம்
9. கேட்டறிதல்
10. நினைவு
11. சுயகற்றல்
12. அகிம்சை
13. ஒழுங்குமுறை
14. நோக்கம்
15. சமத்துவம்
16. இன்சொல்
17. சிநேகபூர்வம்

மனிதனுடைய நம்பிக்கைகள் எண்ணங்கள் கருத்துக்கள் என்பவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளதே விழுமியம் எனப்படுகிறது. விழுமியங்களை நேர்மையுடன் பயன்படுத்துவதே அதன் தொடர்ச்சியை உறுதிப்படுத்துகின்றது. இந்த தொடர்ச்சியே விழுமியத்தை தொடர்புடைய ஏனைய கருத்துக்களான நம்பிக்கை, கருத்து எண்ணம் என்பவற்றில் இருந்து வேறுபடுகின்றது. விழுமியம் இருவகைப்படும்.

1. தனிமனித விழுமியம்
2. பண்பாட்டு விழுமியம்

தனிமனித விழுமியம் மனிதனுடைய வாழ்வை ஒழுங்கமைப்பதை நோக்கமாக கொண்டது. மனிதர்கள் சேர்ந்து வாழ்வதற்கு எந்தெந்த விழுமியங்கள் சிறப்பாக தேவைப் படுகின்றனவோ அவை பண்பாட்டு விழுமியம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சமுதாயத்தின் விழுமியங்கள், கதைகள், பழமொழிகள், சமயம், என்பவற்றின் ஊடாக வெளிப்படுத்தப்படுகின்றன. பாடப்புத்தகங்களில் அத்திசூடி, திருக் குறள், பழமொழிகளில் விழுமிய கருத்துக் களை காணலாம்.

கல்வி என்பது இயற்கையுடன் இணைந்த மனிதன் நுண்ணறிவு செயற்பாடுகளினூடாக உருவான ஓர் அமைப்பாகும். அந்த வகையில் நாட்டின் நலன்களை அடைய தேவைப்படும் சமூக பொருளாதார மற்றும் பண்பாட்டு தொடர்புடைய மாற்றங்களை உருவாக்கும் வலுவான கல்வி ஆகும். ஒரு நாட்டின் கல்வியில் பின்வரும் 4 விடயங்கள் செல்வாக்கு செலுத்துகின்றன.

1. கலாசாரம்
2. சமுதாயம்
3. பொருளாதாரம்
4. அரசியல்

என்பனவாகும். செல்வாக்கு செலுத்தும் இக் காரணிகளில் விழுமியப் பண்புகள் உள்ளடங்கியதாக காணப்படுகின்றது. 1997 ம் ஆண்டு மேற்கொண்ட கல்வி சீர்திருத்தத்தில் ஆக்கத்திறன், சுயதூண்டல், ஒழுக்கம், மற்றவர்களுக்கு மதிப்பளித்தல், சகிப்புத்தன்மை என்பனவும் மற்றும் ஏனைய பண்பாட்டு விழுமியங்களையும் கொண்ட முழுமையான ஆளுமை விருத்தியினை மாணவர்களிடம் ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும், எனும் நோக்கில் மறுசீரமைப்பு செய்யப்பட்டது. இக் கலைத்திட்டத்தின் நோக்கங்கள் மனித விழுமியபண்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளது. உதாரணமாக

- பிள்ளைகளை வகுப்பறையில் முடக்காது சூழலை திறனாக கற்றலுக்கான நிலைமையினை உருவாக்குதல்
- மற்றையோரின் பண்பாடுகளையும், கருத்துக்களையும் மதிப்புடன் பிள்ளைகளை நாட்டுப்பற்று உடையவர்களாகவும், நல்லிணக்கம் உடையவர்களாக வாழக் கற்றல்.
- மாற்றங்களை ஏற்றுக்கொள்ளவும், அதற்கேற்ப இசைவாக்கம் அடையவும் கற்றுக் கொள்ளல்.
- எதிர்நோக்கும் சவால்களை சுயநம்பிக்கையின் அடிப்படையில் முகம் கொடுப்பதற்கான திறன்களை விருத்தி செய்தல் போன்ற விழுமியப் பண்பை வளர்த்து செல்வதற்கு அடிப்படை நோக்கமாக கொள்ளலாம்.

- **தேர்ச்சி**

அறிவு, திறன்கள், மனப்பாங்குகள், ஆளிடைத் தொடர்புகள் என்பவற்றின் நீட்சியால் தனியாளை செயற்படுத்துவதே தேர்ச்சியாகும். பொதுவாக தேர்ச்சிகள் பாடம் சார்ந்தவை, பாடம் சாராதவை என பலவகைப் படுத்தலாம்.

| பாடம் சார்ந்தது | பாடம் சாராதது |
|---|---|
| அறிவு | தொடர்பாடல் தேர்ச்சி |
| திறன் | தகவல் தேர்ச்சி |
| மனப்பாங்கு | சிந்திக்கும் தேர்ச்சி |
| பயிற்சி | தனியாள் தேர்ச்சி |
| | சூழல் தேர்ச்சி |
| | ஆளிடைத் தேர்ச்சி |

மேலே குறிப்பிட்ட தேர்ச்சிகள் மாணவர்களிடம் விழுமியப் பண்பை வளர்ப்பதில் செல்வாக்கு செலுத்துகின்றது. இத் தேர்ச்சிகளில் ஆளிடைத் தேர்ச்சி, தனியாள் தேர்ச்சி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழல் தேர்ச்சி, தொடர்பாடல் தேர்ச்சி என்பன மாணவர்களிடையே விடுமியப் பண்புகளை வளர்ப்பதில் செல்வாக்கு செலுத்துகின்றது.

ஆளிடை தேர்ச்சி ஆளிடையே தொடர்பு திறன்கள் விருத்தி செய்து கொள்வதற்காக மாணவர்கள் குழுவாக செயற்படுவர் இத் தேர்ச்சியான போது சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுப்பு, அன்பு போன்ற பலவித விழுமியப் பண்புகள் வளர்தெடுக்கப்படும்.

**சூழல் தேர்ச்சி**

சூழல் தொடர்பான அறிவை விருத்தி செய்யும் ஒரு தேர்ச்சி சூழல் தேர்ச்சியாகும். இத் தேர்ச்சியை மாணவர்கள் விருத்தி செய்யும்போது சுயகற்றல், ஒழுங்குமுறை போன்ற விழுமியப் பண்புகளை பெற்றுக் கொள்வர்.

**தொடர்பாடல் தேர்ச்சி**

எழுத்தறிவு, எண்ணறிவு, மொழியறிவு என்பவற்றை விருத்தி செய்யும் நோக்கில் அமைந்த தேர்ச்சியாகும்.' இவையும் மாணவர்களிடையே விழுமியப் பண்பை வளர்க்கும்ஒரு தேர்ச்சி ஆகும்.

மேற்கூறிய தேர்ச்சிகள் ஊடாகவும் பாடவிதானங்களில் உள்ள பாட அலகு ஊடாகவும் விழுமிய எண்ணங்களை வளர்க்கும் நோக்கில் எண்ணக்கருக்கள் புகுத்தப்பட்டுள்ளதை காணலாம். உதாரணமாக பாடவிதானங்களில் சமயம், தமிழ், குடியியல், உடற்கல்வி போன்ற பாடங்கள் மாணவரிடத்தே விழுமிய பண்புகளை வளர்க்கும் நோக்கில் அலகுகள் உள்ளடக்கப்பட்டிருப்பதைக் காணலாம். பிள்ளைகளிடம் விழுமியங்களை வளர்ப்பதற்கு மனப்பாங்கை கட்டியெழுப்ப வேண்டும். மனப்பாங்கிலும் விழுமியத்திலும் அறிவு, மனவெழுச்சி, நடத்தை எனும் மூன்று பிரிவுகள் உள்ளன. மனவெழுச்சி அல்லது விழுமியத்தை வளர்க்க வேண்டுமானால் அறிவு இன்றியமையாதது. அறிவை வளர்ப்பதற்கு பாடவிதானமும் தேர்ச்சியும் பாடசாலை செயற் பாட்டில் முக்கியம் பெறுகின்றன.

## ஆ. மனித விழுமியங்களின் வீழ்ச்சிக் கான காரணிகள்

விழுமியம் மனித வாழ்வின் நல்லொழுக்க நடத்தைக்கு காரணமானதாகும். நல்லொழுக்கம் என்பது ஆங்கிலத்தில் Morality என்பதாகும். இது சமூக மரபுகள் சமூகம் ஏற்றுக் கொண்ட நடத்தைகள் நியமனங்கள் என்ற கருத்தை தருகின்றன. இன்றைய நவீன உலகில் மனித விழுமியம் எனச் சொல்லப் படுகின்ற அன்பு, பொறுமை, இரக்கம் என பல பண்புகள் மனிதனில் இருந்து விலகிச் செல்வதை காணலாம். இவ்வாறான நடத்தை மாற்றத்துக்கு பல காரணங்களை முன்வைத்தாலும், இது மனித சமூகத்திற்கு துன்பியல் காலமாக கொள்ள முடியும்.

**மனித விழுமியங்களின் வீழ்ச்சிக்கான காரணிகளை நோக்குவோம்.**

1. அறநெறிக்கல்வி, சமயநம்பிக்கை, வீழ்ச்சியடைதல்
2. நவீன உலகபோக்கும், நடத்தை மாற்றமும்
3. சமூக ஏற்றத்தாழ்வுகள்
4. பொருளாதார பிரச்சினைகள்
5. போரும் ஏற்படும் இடப் பெயர்வுகளும்
6. இயற்கைத் தாக்கமும் சுகாதார சீர்கேடுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 1. அறநெறிக்கல்வி, சமயநம்பிக்கை, வீழ்ச்சியடைதல்

சமூகத்தில் விழுமியங்கள் வளர்க் கப்படவேண்டுமானால், அறநெறிக் கருத் துக்களையும் சுயநம்பிக்கையும் மனித னிடத்தே ஊன்ற வேண்டும். சமயம் அற நெறிக்கருத்துக்களையும், விழுமியக் கருத் துக்களையும் கூறி நிற்கின்றன. அனைத்து மதங்களும் அன்பு, இரக்கம், காருண்யம் போன்ற பல விழுமியங்களை எடுத்துக் கூறுகின்றன. அது மட்டுமல்லாது மரபு முறையை பின்பற்றி சமய தலைவர்களின் ஊடாக "விழுமியங்களை வளர்ப்பதற்காக செய்யப்படுகிறது"

போதனை இவற்றில் நம்பிக்கை வைத்து செயற்படுகிறபோது, மனித சமூகம் விழுமியங் களை மதிக்கும் தன்மை வெளிப்படும் சமயநூல்கள், அறம் சார்ந்த நூல்கள் விழுமியங்களை மதிப்பதனால் ஏற்படும் நன்மை, தீமை பற்றி கூறுவதோடு, நின்றுவிடாமல் கதைகள் ஊடாகவும் மறுபிறப்பு பற்றிய கதைகள் ஊடாகவும் கூறி நிற்பது விழுமியங்களை மதிக்கும் சமூகத் தை உருவாக்குவதற்காகும். மேலை நாடு களின் பாடசாலைகளில் Fear of God is the beginning of Knowledge எனக் கூறப்படுகிறது. அதாவது கடவுளுக்கு பயப்படுதல் அறிவின் ஆரம்பமாகும் என்று வழங்கப்படுகிறது. இவ்வாறான அறநெறிக் கல்வி வீழ்ச்சியும் விழுமிய வீழ்ச்சிக்கு காரணமாகின்றது.

### 2. நவீன உலக போக்கும் நடத்தை மாற்றங் களும்

இன்றைய உலகம் இயந்திரமயமாக் கப்பட்ட வாழ்வை கொண்ட சமூகமாகும். மனித ஆற்றல் மீது நம்பிக்கை கொண்ட ஒரு வாழ்வு முறை, மனிதரில் நடத்தை மாற்றங் களை ஏற்படுத்தியுள்ளது. மதுபானம், புகைத் தல், பயங்கரவாத இயக்கங்களுக்கு சேர்தல் போன்ற இன்றைய சமூகத்தில் அதிகரித் துள்ளது. உலகம் முழுவதும் பரவிய பெள தீகவாத, லௌகீவாத, வர்தக வாத நவீன கலாச்சாரம் சம்பிரதாய சமூக பெறுமதிகளை அழித்து விழுமியப்பண்புகளை புதைத் துள்ளது. இதன் காரணமாக நலத்தன்மை யற்ற சமுதாயம் தோன்றியுள்ளது. இந் நிலைமையினை போக்குவதற்கு பாடசாலை பாடத்திட்டத்திலும் விழுமியங்களை சேர்ப்ப தற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 3. சமூக ஏற்றத்தாழ்வுகளும் சமூக சீரழிவு களும்

சமூக வர்க வேறுபாடுகள் அல்லது ஏற்றத்தாழ்வுகள் சமூக விழுமியங்களை குறைக்கும் பாங்கை காணலாம். சமூகத்தில் காணப்படுகின்ற சாதிவேறுபாடுகள், ஏழை, பணக்காரர், படித்தவர், படிக்காதவர் போன்ற னவும் மேட்டுக் குடியினனர், விவசாய சமூகத் தினர் போன்ற வேறுபாடுகள் அவர்களின் கல்வியிலும் வாழ்க்கைமுறையிலும் பெரும் மாறுதல்களை ஏற்படுத்தி யுள்ளது. ஒருவரது மனப்பாங்குகள் வாழ்க்கை தத்துவத்தின் அடிப்படையில் அமைவதால் அதனை மாற்றுவது என்பது இலகுவானதன்று. இந்த அடிப்படையில் சமூக ஏற்றத்தாழ்வுகள் விழுமிய எதிர்மறை கணியங்களை ஏற்படுத் தும் பொறாமை, கோபம், தாழ்வுமனப்பாங்கு ஏற்படுத்தும்.

### 4. பொருளாதார பிரச்சினைகள்

ஒருவர் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் உண்மையில் விரும்புகின்ற, பெறுகின்ற,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருகின்ற, உயர்வானதாக கருதுகின்ற, ஆசைப்படுகின்ற, அனுமானிக்கின்ற, அனுபவிக்கின்ற எந்த பொருளையும் அடிப்படை கருத்தில் மதிப்பு எனக் கூறமுடியும் (பிராய்ட்மன்)1987) பொருளாதார பிரச்சினைகள் விழுமியத்தை பாதிக்கும் ஒன்றாக காணப்படுகின்றது. பாடசாலை மாணவர்கள் பொருளாதார பிரச்சினையை எதிர்கொள்ள நேரிடும் போது, வரவின்மை, ஒழுங்கின்மை, ஆளிடைத்தொடர்புகள் குறைக்கப்படும். இச் சந்தர்ப்பங்களில் விழுமியப் பண்புகள் அற்ற மனிதனாக மாற்றுவதற்கு சாத்தியக் கூற்று அதிகமாக ஏற்படும்.

போர், இடப்பெயர்வுகள் சுகாதார சீர்கேடுகள் போன்ற மனித விழுமியங்களில் தாக்கம் செலுத்தப்படுகின்ற காரணியாக அமைகின்றது. போர் நடவடிக்கைக்கு சிறுவர்கள் சேர்க்கப் படுவதும், சிறுவர் உரிமைகள் மதிக்கப்படாமையும் தற்கால உலகிலும், மாணவர்கள் மத்தியிலும் விழுமியப்பண்பு குறைந்து செல்வதற்கு காரணமாகின்றது. பெற்றோர்கள் பிள்ளைகளின் உணர்வுகளை புரிந்து கொள்ளாமையும், முரண்பாட்டு தன்மையும், பிள்ளைகளின் விழுமியப் பண்பு குறைந்து செல்கிறது.

மேற்கூறிய காரணிகள் இன்றைய சமூகத்திலும், மாணவர்கள் மத்தியிலும் விழுமியப் பண்புகள் குறைந்து செல்வதற்கு காரணமாகின்றது.

### ஆ. "ஆசிரியர் மாற்று முகவர்"

சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் பாடசாலையின் ஊடாகவே மேற்கொள்ளலாம். மனித உயர் விழுமியங்களையும் கட்டி எழுப்பக்கூடிய வாய்ப்பு பாடசாலை ஆசிரியர்களிடையே அதிகம் காணப்படுகிறது. நாடளாவிய ரீதியில் விழிப்புணர்வு, நடவடிக்கைகள் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டுமாயின் பாடசாலையின் மூலமாகவே மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாறான காரணங்களால் "ஆசிரியர் மாற்று முகவர்" என்ற வகிபாகத்தை ஏற்றுள்ளார். ஒவ்வொருவரும் முகம் கொடுக்கும் விழுமியங்களை இனங்காண்பதற்கு ஆதாரமாக அமைவது கல்வியே ஆகும்.

விழுமியம் தொடர்பாக பெற்றோர்களிடம் காணப்படுகின்ற அறிவு, கடமை, பொறுப்பு என்பன மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. பெற்றோர்களும் ஆசிரியர்களும் இணைந்து மேற்கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்கள், சேவைத்திட்டங்கள் எதுவும் இல்லை. சமூகத்தில் மாணவர்கள் விழுமியப் பண்பு மிக்கவர்களாக மாற்றமடைய வேண்டுமானால் பாடசாலை மாணவர்களிடம் வளர்க்க எடுக்கப்படும் விழுமியம் தொடர்பான செயற்பாடுகளுக்கு பெற்றோர்களை "பங்குதாரர்களாக" மாற்ற வேண்டும். இவ்விரு பகுதியினரும் மாணவர்களிடத்தே வளர்த்து எடுக்க வேண்டிய குணாம்சங்களை இரு பகுதியினரும் இனங்கண்டு கொள்வதன் மூலமே வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும். சாதாரணத்தன்மை, கீழ்ப்படிவு, சூழலுக்கு ஏற்றவாறு இசைவு பாரம்பரியங்களை கௌரவித்தல் அவற்றுள் சிலவாகும்.

பெற்றோருக்கு அறிவுறுத்துவதில் சில பொறுப்புக்கள் ஆசிரியர்களுக்கும் உள்ளன. (1997) கூடியவாறு ஆசிரியர் அவர்களின் விழுமியங்கள் தொடர்பாக கலந்துரையாட வேண்டும். பெற்றோர்களுடன் நடாத்தப்படும் கலந்துரையாடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் இருபாலாரும் ஒன்றிணையக்கூடிய விழுமியங்களை இனங்கண்டு கொள்ள வேண்டுமென்றார்கள்.

**விவரங்களை வழங்குதல்**

பிள்ளைகளுக்கு ஏதாவது ஒரு விதியொன்றை வழங்கும்போது அதற்கான காரணத்தை விளக்க வேண்டும் என உளவியலாளர்கள் கூறுகின்றனர்.

பொய் சொன்னால் சமூகம் உங்கள் சொற்களை நம்பாது என்ற வகையில் விழுமிய செயற்பாடுகளுக்கு வழிவகுக்கின்ற காரணங்களை காட்டுதல் வேண்டும். இதன் மூலம் உண்மை தன்மையை மாணவர்கள் உணர்ந்து கொள்வர்.

**நிபந்தனை செய்தல்**

மாணவர்கள் பிழைகள் செய்தால் அதை சுட்டிக்காட்டி தீமைகளை கூறி திருத்த முயல வேண்டும். அச் செயலை சுட்டிக்காட்டி நிந்தனையோ இழிவாகவே பேசக்கூடாது. அவ்வாறு செயற்படும் சந்தர்ப் பத்தில் பிள்ளைகள் மனவிரக்தி அடைந்து தவறான வழியில் செல்ல வாய்ப்புண்டு.

பல சந்தர்ப்பங்களில் ஒரு புடை அணுகலை தவிர்க்க வேண்டும். அதாவது ஒரு புடை அணுகல் என்பது ஒரு விழுமிய செய்கையை தூண்டுவதற்காக, ஒரு புறத்தை மட்டும் விளக்கி மறுபுறத்தை மூடி மறைக்கின்றனர். உண்மையை திரிந்து கூறலும் இதனுள் அடங்கும்.

உ+ம்: பரீட்சையில் சித்தி அடைந்தாலே வாழ்வில் உயர முடியும். இத்தகைய கூற்றுக்கள் பிள்ளைகளை பிழையாக வழி நடத்துபவையாகவும், இவை உண்மையல்ல எனக் காணும்போது ஆசிரியர் பொய்க்காரனாக மாற வாய்ப்புண்டு.

மெரில்ஹாமீன், சிட்னி சைமன் ஆகியோர் மாணவர்களிடத்தே விழுமியப பண்புகளை வளர்ப்பதற்கு பின்வருவன ஆசிரியரிடத்தில் காணக்கூடியதாக உள்ளதாக கருதுகின்றார். அவையாவன,

1. எதனையும் செய்யாதிருத்தல்
2. முன் நிச்சயித்த விழுமிய கோவையை உருவாக்க வழிகாட்டுதல்
3. தனக்கே உரித்தான விழுமிய கோவையை உருவாக்க வழிகாட்டுதல்

**எதனையும் செய்யாதிருத்தல்**

மாணவர் விழுமிய வளர்ச்சிக்கு எதையும் செய்யாமல் இருப்பர். தமது கொள்கையை நியாயப்படுத்துவதற்கு பல கருத்துக்களை முன்வைப்பார்கள். உதாரமாக விழுமியம் தொடர்பான அறிவின்மை, பாடத்தை படிப்பதே எனக் கூறுவர். இவ்வாறான நியாயப்படுத்தல்களை தவிர்த்து விழுமியம் மலர ஆசிரியர் செயற்பட வேண்டும்.

**முன் நிச்சயித்த விழுமிய கோவையை உருவாக்க வழிகாட்டுதல்**

சமூகத்தின் பெரியவர்களால் விதந்துரைக்கப்பட்ட விழுமியங்களை அப்படியே பிள்ளைகளுக்கு மாற்றப்படுவதாகும். இதை கையாள்வதற்கு இரண்டு முறைகள் காணப்படுகின்றன.

**1) ஆசிரியர் முன்மாதிரி**

அனைத்து நாடுகளிலும் உள்ளதைப் போன்று ஆசிரியர்கள் தமது நடத்தையில் முன்மாதிரியாக செயற்பட வேண்டும் என்பதாகும். விழுமியப் பண்புகளை ஆசிரியர்கள் தமது நடத்தையில் காட்ட வேண்டும். இது விழுமியம் சமூகத்தில் கட்டி எழுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதற்கு உறுதுணையாக அமையும்.

**பரிசுகள் தண்டனை வழங்கல்**

மாணவர்கள் எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் செயற்பட்டால் அல்லது விழுமிய பண்புகளை வெளிக்கட்டி சமூகத்திலோ, பாடசாலையிலோ உயர் மரியாதையை பெறுகின்ற போது ஊக்குவித்து பரிசில்கள் வழங்கப்படும். பட்சத்தில் அனைத்து மாண வர்களிடத்தேயும் விழிப்பை ஏற்படுத்தலாம். மீண்டும், மீண்டும் செய்யத்தூண்டும் சில தவறுகளுக்கு தண்டனை வழங்கப்படும் பட்சத்தில் எதிர்மறையான தூண்டுதல்களை ஏற்படுத்துதல்.

மாற்று முகவர் ஆசிரியர் என்ற வகையில் விழுமியப்பண்பை வளர்த்து எடுப்பதற்கு கூறிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

திரு. த. டே. கிஸ்காட்
அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆராதிக்கப்படும் அம்புயம்

"உள்ளக்கமலம் உத்தமனார் வேண்டுவது" என்ற கூற்றுக்கிணங்க தாமரை மலர் சத்தியம், மங்கலம் மற்றும் அழகு ஆகியவற்றின் இருப்பிடம் இறைவனும் இம் மூன்று இயல்புகளைக் கொண்டவன். ஆகவேதான் இறைவனுடைய பல அம்சங்களும் தாமரை மலருடன் ஒப்பிடப்படுகின்றன. நமது ஆன்மீக நூல்களும் பண்டைய இலக்கியங்களும் தாமரையின் அழகை வெகுவாக புகழ்கின்றன. ஓவியங்கள், சிற்பக்கலைகள் நிறைந்து விளங்கும் கட்டிடங்களில் மனதைக் கவரும் வகையில் தாமரைப் பூ சித்திரங்களும் செதுக்கப்பட்டு காணப்படுகின்றன. தாமரை மலருடன் தொடர்புள்ள பல்வேறுபட்ட விடயங்கள் எடுத்தியம்பப் படுகின்றன. செல்வத்திற்கு அதிபதியான லட்சுமிதேவி தாமரை மலர் மேல் அமர்ந்து ஒரு கையில் தாமரைப் பூவையும் ஏந்தியுள்ளார்.

தாமரை, கதிரவன் உதிக்கையில் மலர்கின்றது. இரவில் இதழ்களை மூடிக் கொள்கிறது. இதுபோலவே நம் மனமும் ஞானம் எனும் ஒளியினால் மலர்ந்து விரிவடைகிறது. தாமரை சேற்றில் பிறந்தாலும் எத்தகைய சுற்றுப்புறத்தினாலும் களங்கப் படாது. அழகுடன் ஒளி வீசுகின் றது. எது எத்தகைய சூழ்நிலையில் இருந்தாலும் நாமும் உள்ளும் புறமும் தாமரை போன்றே தூய்மையுடனும் அழகுடனும் விளங்க முடியும் என்பதை நினைவூட்டுகின்றது. தாமரை எப்பொழுதும் நீரிலேயே இருப்பினும் அதன் இதழ்கள் நீரினால் கரைவதில்லை. இது ஒரு ஞானியின் இயல்பைப் போன்றது. துன்பங்களும் இடைவிடாத மாற்றங்களும் நிறைந்த இவ்வுலகில் அவற்றினால் சிறிதளவும் பாதிக்கப்படாமல் எப்பொழுதும் நிறைந்த மகிழ்ச்சியுடன் விளங்குவதைத் தான் இது குறிக்கின்றது.

எவனொருவன் செயலாற்றுகையில் அச் செயல்களிடத்தில் பற்றுதல் கொள்ளாது அவைகளை இறைவனுக்கு அர்ப்பணித்து விடுகின்றானோ அவன் நீரில் இருப்பினும் நீரினால் நனைக்கப்படாத தாமரை இதழ் களைப் போல் பாவங்களினால் பாதிக்கப்பட மாட்டான். மேலும் தியானத்திற்கு அமரும் போது ஒருவர் பத்மாசனம் அல்லது தாமரைப் பூவை ஒத்த நிலையில் தனது கால்களை மடக்கி அமர்தல் வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

மேற்கூறியவற்றினின்று ஏன் தாமரை இந்தியாவின் தேசிய மலராக கருதப்படுகின்றது என்பதும் அம்மலரின் தனிச்சிறப்பினையும் நாம் அறியலாம்.

**வி. றஜனி**
**ஆசிரியர் (ஆரம்பக்கல்வி)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்பான கற்பித்தலுக்கு வினைத்திறனான பாடத்திட்டத்தின் அவசியம்

மாறிவருகின்ற உலகில் மனித தன்மையோடு மாண்பு மிக்கவனாக, சமூகப் பிராணியாக மனிதன் வாழ்வதற்கு மகத்தான பண்புகள் அவசியம் ஆகின்றன. இத்தகைய பண்புகளை தனதாக்கி கொள்வதற்கு, இயற்கையின் இயங்கு நிலைகளை சரிவர புரிந்து கொள்வதற்கு துணை செய்வனவாக பாடசாலைகள் காணப்படுகின்றன. இப் பாட சாலையின் மையப்பகுதியாக வகுப்பறைகள் விளங்குகின்றன. இவ் வகுப்பறையில் இடம் பெறுகின்ற உருவாக்கல் செயன்முறையே தரமான மனித வளத்தினை சமூகத்திற்கு வழங்குகின்றது. ஆக தரமான வகுப்பறை வினைத்திறனுடனும் (Efficience) விளை திறனுடனும் (Productivity) பரிணமிப்பதற்கு வினைத்திறன் மிக்க பாடத்திட்ட மிடல் அவசியமாகின்றது.

**"வெற்றியாளர்கள் வித்தியாசமான செயல்களை செய்வதில்லை.**
**அவர்கள் தாங்கள் செய்வதையே வித்தியாசமாக செய்கிறார்கள்"**
**-Shivkhera**

ஒரு வகுப்பறையில் ஆசிரியர் ஒருவர் தன்னை வெற்றி வீரனாக காட்சிப்படுத்த வேண்டுமாயின் வழமையான ஆசிரியர் பாணியில் கற்பித்தல் பணியில் ஈடுபடு பவராயின் அது முடியாத காரியமாக மாறி விடும். நான்கு சுவர்களைக் கொண்ட 20x20 அளவுடைய அறையினுள் சுமார் 40 மாணவர் கள், அவர்களது தளபாடங்களுடன் பாட சாலை நாளொன்றில் சுமார் 40 நிமிடங்கள் ஒரு பாட வேளைக்காக காலத்தினை கழிக் கின்றனர். ஒரு வகுப்பறை பெரும்பாலும் ஒரே வயதுச் சூழலினைக் கொண்டுள்ள போதி லும் அவர்களது விருப்பு, வெறுப்பு சேவை கள், சிந்தனைச் செயற்பாடுகள், தகைமை மட்டம், குடும்பப் பின்னணி, சூழல் அனைத் தும் மாறிகளாகவே காணப்படுகின்றன. ஒரு பாடவேளைக்காக செல்கின்ற ஆசிரியர் ஒருவர் இத்தகைய காரணிகளையும் கவனத் தில் கொண்டு மாணவர்களை தன்வசப் படுத்தி கற்றலில் மாணவர்கள் சன்னதம் கொள்ளச் செய்கின்ற போதுதான் வகுப்பறை யின் முதன்நிலை முகாமையாளர் வெற்றி வீரராக தன்னை சித்தரித்துக் காட்டக்கூடிய தாக இருக்கும். இதற்காகவே வினைத்திறன் மிக்க பாடத்திட்டமிடல் அவசியமாகின்றது.

இன்று வகுப்பறையில் வினைத் திறன் மிக்க கற்றல் சூழலினை ஏற்படுத்து வதில் பெரும்பாலான ஆசிரியர்கள் தோல்வி யினைக் கண்டு வருகின்றனர். இதற்கு ஆதாரமாக 1992 மே இல் வெளியிடப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழுவின் முதலாவது அறிக்கையில் வரும் சில விடயங்கள் சுட்டிக்காட்டப்படுகின்றது.

❖ வகுப்பறைச் செயற்பாடு ஒரே பாங் கில் ஒரே தொனியில் அமைந்திருந்தது.

❖ வகுப்பறையில் சோம்பல் கதை அமர்வுகளே அதிகமாக இருந்தன.

❖ ஆசிரியர்கள் முற்றுமுழுக்க பள்ளி மாணவரின் பாடப்புத்தகத்தையே நம்பி யிருந்தனர்.

இன்றைய நவீன உலகிற்கு ஏற்ற விதமாக வகுப்பறை கற்றல் கற்பித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுட்பங்கள் தொடர்பாக பல மாற்றங்கள் புதுமைகள் புகுத்தப்பட்ட போதும் அவை வகுப்பறை யின் சுவர்களைக் கூட தொட்டுச் சொல்லாத வையாகவே காணப்படுகின்றது. இவற்றிற்கு பின்வரும் குறைபாடுகள் ஆசிரியர்களிடம் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

✓ பாடப்புலைமை இன்மை

✓ தொடர்பாடலிலான பிரத்தியேகத்திறன் இன்மை

✓ மாணவர்களின் அனுபவங்களுடன் கூடிய கற்பித்தல் திறன் இன்மை

✓ நவீன கற்பித்தல் உபகரணப் பயன்பாடு இன்மை

✓ மாணவர்களை பங்காளர்களாக மாற்றும் உத்தி தெரியாமை

✓ நேரம் தவறாமை கட்டுப்பாடு முன்மாதிரியான நடத்தை இன்மை

✓ ஆசிரியர் மாணவர் உறவினை சமூகமாக பேணாமை

✓ கற்றலில் வாழ்நாள் மாணவராக இல்லமை

இவ்வாறான காரணிகள் வகுப்பறைச் சூழலினை பெரிதும் பாதிப்பதாகவே அமைந்துவிடுகிறது.

**“எல்லோரும் நடந்த பாதையில் நீங்களும் நடவாதீர்கள். மாறாக பாதைகளே இல்லாத இடத்தில் நடக்க முயலுங்கள். காலடித் தடம் மற்றவர்களுக்கு புதிய பாதையாக அமையும்.”**

**-R.Zaphiopoulas**

வகுப்பறையில் ஒவ்வொரு நாளும் புதுப்புது அனுபவங்களை மாணவர்கள் தமதாக்கி கொள்வதற்கு ஆசிரியர் ஆக்கத் திறன் மிக்கவராக புதிது புதிதாக சமைக்கக் கூடியவராக இருக்க வேண்டும். அப்போது தான் புதுமையான கற்பித்தல் நுட்பங்கள் ஊற்றெடுக்கும்.

ஐன்ஸ்ரீன் அவர்கள் குறிப்பிடப் படுவது போன்று ஒரு மீனுக்கு மரத்தில் ஏறுவது தொடர்பாக பரீட்சை வைக்கப் பட்டால் அது தன் வாழ்நாள் முழுவதும் தன்னை ஒரு முட்டாளகவே கருதிக் கொள்ளும். இவ்வாறான வினோதமான கற்பித்தல் அணுகு முறைகள் ஒவ்வொரு நாளும் எமது வகுப்பறைகளில் நடந்த வண்ணமே உள்ளன.

ஆசிரியர் பாடத்திட்டமிடலினை மேற்கொள்கின்ற போது சற்றும் சிந்திக்காமல் தமக்கு இயல்பாக தெரிந்திருக்கின்ற முன்னோர்களிடம் இரவல் வாங்கிக்கொண்ட கற்பித்தல் முறைகளினூடாக நாளாந்தம் கற்பிப்பதற்கு விளைவதாலேயே வகுப்பறைகள் உயிரூட்டமற்று உருக்குலைக்கப்படுகின்றன.

எனவே தான் ஆசிரியர் ஓடுகின்ற ஆற்றினில் கால் வைக்க விரும்புகின்ற ஞானி போன்று தனது சிந்தனையினையும் கற்பித்தல் செயற்பாட்டினையும் ஒழுங்குபடுத்த வேண்டியனாக காணப்படுகின்றான். இதற்கு ஆசிரியர் வழிநடத்துகின்ற சுக்கானாகத் தான் வினைத்திறன்மிக்க பாடத்திட்டமிடல் காணப்படுகின்றது.

**காற்றின் திசையினை எம்மால் மாற்ற முடியாது அது வீசுகின்ற திசையினை அறிந்து நாம் எம்மை மாற்றி செயற்பட முடியும்.**

**-மகாத்மா காந்தி**

ஒவ்வொரு ஆசிரியரும் தனது பாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலையின் சூழமைவு, நிர்வாக நடைமுறைகள், நடைமுறையில் உள்ள சுற்று நிருபங்கள், கல்வியியலாளர்களின் வழிகாட்டல்கள் என்பவற்றினை நன்கு அறிந்து கொண்டு கற்றல் இலக்கினை மாணவர்கள் அடையக்கூடிய விதமாக தமது பாடத்தினை தயாரிக்க வேண்டும்.

பாடத்திட்டமென்றால் என்ன? என்பதனை விளங்கிக்கொள்வதற்கு அதனை தயாரிப்பதற்கு அதற்கென நேரத்தினை எடுத்துக்கொள்ளல், அர்ப்பணிப்பு, மாணவர்களின் இயலுமைகளை விளங்கிக் கொள்ளல், இலக்கினை புரிந்துகொள்ளல் அவசியமாகின்றது. கல்விக்களத்திலே குறித்த இலக்கினை அடைவதற்கு மாணவர்களை கடுமையாக ஊக்கப்படுத்துவதோடு பாட வேளையின் போதும் கற்பித்தலின் போதும் தூண்ட வேண்டும்.

ஒரு வெற்றிகரமான பாடத்திட்டமிடலினை அளவிடுவதற்கு

- வேலைத்தாளினை பயன்படுத் துதல்
- வீட்டு வேலைகளை பரீட்சித்தல்
- பரீட்சைகளை நடாத்தி திருத்துதல்

போன்ற கருவிகளாக அமைகின்றன.

ஒரு பாடத்திட்டமிடலினை தயாரிக்கின்ற போது

- உங்களது மாணவர்களை அறிந்து கொள்ளுங்கள்
- கற்றல் பேறினை ஒழுங்குபடுத் துங்கள்
- பாடத்திற்கான நோக்கத்தினை எழுதிக்கொள்ளுங்கள்
- நேர வரையறையினைத் திட்ட மிடுங்கள்

ஒரு சிறப்பான பாடத்திட்டமிடலானது பின்வரும் விடயங்களினை உள்ளடக்கியதாக காணப்படுகின்றபோது வகுப்பறையானது உயிரூட்டம் நிறைந்ததாக இருக்கும்.

➢ சுறுசுறுப்பாக்கல் (warm up) இதற்கு உதாரணமாக

I. அன்றையதினம் கற்பிக்க இருக்கின்ற விடயங்கள் தொடர்பாக மாணவர்களின் சிந்தனையினை கிளறுதல்.

ii. கடந்த பாட வேளையில் கற்ற விடயங்கள் தொடர்பான சிந்தனையினை கிளறுதல்.(5 நிமிடம்)

➢ அறிமுகம் (INTRODUCTION)

சிறப்பான அறிமுகம் அன்றைய தினம் கற்பிக்க இருக்கின்ற விடயத்தினை கற்க வேண்டும் என்கின்ற ஆர்வத்தினை தூண்டும். இங்கு ஆசிரியர் கற்பிக்க இருக்கின்ற விடயம் தொடர்பாக முழுமையான கவனம் செலுத்துவார்.

➢ Practice

இங்கு கற்பித்த விடயத்துடன் தொடர்பான விடயத்தினை கற்றுகொள்வதற்கு தனியாகவோ/ குழுவாகவோ வேலைதாளுடன் செயற்படுவதற்கு தூண்டுதல்.

➢ Production

இங்கு மாணவர்கள் தாங்கள் கற்றுக் கொண்ட விடயங்களினை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பத்தினை வழங்குதல் வேண்டும். குழுவாக வெளிப்படுத்துவது சிறப்பானது.

➢ Review

மாணவர்களின் முன் வைப்புக்களை மதிப்பிட்ட பின்னர் அடுத்த பாடத்திற்கு தயாராவதற்கான மன நிலையினை உரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்குதல் வேண்டும்.

எனவே இவற்றினை கவனத்தில் கொண்டு பாடத்திட்டத்தினை தயாரிக்கின்ற போது வருடாந்த வேலைத்திட்டம் பாடத் திட்டம் என்பவற்றுக்கிடையே ஒத்திசை வினை பேணுவது அவசியமாகும்.

இவையாவற்றினையும் கவனத்தில் கொண்டு தரம், திகதி, பாடவேளை, கற்பித் தல் சாதனங்கள், தேர்ச்சி, தேர்ச்சிமட்டம், கற்பித்தல் செயலொழுங்கு என்பவற்றினை தெளிவாக காட்டி அனுமதியினை பெற்று வைத்திருப்பது மாத்திரமில்லாமல் வகுப் பறையில் உண்மையாக பிரயோகிக்கின்ற போது தான் ஆசிரியர் வெற்றியாளனாக முடியும்.

ம. மரியராசா
முதல்வர்
கிளி/ வலைப்பாடு றோ.த.க பாடசாலை

# சிறுவர்கள் நாம்

வண்ண வண்ண சிட்டுக்கள்
வலம் வந்து குதிக்கும் சிட்டுக்கள்
கண்ணுக்கு இனிமை காட்டும்
கட்டழகு மிக்கதோர் சிட்டுக்கள்

தன்னுடைய பிள்ளையைப் போல்
தத்துவமாய் கற்பிக்கும் ஆசான்கள்
ஓயிலாய் ஆடல் பாடல்களை
உள்ளம் கவர புகட்டும் ஆசான்கள்

வெள்ளம் புரண்டு வீதி ஆறாய் ஓடினாலும்
புழுதி அளைந்து மூச்சு இரைத்தாலும்
படிக்கும் அறையை சுத்தமாக்கி
பாலர் வாழ்வை இனிதாக்கி
இங்கிதமாய் வாழ வழிசமைத்தீரே

சோலை மலர்ந்த சுந்தரப் பூக்களே
சுதந்திரமாய் முழுமுழு நிலவின் முத்துக்களே
பால்முகம் மாறாப் பாலகர்களை
பக்குவமாய் அணைத்து வழிகாட்டும்
அப்பா அம்மாவிற்கு நிகரான ஆசான்களே

ரா. டக்சாயினி (தரம் – 08)
ரா. பிரசானி (தரம் – 03)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக மயமாதலால் தொலைந்து போகும் கலாசாரம்

"பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல்ல" என்பது தொல்காப்பியர் கூற்று. இதனை நாம் அபிவிருத்தி யோடும் சனத்தொகை வளர்ச்சியோடும் ஒப்பிடுவோமானால் வரையறுக்கப்பட்ட வளத்தைக் கொண்டு வரையறையற்ற மனித தேவைகளை நிறைவேற்ற உற்பத்தியில் ஒழுங்குபடுத்தப்படும் புதிய செய்கை மாற்றமே அபிவிருத்தி ஆகும். எனவே பெருகிவரும் சனத்தொகையை எதிர்கொள்ளவே இந்த நடவடிக்கைளின் நோக்கமாகும். அனைத்து மக்களையும் எளிதில் சென்றடையக்கூடிய ஒரு தகவல் தொடர்பு சாதனம் "சினிமா" என்று பட்டிமன்றம் வைக்காமல் முடிவு செய்து விடலாம். அந்த அளவிற்கு சினிமா மக்களோடு மக்களாக இரண்டறக் கலந்து விட்டது. ஆனால் அதன் அவலநிலை அதள பாதாளத்தில் உள்ளது. இதன் விளைவு கலாசார சீர்கேட்டை ஏற்படுத்துகிறது. கலாசார சீரழிவு அந்த அளவிற்கு இருக்கின்றதென்றால் "கல்யாண நாள் பார்க்க சொல்லலாமா,என்ற காலம் போய் பிள்ளை குட்டி பெத்துகிட்டு கட்டிக்கலாமா" என்ற ரீதியில் அல்லவா சென்று கொண்டிருக்கின்றது எமது கலாசாரம்.

கலாசார சீரழிவு வன்முறை மாணவர்களிடம் ஹீரொயிசம் என சமூகத்தை சீரழிக்கும் செயல்கள் அனைத்திற்கும் வித்திவிடுவதில் இன்றைய சினிமா முக்கிய இடத்தை வகிக்கின்றது. நாகரிகம் என்ற பெயரால் நம் மக்கள் வேறு பாதைக்கு எடுத்து செல்லப்படுகின்றார்கள். இதுவே இன்றைய அவல நிலைக்கு காரணம். கலாசாரம் என்பது சமூகத்தை நல்வழியில் கொண்டு போக உதவும் ஒரு வழிகாட்டும் முறையேயாகும். ஒன்றை ஒன்று பின்னிக்கொண்டு இருக்கும் சமூக சங்கிலிக்குள்ளே நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இவ்வாறான வாழ்க்கையில் மொத்த மனித கூட்டத்தையும் சரியான பாதைக்கு கொண்டு செல்ல வேண்டும் என்பதற்காகவே மனிதன் என்பவன் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. அத்தகைய கட்டுப்பாடுகளின்படி வழிவழியாக மக்கள் வாழ்வதையே கலாசாரம் என்று அழைக்கிறோம். கட்டுப்பாடுகளை கடைப்பிடிக்க வேண்டியவன் மனிதன் என்பதால் அவற்றை காகிதத்தில் அச்சடித்து வைக்காமல் மனிதனின் ஆழ் மனதில் அச்சடித்தார்கள். அதற்கு முன்னோர்கள் கடைப்பிடித்த உபாயம் போதனை செய்தல் மூலமும் இதிகாச கதைகளை அடிக்கடி மக்களிடம் சொல்வதன் மூலமும் தர்மங்களை மக்களின் மனதில் எழுதினார்கள். மற்றும் தற்காலத்தில் நிலவிவரும் போதைப்பொருள் பாவனை தற்போதைய கலாசாரத்தை சீரழித்து வருகின்றது. இப் போதைப்பொருள் பாவனையானது வேறு நாடுகளில் இருந்து இறக்குமதியாகி எமது நாட்டில் விற்பனையாகி வருகின்றது. இப்பாவனைக்கு மாணவர்கள், இளைஞர்கள் என்பவர்கள் பெரிதும் அடிமையாகி உள்ளனர். இதனால் குடும்ப சீரழிவு, கல்வி சீரழிவு, பிள்ளைகள் சீரழிவு எனும் விளைவுகள் உண்டாகி வருகின்றன. மாணவர்கள் இதனைப் பாவிப்பதினால் அவர்களுடைய மற்றைய தலைமுறையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிவடையக் கூடிய சூழ்நிலை உள்ளது. மற்றும் மாணவர் கள் மத்தியில் நிலவி வரும் சிகையலங்கார மானது எமது கலாசாரத்தை பெரிதும் பாதித்து வருகின்றது. மாணவர்கள் பாட சாலை சட்டதிட்டங்களை மீறி அவர்கள் தாம் நினைத்த வகையில் சிகையலங்காரங் களை மேற்கொண்டு வருகின்றனர். இது ஒழுக்கத்திற்கு புறம்பான செயற்பாடு ஆகும்.

மற்றும் பெற்றோரை கனம் பண்ணும் பழக்கம் முற்காலத்தில் இருந்தாலும் தற்காலத்தில் நடைபெறும் சீர்கேட்டால் கனம் பண்ணும் பழக்கம் மருவி வருகின்றது. “அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்” என்பது ஆன்றோர் வாக்கு இக் கூற்று பிற்காலத்தில் “அன்னையும் பிதாவும் பின் னுக்கு இடைஞ்சல்” எனக் கூறும் காலமாக இது மாறிவிட்டது. மற்றும் நாடகத்துறையின் வளர்ச்சியினால் அதிகம் பாதிக்கப்படுபவர் கள் பெண்களேயாவர். இவர்கள் தங்கள் வேலையினை மறந்து தங்களது பிள்ளைகள் மற்றும் கணவர் போன்றோரின் மீது அக்கறை இல்லாமல்கூட இந்த நாடகத்தின் மீது கவனத்தை செலுத்தி வருகின்றனர். இது அவர்களுடைய சமுதாயத்தை பாதிக்கும் காரணியாகவே உள்ளது. இதுவே தற்காலத் தில் கலாசாரம் இல்லாது போவதற்கு காரணமாக அமைகின்றது. மற்றும் மொழி, கலை, இசை, நவீன கண்டுபிடிப்பு போன்ற துறைகளில் ஏற்படுத்திய தாக்கத்தைப் போல உடை, ஆடை, அணிகலன், மது போதை, புகைத்தல் ஏன் கற்றல் கற்பித்தல் கூட அறிவியல் தேவையாகவும் வளர்ச்சி யாகவும் இருந்த போதும் கூட எத்தனையோ ஊழல், வஞ்சகம் என்பவற்றிற்கு வழிசமைப் பதாகவே அமைந்துள்ளது. எனவே “பழை யன கழிதலும் புதியன புகுதலும் வழுவல்ல” இருந்தபோதும் இந் நோக்கத்தை மாத்திரம் நிறைவேற்றுவதாக அமைந்தால் மேலாகும். எனவே நாணயத்திற்கு இரு பக்கம் இருப் பதே பெறுமதியா வதைப் போல உலகமய மாதல் தேவையான, கட்டாயமான, அவசிய மான ஒன்றாக இருந்தபோதும் அதில் கணிச மான அளவு தாக்கத்தில் முழுமையான பாதிப்புக்குள்ளாவது கலாசார பண்பாட்டு விழுமியம் என்பது மறுப்பற்ற உண்மையே ஆகும்.

**கி. தனுசன்**
**தரம் – II**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களின் நவீன வகிபங்குப் பரிமாணமாக "உளவளத்துணையாளர்"

சமகால மாணவர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கு வடிகால் அமைத்துக் கொடுக்கும் மிக முக்கிய நிறுவனமாக இன்று பாடசாலை உள்ளது. பாடசாலையின் உயிர்த்துடிப்பாளர்கள் ஆசிரியர்களே ஆவர். சமூகத்திற்கும் இவர்கள் வகைகூறவேண்டியவர்களாகவுள்ளனர்.

**"ஆசிரியர்கள் தான் உலகின் முதன்மை அங்கத்தவர்கள் ஏனெனில் அவர்கள் பணி பூமியின் விதியைத் தீர்மானிக்கும்"**

**– ஹலன் கலடிகொற்**

இவ்வாறு உலகிலேயே உயர்வாண்மையாக உள்ள ஆசிரியத் தொழில் வகிபாகங்கள் பலவாகவுள்ளன. கற்பிப்பவர், வழிகாட்டி, நண்பர், தலைவர், உதவுபவர், முன்மாதிரியாளர், சமூகத்தலைவர், கலைஞர் என இன்னும் பலவாகவுள்ளன. இவற்றுடன் இன்று உளவளத்துணையாளர் என்ற மிக முக்கிய பாத்திரத்தை உடனடியாகப் பெற வேண்டிய நிலையில் ஆசிரியர்கள் உள்ளார்கள். ஆசிரியர்கள் அனைவருமே உளவளத் துணையாளர் வகிபாகத்தை ஏற்று இன்றைய மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் பொருத்தமான ஆலோசனைகளைப் பொறுப்புடன் வழங்க வேண்டியுள்ளது.

யுத்த விளைவுகள், வறுமை, சமூகச் சீர்கேடுகள், சமூக வன்முறைகள், கலாசாரச் சீர்கேடுகள், குடும்பப்பிரச்சினைகள், சமவயதுக்குழுப்பிரச்சினைகள், கட்டிளமைப் பருவ பாலியல்சார் குழப்பங்கள் எனப் பல விதமான நெருக்கீடுகளால் பாதிக்கப்பட்டு உளச்சக்தி தீய்ந்து போயிருக்கின்ற மாணவர்களைத் தயார்நிலைக்கு அழைத்துவர வேண்டிய பொறுப்பு இன்று ஆசிரியர்கள் மீது அவர்களை அறியாமலே சுமத்தப்பட்டுள்ளது. அதைப் புரிந்து தமது கற்பித்தல் கடமைகளுடன் உளவளத்துணையாளராக இருந்து வழிகாட்டப் பல்வேறு திறன்களை இன்றைய ஆசிரியர்கள் பெற்றிருக்க வேண்டும்.

## உளவளத்துணை

ஒருவர் தனது உள வளங்களின் முழுமையான விருத்தியை நோக்கிச் செல்கின்ற பயணத்தில் அவர் தான் சந்திக்கின்ற தடைகளை வெற்றிகொள்ள அவருக்கு அளிக்கும் ஒரு உயிர்ப்பான தொடர் செயற்பாட்டு உதவியே உளவளத்துணையாகும். இன்றைய பாடசாலை மாணவர்கள் பல நெருக்கடிகள் மத்தியில் தமது பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது தவிக்கின்றார்கள். தற்கொலை செய்து கொள்கின்றார்கள், தகாத உறவுகளை மேற்கொள்கின்றார்கள், போதைப்பொருள் பாவனையில் ஈடுபடுகின்றார்கள், அதிபரையோ, அசிரியரையோ, பெற்றோரையோ, பெரியோரையோ மதிக்காமல் செயலாற்றுகின்றார்கள் எனக் குற்றம் சுமத்தப்படுகிறது. இதற்கு மேற்குறிப்பிட்டவர்களே முன்மாதிரியாகவுள்ளார்கள். இவற்றிலிருந்து மாணவர்களை மீட்க இன்று ஒவ்வொரு ஆசிரியரும் உளவாளத்துணையாளர் வகிபங்கைப் பிரயோகிக்க வேண்டும்.

உளவளத்துணையில் உறவு அல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லது தொடர்பு என்பது முக்கியமானது. பிரச்சினைகளோடு வரும் மாணவரை "அவரை அவராக ஏற்று மதித்து கசப்பான அனுபவங்களைப் பகிர" ஒத்த உணர்வு ஆசியருக்குத் தேவை. மாணவரின் ஏக்கங்கள், தேவை கள், ஆசைகள் என்பவற்றை அறிந்து - உணர்ந்து, அவரது பிரச்சினையின் உண்மை நிலையை அவரையே அறியச்செய்து அவரையே தீர்வுக்கான உதவும் சேவையாக உளவளத் துணைச் சேவை அமைகின்றது.

உதவி நாடி வரும் மாணவர்களின் உளப்பிரச்சினைகளைத் தீர்ப்பதோடு உள வளத் துணைச் சேவை நின்றுவிடுவதில்லை. அதற்கு அப்பால் தேவை ஏற்படுகின்றபோது அவற்றினைச் சாதகமான முறையில் மாற்றியமைத்தல், குடும்பமாக வைத்து குடும்ப உளவளத்துணையை வழங்குதல், ஒத்த பிரச்சினையுள்ள துணைநாடி மாணவர்களைச் சேர்த்து குழுவாக உளவளத்துணைச் சேவை செய்தல் என்பவையும் முன்னுரிமை பெறுகின்றன.

## உளவளத்துணை ஆசிரிய வகிபங்குகள்

ஆசிரியர்கள் உளவளத்துணையாளராக செயலாற்ற முன்வரும்போது அவற்றிற்கான உரிய பயில்வுகளை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் "ஆசிரியர்கள் வாண்மை சாரா உள வளத்துணையாளர்" என்ற வகையில் மாணவர்களை அன்புடன் அணுகி பாதுகாப்பை வழங்கி, அவர்கள் எவ்வாறான சூழ்நிலைகளின் இருந்து வருகின்றார்கள், எத்தகைய உளப்பாதிப்புக்களுக்கு உள்ளாகி இருக்கின்றனர், அவற்றுக்குரிய காரணங்கள் எவை? அவற்றை இனங்காண்பது எவ்வாறு? தீர்வுகளை எவ்வாறு பெறலாம்? எவ்வாறான உதவிகளை வழங்கலாம் ஆகிய விடயங்களுக்குத் தீர்வுகளைப் பெற பின்வரும் வகிபாகங்களை ஆசிரியர்கள் பெற வேண்டும்.

- சிறந்த செவிமடுப்பாளர்
- நண்பர்
- வசதியளிப்பவர்
- வழிகாட்டுபவர்
- சிகிச்சையளிப்பவர்
- தலைமைத்துவம் வழங்குபவர்
- தகவல் வழங்குபவர்
- பிரதிநிதி
- கட்டுப்பாட்டாளர்
- முற்பாதுகாப்புடன் செயற்படுபவர்
- சமூக நிர்மாணி

இவ்வாறு பரந்த ஆசிரியத்துவத்துக்கே உரித்தான வகிபங்குகளை உளவளத்துணையாசிரியர் கொண்டிருப்பதுடன் இரகசியம் காப்பவராக, நேர்மையானவராக, மனிதத்துவம் பொதிந்த முதல்தர நல் மனிதராக, நம்பிக்கைக்குரியவராகச் செயலாற்ற வேண்டும். எனவே உள வளத்துணை என்பது தகவல் கொடுப்பதல்ல, புத்திமதி கூறுவதல்ல, துணை நாடி வருபவரை மதிப்பீடு செய்வதல்ல, நம்பிக்கைகளை மாற்றுவதல்ல, எச்சரிக்கை - பயமுறுத்தல் விடுவதல்ல, தன் உளச்சக்தி மூலம் துணை நாடியினுடைய உளச் சக்தியை பொருத்தமாக அசைப்பதன் மூலம் துணைநாடி தனது சக்திகளை இனம் கண்டு அவற்றைப் பயன்படுத்தி தன் பிரச்சினைகளைத் தீர்க்க துணை புரிதலே உளவளத் துணை ஆசிரியரின் முக்கிய பணியாகும். நாடிவரும் மாணவர்களின் உளச்சக்தி அசையச் செய்வதற்கு,

- உடனிருத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உற்றுக்கேட்டல்
- ஒத்துணர்வு
- துருவி ஆராய்தல்
- குவியப்படுத்தல்
- எதிர் கொள்ளல்
- பார்வை மாற்றம் செய்தல்
- இலக்கு நிர்ணயம் செய்தல்

ஆகிய நுண் திறன்களை மேற்கொள்ள வேண்டும். பிரயோக ரீதியில் இத்திறன்கள் ஒன்றன் பின் ஒன்றாக ஒழுங்கு முறை யில் வரவேண்டும் என்பதல்ல. உளவளத்துணையாசிரியர் உன்னத ஆளமைப் பண்புடையவர்களாகக் காணப்பட வேண்டும்.

**உளவளத்துணை ஆசிரிய வகிபங்குகள்**

ஒருவரது ஆற்றல்கள், நம்பிக்கைகள், தனித்தன்மைகள், மனப்பாங்குகள், சமூக ஒற்றுமைத்தன்மைகள், கொள்கைகள், பழக்கவழக்கங்கள், உணர்ச்சித் தூண்டல் பேறுகள், மனப்பாங்குகள் ஆகியவற்றுடன் அவற்றிடம் காணப்படும் சக்தி மட்டங்கள், எண்ணங்கள், கனவுகள் ஆகிய அனைத்தையும் அவரது ஆளுமை உள்ளடக்கியிருக்கும். எல்லா மனிதர்களுமே தமக்கெனப் பிரத்தியேகமாக ஆளுமைகளைக் கொண்டிருக்கிறார்கள். எனினும் தமது ஆற்றல்களை முழுமையாகத் தொழிற்படுத்துகின்ற நிலையில் மனிதர்கள் இருப்பது குறைவு. ஆனால் உன்னத ஆளுமையுடையோர் நேர் நிலையில் முழுமையாக தொழிற்படுகின்ற ஆளுமை உள்ள மனிதர்களாக இருப்பர்.

இவர்கள் மிகக்குறைந்த அளவிலேயே தீர்ப்பிடுவர். அல்லது தீர்ப்பிடாமலே விடயங்களை நோக்குவர். இவர்கள் விடயங்களில் இருந்து மனிதர்களைப் பிரித்துப் பார்க்கக் கூடியவர்களாகவே இருப்பர். தம்மிலுள்ள குறை நிறைகளை முழுமையாக விளங்கிக் கொள்வதுடன் அவற்றை ஒரே தளத்தில் நின்று மனந்திறந்து பேசக் கூடியவர்களாக இருப்பர். தமது சுயத்தில் நின்று மனந்திறந்து பேசக்கூடியவர்களாக இருப்பர். தமது சுயத்தின் இருண்ட பக்கங்களை அல்லது தமது ஆலோசனை நாடியின் இருண்ட பக்கங்களை பார்க்கக் கூடிய ஆற்றல் உடையவர்களாக இருப்பர். உன்னத ஆளுமையாளர்களின் ஆளுமைக் கூறுகள் முரண்பாடோ அல்லது பிளவோ இருப்பதில்லை. இவர்கள் தமது மறை எண்ணங்களை மற்றவர்கள் மீது புறத் தோற்றம் செய்ய மாட்டார்கள். அவர்களிடமிருந்து எப்போதும் நேரான எண்ணங்கள், உணர்வுகள், நடத்தைகளே வெளிப்படும். இதனால் உன்னத ஆளுமையாளர்களுக்கு அருகிலிருப்பவர்களும் மேலான ஒரு உணர்வை அனுபவிப்பார்கள்.

இவர்கள் மனிதத்துவத்தை நிறைவாக அனுபவிப்பார்கள். உலகம் முழுவதும் பரந்து காணப்படும் அன்பை அவர்களால் உணர்ந்து கொள்ள முடியும். இவர்கள் மகிழ்வு, இன்பம் ஆகியவற்றுடன் மட்டும் தம் வாழ்வைச் சுருக்கிக் கொள்ளாது தம் எதிரான உணர்வுகளையும் புரிந்து செயற்படுவர். ஏனையவர்களின் எதிர்மறையான செயற்பாடுகள் இவர்களை ஒருபோதும் பாதிக்காது. இவ் உன்னத ஆளுமையுடையோர் சரி - பிழை, நல்லது - கெட்டது எனத் தீர்ப்பிடுவதில் காலத்தைச் செலவு செய்யாது ஆக்க ரீதியாக என்ன செய்யலாம் என்பதிலேயே கவனம் செலுத்துவர். தமது குறைகளைத் தொடர்ந்து திருத்திக் கொண்டே இருப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது ஏனையவர்களின் குறைகளைத் தீர்க்க முன்னுதாரணமாக அமையும். தமது செயல்களுக்கு தாமே பொறுப்பேற்றுக்கொள்வர். தமது உள்ளத்தோடும் உடலோடும் உயிர்ப்பான தொடர்பு கொண்டிருப்பதால் தங்களைப் பற்றி யதார்த்தமான இலட்சியவாத விம்பங்களை வைத்திருப்ப தில்லை.

உன்னத ஆளுமைப்பண்புடையவர்களின் பண்புகளில் பாரம்பரியக் கூறுகளும் தாக்கம் செலுத்த முடியாது. மற்றவர்களைக் குறை கூறுவதை இவர்கள் தவிர்த்துக் கொள்வர். தமக்கு ஏற்படுகின்ற துன்பங்களையும், கஸ்டங்களையும் கூட எப்படிப் பயனுள்ளதாக மாற்றலாம் என்பதில் ஆர்வம் காட்டுவர். மற்றவர்களால் ஏற்படுத்தப்படுகின்ற புண்படுத்தல், உதாசீனம் செய்தல், பயன்படுத்தல் போன்ற வலைகளில் கட்டுப்பாட்டிலேயே இருக்கும். மேலும் இவர்கள் இன்னொருவர் போல் ஆக வேண்டும் என்ற விருப்பமின்றி தாம் தாமாகவே இருக்க விரும்புவர். இவர்கள் மற்றவர்களின் வளர்ச்சியிலும் சமூகத்தின் ஆரோக்கியத்திலும் அக்கறை கொண்டவர்களாக இருப்பர். இவ்வாறான பண்புகள் அனைத்தும் பாடசாலை ஆசிரியர்களுக்கு கிடைக்கும் போது அவர்கள் உளவளத்துணையாளர்கள் என்ற உயர்ந்த வகிபங்கைப் பிரயோகிப்பவராக செயலாற்ற முடியும். இதற்கான பயிற்சிகளையும், எதிர்காலவியல் நோக்கிய திட்டங்களையும், செயலாற்றுகைகளையும் விரைவாக எமது மண்ணில் ஏற்படுத்த வேண்டியுள்ளது. இதன் மூலமே கல்விப் பிரச்சினைகள் பலவற்றை நாம் தீர்த்துக் கொள்ள முடியும்.

**“கல்விக்கூடங்களிலும் வாழ்க்கையிலும் ஆற்றப்படும் பணியின் உள்ளார்ந்த நோக்கம் அதன் வழி உளப்பூரிப்படைதலும் ஆனந்தம் அனுபவித்தலும் மட்டுமன்றி அப்பணியின் பேற்றால் சமூகம் அடையும் உன்னத நன்மைகள் பற்றிய அறிவு பெறுதலாகும்.”**

-அல்பேட் ஐன்ஸ்ரைன்-

என்ற வகையில் எமது பாடசாலைகளில் மாணவர்களின் கற்றல் இடர்பாடுகள் கருத்தூன்றி மனிதத்துவ நோக்கில் கவனிக்கப்பட வேண்டும். மாணவர்களின் உடல் - உளப்பிரச்சினைகள் கல்விச் செயற்பாடுகளில் தடைகளையும், பின்னடைவுகளையும் ஏற்படுத்தும் அதே வேளை விரும்பத்தகாத செயற்பாடுகளால் மாணவர்களின் கல்வி எதிர்கால வாழ்வு பாதிப்படைகின்றது. எனவே கல்வியை வழங்கும் உயர் சமூக நிறுவனமான பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் அனைவரும் கல்வியின் விளைவாக மாணவர்கள் உச்சப்பயனை மகிழ்ச்சியான சூழலில் பெற தம்மை அர்ப்பணிக்க வேண்டும். இதற்கு ஆசிரியர்களின் நவீன வகிபங்குப் பரிமாணமான உளவளத் துணையாளன் என்ற உன்னத வகிபங்குச் செயன்முறை வழிகாட்டி நிற்கின்றது.

**கலாநிதி. பா. தனபாலன்**
**(உபபீடாதிபதி)**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்கவில்லையோ?

நாவு சுவைக்க - நான்
சமைத்து நிலவு காட்டி
அமுதூட்டி நான் - வளர்த்தெடுத்த
தங்கங்கள் அம்மா எங்கே - என்று கேட்கவில்லையோ?

சொந்த வீடும் இன்றி
சொந்தங்களும் இன்றி
முதியோர் இல்லமே சொர்க்கம்
என்று நிர்க்கதியாய் நாதியற்று - தவிக்கின்றேன்
என் செல்வங்கள் இப்போதும் அம்மா எங்கே
என்று கேட்கவில்லையோ?

பள்ளி விட்டு வந்ததும் - பாசத்தோடு
உணவு எங்கே என்று அடம் - பிடித்து
அழுது புலம்பும் என் செல்வங்கள்
இப்போதும் அம்மா எங்கே என்று
கேட்கவில்லையோ?

வாடைக்காற்று பட்டுவிடக் கூடாது என்றே
மூச்சுக் காற்றையே சுவாசமாக்கினேன்
உதிரத்தை உணவாக்கினேன்
கனவுகளை கடமையாக்கினேன்
அம்மா என்றழைத்த என் செல்வங்கள்
இப்போதும் அம்மா எங்கே - என்று
கேட்கவில்லையோ?

மார்போடு அணைத்துக் கொள்ள இதயம் - துடிக்குது
இறுதி மூச்சோ என் உயிரைக் கொல்லுது ஒரு
தடவையேனும் உங்கள் திருமுகம் காண
எண்ணம் தவிக்குது மூச்சு போகும் வேளையிலாவது
அம்மா என்ற குரல் கேட்டிடுமோ - என்று
என் உள்மனது கற்பனையில் மிதக்கிறதே?

**திருமதி சி. பரமேஸ்வரி**
**ஆசிரியர் (ஆரம்பக்கல்வி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்தி
# (Professional Development for Teachers)

## அறிமுகம்

அரசாங்க பாடசாலைகளில் ஆசிரியர்களின் எண்ணிக்கை கடந்த காலங்களில் கணிசமானளவு அதிகரித்தே வந்துள்ளது. இது 2005 இல் 21:1 ஆக இருந்த மாணவர் ஆசிரியர் வீதத்தை 2010இல் 18:1 ஆக விருத்தி செய்துள்ளது. எவ்வாறாயினும் கணிதம், விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம் போன்ற சிறப்புப் பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக் குறையானது தரமான கல்வியை மாணவர்களுக்கு வழங்குவதற்கு தொடர்ந்தும் தடையாக இருந்து வருகின்றது.

“இனிவரும் 3 வருடங்களில் அனைத்து ஆசிரியர்களும் நவீன கற்பித்தல் முறைகளுடன் பயிற்றுவிக்கப்படுவார்கள்” என அரசின் கல்விக் கொள்கையில் குறிப்பிடப்படுகின்றது. இது மாணவர்களுக்கிடையில் அவர்களினது பாட அறிவினை அதிகரிப்பதோடு திறன் விருத்திக்கும் இட்டுச் செல்லும். அதேவேளை பாடசாலையை மையப்படுத்திய ஆசிரியர் அபிவிருத்தியினைப் பலப்படுத்த வேண்டிய தேவையும் தற்காலத்தில் முனைப்புப் பெற்று வருகின்றது.

## இலங்கையின் ஆசிரியர் அபிவிருத்தி குறிக்கோள்கள்

| | 2009 | 2020 |
|---|---|---|
| ஆசிரியர்களின் எண்ணிக்கை | 215 916 | 225 000 |
| பட்டதாரிகள் ஆசிரியர்கள் | 74 531 | 125 000 |
| பயிற்றப்பட்ட பட்டதாரி அல்லாதவர்கள் | 134 213 | 100 000 |
| பயிற்றப்படாத பட்டதாரி அல்லாதவர்கள் | 11 083 | 0 |

## ஆசிரியர் அபிவிருத்திக்காக அரசு மேற்கொள்ளும் திட்டங்கள்

- ஆசிரியர்களின் பாடம் பற்றிய பரந்த அறிவு, ஆசிரியரியல் திறன், ஊக்கம் போன்றவற்றை விருத்தி செய்தல்.
- கல்வித் தேவைகளுக்கேற்றவாறு ஆசிரியர்களை நியமித்தலும் பயன்படுத்தலும் போன்றவற்றுக்கு வினைத்திறன் மிக்க கட்டத்தை ஸ்தாபித்தல்.
- ஆசிரியர்களுக்கு பயிற்சித் திட்டங்களை நடத்துதல்.
- பெருந்தோட்டப் பகுதிகளிலிருந்து பிரதான பாடங்களை தமிழ் மொழியில் பயிற்றக் கூடிய திறமையுள்ள 1000 இளைஞர் யுவதிகளை பயிற்றுவித்தல்.

## வாண்மை விருத்தி என்ற எண்ணக்கரு (Professional development)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஓர் ஆசிரியருக்குத் தேவையான அறிவு, திறன், நிபுணத்துவம் மற்றும் ஏனைய இயல்புகளை தனியாளிடத்தில் விருத்தி செய்யும் செயற்பாடுகள் வாண்மைவிருத்தி எனப்படும். இது பின்வரும் நான்கு வகைப்படும்.

- ✓ ஆரம்ப பயிற்சி (initial training)
- ✓ அறிமுக கற்கை நெறிகள் (induction courses)
- ✓ சேவைக்காலப் பயிற்சி (in service training)
- ✓ பாடசாலை கட்டமைப்பினுள் வழங்கப்படும் தொடருறு வாண்மை விருத்திச் செயற்பாடுகள் (continuous professional development in school settings)

## வாண்மை விருத்தி வகைகள் ( Type of Professional development)

- ➢ கற்கை நெறியின் பயிலஸ் மற்றும் வேலைப்பட்டறைகள் - கல்வி மாநாடுகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகளில் கலந்துகொள்ளல்.
- ➢ ஏனைய பாடசாலைகளை அவதானிப்பதற்காக / தரிசிப்பதற்காக விஜயம் செய்தல்.
- ➢ ஆசிரியர்கள் வலையமைப்பில் பங்குகொள்ளல். (participation in a network of teachers formed)
- ➢ வாண்மைரீதியாக ஆர்வமுள்ள தலைப்பில் தனியாள், மற்றும் கூட்டு ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல். (individual or collaborative research on a topic)
- ➢ ஆசிரியர்கள் தமது கற்பித்தலை, சக ஆசிரியர்களைக் கொண்டு அவதானிக்கச் செய்து குறைகளைக் களையவேண்டும். (mentoring and / or peer observation and coach)


## ஆசிரியர் வாண்மை விருத்தி மாதிரி
( Teracher Professional development Model)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர்களின் வாண்மைவிருத்தி உள்ளடக்கங்களும் வடிவங்களும்




கற்பித்தல் தொடர்பான அறிவு பின்வரும் விடயங்களை உள்ளடகியது.

❖ கற்பித்தலுக்கான பாடவிடய அறிவு.

❖ கற்பித்தலுக்கான விடய அறிவு பின்வரும் மூன்று கூறுகளை உள்ளடக்கியது.
  - செயற்பாடுகள் பற்றிய அறிவு
  - மாணவர்களின் முன்னறிவு
  - போதனை முறைகள் தொடர்பான அறிவு
  - விடயதானங்களின் தெரிவு பயனுள்ள முறையிலான முன்வைப்பு, ஒப்புமை, எடுத்துக் காட்டுங்கள், உதாரணங்கள், விளக்கங்கள், செய்து காட்டல்கள்.

## இலங்கையில் ஆசிரியர்களுக்கான வாண்மைவிருத்தியில் பங்களிப்புச் செய்யும் நிறுவனங்கள்

- பல்கலைக்கழகங்கள்

  1. கல்விப்பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்.
  2. கல்விப் பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.
  3. கல்வியல்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.
  4. கல்வியல்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்.
  5. கல்வியியல் அலகு, கிழக்குப் பல்கலைக்கழகம்.

- தேசிய கல்வி நிறுவகம் (N.I.E)
- ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் (Teacher training colleges)
- தேசிய கல்வியல் கல்லூரிகள் (National Collegs of Education)
- ஆசிரிய வள நிலையங்கள் (Teacher Centres)
- பாடசாலைகள் - உயர்கல்விச் செயற்பாடுகள். (Higher Order Process - HOP)
- ஆசிரியர்களுக்கான வெளிநாட்டுப் புலமைப்பரிசில்களை வழங்கும் நாடுகள்.

## ஆசிரியர் வாண்மைவிருத்தி கற்கைநெறிகள்

இலங்கையின் பின்வரும் ஆசிரிய வாண்மைவிருத்தி கற்கைநெறிகள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பட்டப்படிப்பின் கல்வி டிப்ளோமா (Postgraduate Diploma in Education)
  - Full time / Part time
  - Graduate & Teaching experience
  - Jaffna University / Colombo University / OUSL / Peradenia/ Eastern & NIE
- கல்விமாணி (Bachelor of Education - BEd )
  - NIE
  - Colombo University
  - Open University of Srilanka
  - கல்வி முதுமாணி
    (Master of Education), Mphil in Education, PhD in Education

## நவீன உலகில் ஆசிரியர்களின் ஏனைய தொழில்சார் தகைமைகள்

- கல்வித் தொழில்நுட்ப அறிவும் தகவல் தொழில்நுட்ப அறிவும்



- வழிகாட்டல் ஆலோசனை பற்றிய அறிவு



## ஆசிரியர்களின் சுயதேடல்கள் ஊடாக வாண்மைவிருத்தி

- கல்வியமைச்சின் SEMP திட்டத்தினூடாக "புத்தாக்கம்சார் கற்பித்தல்" , கற்றல் - கற்பித்தல் முறையியல்கள் பற்றிய ஆசிரியர் கைநூல் - ஆசிரியரின் வாண்மைவிருத்திக்கு பயனுள்ள நூல்களாகும்.

- அகவிழி, ஆசிரியதத்துவம் போன்ற சஞ்சிகைகள் மிகவும் பயனுடைய வாசிப்பு நூல்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பின்வரும் ஆசிரிய கல்வி நிறுவனங்களின் வெளியீடுகள் ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்கு மிகவும் பயனுடையவை.
  - யாழ்.பல்கலைக்கழக கல்வியியல் துறை - கலைஞானம்
  - கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை
  - யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி - கலாசுரபி
  - பாடசாலைகளின் ஆண்டுகள் வெளியீடுகள்
  - பத்திரிகைகளில் வெளிவரும் கல்வியியல் கட்டுரைகள்

    Sunday Observer
    Daily News
    தினகரன், வீரகேசரி, தினக்குரல், உதயன், வலம்புரி

## இலங்கையில் ஆசிரியரின் வாண்மைவிருத்திக்கு உதவக்கூடிய தகவல்களைக் கொண்ட இணையத் தளங்கள்

- தேசிய கல்வி ஆணைக்குழு (National Education Commission)
- தேசிய கல்வி நிறுவகம் (National Insttute of Education - NIE)
- கல்வி அமைச்சு (Ministry of Education)
- மாகாண கல்வி அமைச்சுக்கள் (Provincial Education Ministries)
- இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் (Department of Examination)
- கல்விப்பீடம், கொழும்பு பல்கலைக்கழகம் (Faculty of Education, University of Colombo)
- கல்விப்பீடம், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் (Faculty of Education, Open University of Srilanka.)
- School Net
- Intel Teach Program

## முடிவுரை

தற்கால மாறிவரும் உலகில் ஆசிரியர்கள் தொடர்ச்சியாக தமது வாண்மைத்திறனை வளர்த்துக்கொள்ள வேண்டும். அதேவேளை தமது மாணவர்களின் கற்றலுக்கு துணை செய்யக்கூடியதாக அதனை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். அல்லாவிடில் அவர்களின் வாண்மைவிருத்தியில் எதுவித நன்மையும் இல்லை.

ஆ.நித்திலவர்ணன்,
சிரேஸ்ட விரிவுரையாளர்,
கல்வியல்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்று நோய்கள்

தொன்று தொட்டே தொற்று நோய்கள் மனிதனுக்கு சவாலாக இருந்து வருகின்றன. தொற்று நோய்கள் கிருமிகளால் ஏற்படுவதை அறிவீர்கள். இக்கிருமிகள் கண்களுக்குத் தெரியாதவை. வைரஸ், பாக்ரீரியா, பங்கசு, பரசைட், பூஞ்சணம், புழுக்கள், பேன்கள் என பலவகைக் கிருமிகள் நோய்களை ஏற்படுத்துகின்றன. இவற்றில் வைரஸ், பாக்ரீரியா முதலான நுண்கிருமிகளே அதிகமான தொற்று நோய்களை ஏற்படுத்துகின்றன.

காலம் காலமாக சில தொற்று நோய்கள் அவ்வப்போது தோன்றி சடுதியாக பெருமளவில் உயிர்களைக் காவுகொண்ட வரலாறு உண்டு. பிளேக், அம்மை (small pox), கொலரா, எயிட்ஸ், காசநோய் என சில நோய்கள் குறிப்பிடத்தக்கவை. அத்துடன் போரில் விழுப்புண் அடைந்தவர்கள் கிருமித் தொற்றுக்கு உள்ளாகி பெரும் எண்ணிக்கையில் இறந்தனர். நுண்ணுயிர்களை அழிக்கும் உயிரி எதிரி (Antibiotics) கண்டு பிடிக்கப்படாத அந்தக் காலத்தில் பாரம்பரிய மருந்துகளிலேயே தங்கியிருக்க வேண்டிய நிலை இருந்தது. சக்திமிக்க பாரம்பரிய மருந்துகள் இருந்தபோதிலும் சீரான முகாமைத்துவம், மருத்துவ கல்வி என்பன இல்லாமையால் அவற்றால் முழுமையாக தொற்றுக்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதில் தடங்கல் இருந்தது. இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்கு கிட்டவாக முதல் முதலாக உயிரி எதிரி மருந்தான பென்சிலின் மருந்தை அலெக்சாண்டர் பிளமிங் கண்டு பிடித்தமையானது, மேற்கத்திய வைத்தியத்தில் ஒரு பெரும் திருப்பு முனையாக இருந்தது. இந்தியாவில் சில பூஞ்சண வகைகளை புண்களுக்கு வைத்துக்காட்டும் முறை இருந்ததாகவும், அதையொட்டிய ஆய்வின் நவீன விஞ்ஞான முறையில் ஆராய்ச்சி செய்தபோது பெனிசீலியம் என்ற பங்கஸ் குணப்படுத்தலுக்கான காரணமாக இருந்தது தெரியவந்தது. தொடர்ந்த ஆராய்ச்சியின்படி அது சுரக்கும் ஒரு பதார்த்தமே கிருமிகளை அழித்ததாகக் கண்டறிந்தார். அதற்கு பென்சிலின் எனப் பெயரிடப்பட்டது.

முதலாவது எதிரி (Antibiotics) மருந்தான பென்சிலினைத் தொடர்ந்து பல உயிரி எதிரி மருந்துகள் கண்டு பிடிக்கப்பட்டன. அத்துடன் நோய்களைக் குணமாக்குவதில் உடலின் நிர்பீடணத் தொகுதிக்கும் முக்கிய பங்கிருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. பல வைரஸ் நோய்கள், நோயாளியின் நோயெதிர்ப்பு சக்தியினாலேயே குணமாவது தெரிய வந்தது.

தொற்று நோய்களைப் பொறுத்த வரை சாதாரண தடிமன், காய்ச்சல் தொடக்கம் கடுமையான நோய் நிலையைத் ஏற்படுத்தும், தொற்றுக்களான நிமோனியா , நெருப்புக்காய்ச்சல் என பல தொற்று நோய்கள் ஏற்படுகின்றன. பல வைரஸ் தொற்றுக்களுக்கு நேரடியான மருந்துகள் இல்லை. உடலின் போஷாக்கைப் பேணுவதன் மூலம் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரித்து நோய் குணமாக்கப்படுகின்றது. அண்மைக் காலம் வரையில் வைரஸ் கிருமிகளை அழிக்கும் மருந்துகள் கண்டுபிடிக்கப்படாமலிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது சில வைரஸ்களின் வளர்ச்சியையும் பெருக்கத்தையும் கட்டுப்படுத்தும் மருந்து அறிமுகமாகியுள்ளது. பெரும்பாலான வைரஸ் நோய்களுக்கு எதிரான தடுப்பு ஊசிளும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. எனினும் சில வைரஸ் நோய்கள் இன்றும் சவாலாகவே உள்ளன.

பாக்ரீரியா நோய்கள் பலவற்றிற்கும் மருந்துகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. எனினும் இம்மருந்துகளின் தவறான பாவனையால் இவை காலக்கிரமத்தில் செயலிழந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சூழல் மாசினாலும் காலநிலை மாற்றத்தினாலும் புதுப்புது நோய்க் கிருமிகள் உருவாக புதிய நோய்களும் உருவாகின்றன. நோய்கிருமிகளை போராயுதமாக தெரிவிக்கப்படுகின்றன.

தொற்று நோய்களில் சில குறுகிய கால தொற்றுக்களாக உள்ளன. இவற்றில் சில தீவிரமான நிலைகளை ஏற்படுத்தி சடுதியான மரணங்களையும் ஏற்படுத்துவதுண்டு. நிமோனியா, மூளைக்காய்ச்சல், டெங்கு, மூளை மலேரியா, கொலரா உள்ளிட்ட சில நோய்களை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

இன்னும் சில நோய்கள் நீண்ட காலத் தொற்றுக்களாக இருந்து படிப்படியாக உக்கிரமாகி தீவிரமடைந்து உயிராபத்தை ஏற்படுத்துகின்றன. இதற்கு உதாரணமாக காசநோய், எயிட்ஸ் முதலானவற்றைக் குறிப்பிடலாம்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். எனவே நோய்களை வருமுன் தடுப்பதே, சிறந்த முறையாகும். எமது உடலையும், வருமுன் தடுப்பதே, சிறந்த முறையகும். எமது உடலையும், வீட்டையும், சூழலையும் எப்பொழுதும் துப்பரவாக வைத்திருக்க வேண்டும். கிருமிகள் உருவாவதற்கும் பரவுவதற்கும், காவிகளின் பெருக்கத்திற்கும் இடமளிக்கக்கூடாது உணவு, நீர் என்பவற்றைச் சுத்தமாக உட்கொள்ள வேண்டும். நோய் எதிர்ப்புச் சக்தி உருவாவதற்கு ஏற்றவாறு சமபலமான உணவுகளை உண்ண வேண்டும். சுகாதாரத்தைச் சீராக பேணுவோம். நலமுடன் வாழ்வோம்.

## தொற்று நோய்கள் பரவும் முறைகள்

### 1. குத வாய் வழி தொற்று

மலத்துடன் வெளியேறும் கிருமிகள் ஏதோ ஒரு வகையில் வாயினூடாக இன்னொருவரை அடைகிறது. நீர், உணவு என்பன பிரதான வழிகள் பால் முதலான பானங்கள் ஊடாகவும் தொற்று ஏற்படலாம். எப்போதும் தூய நீரையும், சுத்தமான உணவையுமே உட்கொள்ள வேண்டும். கொதித்து ஆற வைத்துப் பருகும் நீர் பாதுகாப்பானவை. உணவை எப்பொழுதும் மூடிவைத்து அல்லது குளிர்சாதனப்பெட் டியில் வைத்துப் பாதுகாத்து மறுபடி சூடாக்கி உண்ணலாம். ஈ, கரப்பான் பூச்சி முதலானவை உணவில் கிருமிகளைத் தொற்ற வைக்கும். உதாரணம் வயிற்றோட்டம், செங்கண் மாரி, தைபோயிட், கொலரா.

### 2. காவிகளினால் ஏற்படும் நோய்

ஈ, இலையான், கரப்பான் பூச்சி முதலியன நோய்களை உணவை காவினாலும் நேரடியாக மனிதரில் தொற்றை ஏற்படுத்துவதில்லை. ஆனால் நுளம்பு, கொசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலானவை நேரடியாக நோய்க் கிருமி களைக் காவிக் கொண்டு வந்து மனித உடலின் இரத்தத்தோடு கலக்க வைக்கின் றது.
உதாரணம் : மலேரியா, டெங்கு, சிக்குன் கூனியா. யானைக்கால்

### 3. தொடுகை

சிலநோய்கள் தொடுகை மூலம் தொற்றக் கூடியன. நோயாளி ஒருவரைத் தொடுவதன் மூலம் கிருமிகள், சுகதேசியைத் தொற்றலாம். புண்களின் ஊடாகவும் தொற்று ஏற்படலாம். உதாரணம் : ஏர்ப்புவலி, தோல் தொற்றுக்கள்

### 4. காற்று

காற்று மூலம் பல சுவாச நோய்கள் பரவுகின்றன. தும்மும் போதும், இருமும் போதும் வெளியேறும் துகள்கள் மூலம் நோய் பரவலாம். (தடிமன், இன்புழுவன்சா, சுவாசத் தொற்றுக்கள்)

### 5. பாலுறவு

சில கிருமிகள் பாலுறவு மூலம் பரவ கூடியன சுகதேகி ஒருவர் நோய்க்கிருமி களைக் கொண்டுள்ள ஒருவருடன் பாலு றவை வைத்துக் கொள்வதால் நோய் ஏற்பட லாம். பால்வினை நோய்கள், செங்கண்மாரி, எயிட்ஸ்.

உடலில் பல கிருமிகள் தொடர்ச்சி யாக இருப்பினும் அவை நோயை ஏற்படுத் துவதில்லை. எனினும் ஒருவர் பலவீன மடைந்து உடலின் நோயெதிர்ப்புத் தன்மை குறையும் போது இக்கிருமிகள் நோயை ஏற்படுத்துவதுண்டு.

## உடலின் நோயெதிர்ப்புச் சக்தி

குருதியில் நோயெதிர்ப்புக் கலங் களும், நோயெதிர்ப்பு Antibodyகளும் நோய் ஏற்படுவதைத் தடுக்கும் சக்திகளாகும். வெண்குருதிக் கலங்கள் நோயெதிர்ப்பு கலங் களாக தொழிற்பட்டு உடலுள் நுழையும் தொற்றுக்களை உடனே அழிக்கின்றன. நோய்க் கிருமிகள் உடலின் நோயெதிர்ப்பு நிர்ப்பீடணத் தொகுதியைத் தோற்கடித்து பெருகும்போதே தொற்றுநோய்கள் ஏற்படு கின்றன.

உடலின் இயல்பான நேயெதிர்ப் புக்கு மேலாக செயற்கையான சக்தி களைக் குறிப்பிட்ட நோய்களுக்கு எதி ராக ஏற்படுத்தி பல்வேறு ஆபத்தான நோய்களைக் கட்டுப்படுத்த மருத்துவ விஞ்ஞான உலகம் வெற்றி கண்டுள்ளன. தடுப்பு மருந்துகளை வழங்குவதன் மூலம் பல்வேறு ஆபத்தான தொற்று நோய் களுக்கு எதிரான நோயெதிர்ப்புத் தன்மை யை இவை ஏற்படுத்துகின்றன. இவை பெரும்பாலும் Vaccine ஊசி மருந்து களாகவும், வாயால் எடுக்கும் துளி மருந்து களாகவும் வழங்கப்படுகின்றன.

ஒரு குழந்தை பிறந்ததும் அதனை தாக்கக் கூடிய பல்வேறு கொடிய நோய் களுக்கு எதிரான தடுப்பு ஊசிகளை குறிப் பிட்ட காலங்களில் (வயதில்) ஏற்றுவதன் மூலம் பல நோய்கள் தடுக்கப்படுகின்றன. பிறந்த 48 மணித்தியாலத்தில் காசநோய்க் கான BCG தடுப்பூசி வழங்குவதன் மூலம் மூளையில் ஏற்படும் காசநோய் மூளைக் கவசக் காய்ச்சலுக்கு எதிரான நிலையை குழந்தையின் குருதியில் ஏற்படுத்தப்படு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. இதைத் தொடர்ந்து சிறுவர்/ குழந்தை அட்டவணையில் குறிப்பிட்டபடி தடுப்பு மருந்துகள் உரிய காலத்தில் வழங்கப்படுகின்றது. ஏற்பு வலி, குக்கல், தொண்டைக் கரப்பான் முதலான நோய்களைத் தடுக்க மூவூசி (Triple Vaccine) உதவுகின்றது. இவ்வாறே ஹெப்பற்ரைற்றிஸ் (Hepatitis), சின்னமுத்து (Measles), கூகைக்கட்டு (Mumps), ரூபெல்லா (Rubella), போலியோ முதலான தொற்றுக்களுக்கு எதிரான தடுப்பூசிகளுக்கும் வழங்கப்படுகின்றன. புதிதாக HPV தடுப்பூசி வழங்கப்படுகின்றது. இவ் அட்டவணைக்கு மேலாக இன்புளுவன்சா, கொப்பிளிப்பான், தைபோயிட் உள்ளிட்ட பல்வேறு தொற்று நோய்கள் ஏற்படாமல் நோய் பரவும் காலங்களில் தடுப்பு ஊசி போடுவதன் மூலம் நோய் ஏற்படுவதைத் தடுக்க முடியும்.

**Dr. முருகானந்தம்**
**வைத்தியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பு வேண்டும்

சிட்டுப் பருவத்திலே சிறகடிக்க
ஒரு நட்பு வேண்டும்
குழந்தைப் பருவத்திலே குதூகலிக்க
ஒரு நட்பு வேண்டும்
பள்ளிப் பருவத்திலே பாடி மகிழ
ஒரு நட்பு வேண்டும்
மங்கைப் பருவத்திலே மனம் மகிழ
ஒரு நட்பு வேண்டும்
தாய்மைப் பருவத்திலே தாங்க
ஒரு நட்பு வேண்டும்
வயதான பருவத்திலே அனுபவங்களைப் பகிர
ஒரு நட்பு வேண்டும்

தேவையின் போது தோளில் சாய
ஒரு நட்பு வேண்டும்
கஷ்டத்தின் போது கண்ணீர் துடைக்க
ஒரு நட்பு வேண்டும்
ஆபத்தின் போது உதவ
ஒரு நட்பு வேண்டும்
முயற்சிக்கும்போது ஊக்குவிக்க
ஒரு நட்பு வேண்டும்
அழும்போது எமக்காய் அழ
ஒரு நட்பு வேண்டும்
சிரிக்கும்போது நமக்காய் சிரிக்க
ஒரு நட்பு வேண்டும்

நட்புகள் ஆயிரம் இருந்தாலும் நட்பின் தேவை குறைவதில்லை
என் உயிர் உடலோட உறவாட, நானாக நானிருக்க நட்பே
நீ எனக்கு நட்பாக வேண்டும்! நட்பு வாழ்க!

த. மெடோனா
தரம் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பங்குச் சந்தையின் வளர்ச்சி

வரலாற்று ரீதியில் இலங்கையில் பங்குக் கொடுக்கல் வாங்கல்கள் 1896ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதாகக் கருதப் படுகிறது. இதனடிப்படையில் இலங்கையின் பங்கு கொடுக்கல் வாங்கல்கள் ஆரம்பித்து 112 வருடங்கள் கடந்துவிட்டன. இந்த நீண்ட வரலாற்றில் கொழும்பு பங்குச் சந்தை ஆனது பலவிதமான மாற்றங்களுக்கு முகம் கொடுத் துள்ளது. இலங்கையின் நடைமுறையில் உள்ள சந்தையானது பல விதமான மாற்றங் களையும் கண்டுள்ளது. இலங்கையில் நடைமுறையிலுள்ள சந்தையானது 1985ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இதற்கமைய 2008ம் ஆண்டளவில் நவீன பங்குச் சந்தை யின் வரலாறு ஆனது 23 வருட காலப்பகுதி யாகும்.

பங்குச் சந்தையின் வரலாற்றில் இடம்பெற்ற பிரதான மற்றும் முக்கிய நிகழ்வுகள் தொடர்பான குறிப்புக்கள் இங்கு முன்வைக்கப்பட்டுள்ளன. இலங்கையில் 1896ஆம் ஆண்டு பங்குச் சந்தை ஆரம்பிப் பதற்கான முக்கிய காரணம், அச்சமயத்தில் பிரசித்திபெற்று விளங்கிய தேயிலை பயிர்ச் செய்கைக்கு அவசியமான மூலதனத்தைப் பெற்றுக் கொள்ளும் தேவைப்பாடாகும். 1820 முதல் 1896 வரை இலங்கையின் முக்கிய பயிராக கோப்பி பயிர்ச் செய்கை காணப் பட்டது. எனினும், 1868 இலிருந்து கோப்பி இலைகளுக்கு ஏற்பட்ட கொடிய நோய் காரணமாக இலங்கையில் கோப்பி பயிர்ச் செய்கை முற்றாக அழிந்து போனது. இச்சமயத்தில் 1867ல் இலங்கையின் முதன்முதலாக தேயிலை பயிரிடுதல் ஆரம்பிக்கப்பட்ட வேளை பிரித்தானிய தேசத்து வியாபார முயற்சியாளர்கள் கோப்பிக்குப் பதிலாக தேயிலை பயிரடத் தீர்மானித்தனர். இவ்வாறு பல முன்னேற்றங் களுடன் பரிணாம வளர்ச்சி பெற்றது. பிரித் தானிய வியாபாரிகள்தனது சொந்த இலா பத்தை தனது தாய நாட்டிற்கு அனுப்பியதும் அவர்களது செல்வங்கள் இலங்கையில் வைக்கப்பட்டமையினாலும் தேயிலைப் பயிர்ச் செய்கைக்கு பயன்படுத்துமளவிற்கு மேலதிகமான நிதி காணப்படவில்லை. இதன் காரணமாக பயிர்ச் செய்கையாளர்கள் தமது தோட்டங்களை பவுன் கம்பனிகளாக (sterling companies) மாற்றி அவற்றை பொதுக் கம்பனிகளாக லண்டனிலும் கொழும்பிம் பதிவு செய்து பொதுமக்களுக்கு சாதாரண பங்குகள் முன்னுரிமைப் பங்குகள் போன்றவற்றை மக்களிடம் வழங்கி மூல தனங்கள் திரட்டினர். இக்கம்பனியின் பங்குகளை பரிமாற்றம் செய்யும் இரண்டாம் தரவுச் சந்தையாக 1896ல் பங்குத் தரகர் சங்கம் (Stock Broker's Association) அல்லது (SBA) ஆரம்பிக்கப்பட்டது. 1904ம் ஆண்டு இதன் அங்கத்தவர்களினால் பங்குத் தரகர் சங்கம் கலைக்கப்பட்டு கொழும்பு தரகர் சங்கம் (Colombo Broker's Association) அல்லது (CBA) உருவாக்கப்பட்டது. இவ்வாறு பல பரிணாம வளர்ச்சியைக் கண்டுள்ளது.

**அ.பிறையழகன்**
**தரம் – II**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகியற் கலைகளும் மானிட சமூகமும்

மனித சமுதாயத்தின் வளர்ச்சியை நோக்கும்போது அழகியற்துறைக்கும் பெரும் பங்கு உண்டு. எந்தவொரு இனத்தின் பண்பாடும் அவரவர் தம் மொழியை மையப்படுத்தியதாகவே அமைகின்றன. அந்தவகையில் பண்டைய காலத்தில் தமிழிலே தோன்றிய கலைகளும் தமிழர்தம் வாழ்க்கை முறை, பண்பாடு, கலைமரபு, அழகியல் இரசனை ஆகியன பற்றிக் கூறுவனவாகவே அமைந்துள்ளது.

மனிதன் தன்னைச் சூழவுள்ள அழகினைப் புரிந்து கொள்ளல் என்னும் அர்த்தத்தில் Aestheties எனும் பதம் ஆரம்பத்தில் பயன்படுத்தப்பட்டது இச்சொல் "Aesthesis" என்ற கிரேக்கச் சொல்லினடியாக தோன்றியது. "புலனுணர்திறன்" என்ற அர்த்தத்தில் கருதப்படுகின்றது. புலன் அறிவு வழியாக பெறப்படும் அனுபவங்களின் வாயிலாக வரும் அழகியலறிவு என்று கூறலாம். இதுவே காலப்போக்கில் அழகு, சுவை, கலை அனுபவம் பற்றிய முறையியலுக்குட்பட்ட கொள்கைகளை விளக்கும் ஒரு கற்கை நெறியாக கொள்ளப்பட்டது. எனவே அழகியல் என்பது கலை, அழகு பற்றிய புலமை வழி ஆய்வின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட கொள்கைகளை மையமாகக் கொண்டது. கலையில் இருந்து கலையல்லாதவற்றை வேறுபடுத்தவும், பார்க்கவும் நுண்கலை, கைவினைக்கலை என்பவற்றிக்கிடையே உள்ள வேறுபாட்டினை அறிந்து கொள்ளவும் சுருக்கமாக கூறுவதாயின் கலை, அழகு ஆகியவற்றிற்கும் பொருத்த மான வரை இலக்கணத்திற்குரியதோர் துறை என்றே கூறவேண்டும்.

அழகியல் கலையானது வடிவமைப்புடன் தொடர்புபட்டது. மானிட வரலாற்றின் நோக்கில் பார்க்கும்போது சமூக மறுமலர்ச்சிக்காகவும் மேம்பாட்டிற்காகவும் மனிதன் தனது உள, உணர்வுத் தேவைகளுக்கான ஆடல், பாடல், கூத்து, கவிதை போன்றன அழகியற் கலைகளையும் ஆக்கிக்கொண்டான். இவை அப்போதைய சமுதாய அமைப்பின் நிலை நிறுத்துவதற்கான பண்பாட்டு கலைகளாகவே விளங்கின. எமது உள்ளுணர்விலிருந்து பண்டைய பண்பாடுகளை வாழவைத்துக் கொண்டிருக்கின்றன. மனித குலத்திற்கு தேவையான அறிவு யாவும் கலை களாகவே கருதப்படுகின்றது. கற்றல் என்பது வெறும் புத்தக கல்வி மட்டுமன்றி கண்களால் பார்த்து மனதால் உணர்ந்து செய்யப்படும் ஒரு கலையாகும்.

இன்றைய சமூகத்தில் அழகியல் துறைக்குள்ள மகத்துவம் என்ன என்பதை நோக்கும் போது இத்துறையானது மாணவர், பெற்றோர், ஆசிரியர், கல்வி நிர்வாகிகள் மத்தியில் முக்கியத்துவம் குறைந்த நிலையில் காணுப்படுகின்றது. மாணவர்கள் தம் கற்கை நெறியை தேர்ந்தெடுக்கும் போது அழகியல் துறை புறந்தள்ளப்படுவதை காண்கின்றோம். இவ்வாறான நிலமைகளில் இருந்து விடுபட்டு அழகியல் துறையினூடாக வாழ்வியலை மேற்கொள்வதே சிறந்தது.

திரு. செ. செவ்வேள்
ஆசிரியர் (சித்திரம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2017ம் ஆண்டு பரிசளிப்பு விழா மற்றும் பாடசாலை அபிவிருத்திக்கும் மனமுவந்து நிதியுதவி வழங்கியோர்

1. அருட்தந்தை பிலிப்
2. கஜமுகன் ரேடர்ஸ்
3. சண்முகநாதன் - ஸ்கந்தபுரம்
4. பா. இராஜசிங்கம் - வன்னேரிக்குளம்
5. கி. யேசு இரட்ணம்
6. இ. சுதன் - அவுஸ்திரேலியா
7. வி. விஜயசிறி - வன்னேரிக்குளம்
8. Dr. சகாயமேரி வெலிச்சோர் - ஆனை விழுந்தான் குளம்
9. பனை தென்னை அபிவிருத்தி சங்கம் - கிளிநொச்சி
10. அறக்கட்டளை - சத்தியமூர்த்தி
11. கொமர்ஷயல் வங்கி - கிளிநொச்சி
12. துளிர் நிறுவனம் - பரந்தன்
13. உதவும் உறவுகள்
14 Selvi sister Hope Srilanka
15. ஆறுதல் நிறுவனம்
16. அபான்ஸ் நிறுவனம்
17. லிங்கநாதன் புடவையகம்
18. இலங்கை வங்கி - கிளிநொச்சி
19. நொட்டாரிக் கிளப் - கிளிநொச்சி

# பரிசுப் பொருள் வழங்கியோர் 2017

1. Rev. யேசுவா திருத்தந்தை - காவேரி கலா மன்றம் கிளிநொச்சி
2. ரவி பான்சி - கிளிநொச்சி
3. சுகி ஐஸ்கிறீம் - கிளிநொச்சி
4. சிவரூபன் ISA
5. கியூடெக் நிறுவனம்
6. விசேட தேவைகளுக்குட்பட்டோர் வலையமைப்பு - கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாயவன் களஞ்சியம்

(இரத்தினம் ஸ்ரோர்ஸ்)





சந்தை உட்புறம், பொதுச்சந்தை
கிளிநொச்சி
T.P : 077 468 4763

## செந்தூரன் உணவகம்

உரிமையாளர் : சி. நடேசபிள்ளை (ஆரூரன்)






ஐயனார்புரம், வன்னேரிக்குளம்
T.P : 077 662 3139

## எழில் அழககம்

உரிமையாளர் : யோ. சசிக்குமார் (சசி)









பாடசாலை முன்பாக, ஐயனார்புரம்
T.P : 077 467 4040

## விதுசாந் பல்பொருள் வாணிபம்

உரிமையாளர் சுதர்சன்









ஐயனார்புரம்
T.P : 077 696 0829



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துஷாந்தன் சவுன்ஸ்
(ஒலி, ஒளி அமைப்பு)





ஐயனார்புரம், வன்னேரிக்குளம்
T.P : 077 419 2217

## இம்மானுவேல் பல்பொருள் வாணிபம்
உரிமையாளர் : R. யூட்





ஐயனார்புரம்
T.P : 077 690 829

## லக்ஷ்மி புடவையகம்
உரிமையாளர் : அசோக்



அனைத்து வகையான
ஆடைகளையும்
ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ளலாம்.






இல. 30, சந்தை உட்புறம்
கிளிநொச்சி
T.P : 077 312 9936

## பூந்தோட்டம் அழகுமாடம்
உரிமையாளர் : P. சந்திரன்

சகல விதமான
அழகுசாதனப் பொருட்கள்,
பரிசுப்பொருட்கள்
அனைத்தையும்
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்









இல. 80, சந்தை உட்புறம்,
கிளிநொச்சி
T.P : 077 789 5435



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JP TECHNOLOGIES

**கணனித்துறையின் முன்னோடிகள்**

**புதிய கணனிகள் விற்பனை**





புதிய மடிக்கணனிகள் விற்பனை

**பாதுகாப்பு கமெராக்கள் விற்பனை**





கணனி உதிரிப்பாகங்கள், பிறிண்டர்கள் மற்றும் ரோனர்கள் விற்பனை.

கணனிகள், மடிக்கணனிகள் மற்றும் பிறிண்டர்கள் திருத்துதல்.

கணனி வலையமைப்புக்கள் அமைத்தல் Finger Print Machine, CCTV Camera பொருத்துதல் என்பன உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்.

077 333 0132
021 228 5684
021 228 6592

இல. 70/1 கனகபுரம் வீதி,
கிளிநொச்சி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நனிகமழ்
நமதுயிர் பள்ளியின்
புகழ்தரும் இதழ்

விதைகளின் வரிகள்
விருட்சங்களின் நிழலில்
விரிந்தெழும் பறவைகள்

எம் மாணவர்கள்
எம் மண்ணின்
புகழ் பரப்பும் வற்றா
ஊற்றுக்கள்

இனி
முன்னோக்கி பாயும்....



SRI MARUTHI PRINTERS ஸ்ரீ மாருதி பிறின்டேர்ஸ்
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org